Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

அதிக பக்கங்களுடன் ...

- தமிழீழப் போராட்டத்தில் கிட்டு - பக். 07
- ஒலிம்பிக் தெரிந்ததும் தெரியாததும் - பக். 08
- பிரெஞ்சு நாயகனான உலக நாயகன் - பக். 11

விலை : ரூபா 20.00

செய்தி - 48 ஒகஸ்ட் 27-செப். 02, 2016 பக்கம் - 24

# வடபகுதி அபிவிருத்திக்கு ரூபா 6 ஆயிரம் கோடி முதலீடு



(யாழ்ப்பாணம்)

வட பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 6 ஆயிரம் கோடி முதலீடு செய்ய முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர்.

கடந்த 22 ஆம் திகதி வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தலைமையில் யாழ். மாவட்ட அதிபர் காரியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் கருத்துக் களத்தின் மூலம் இது சாத்தியமானது.

02 இல்

# சீமெந்து தொழிசாலைக்கு சொந்தமான 216 ஏக்கர் நிலம் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் காங்கேசன்துறையில் மூடப்பட்டுள்ள சீமெந்து தொழிற்சாலைக்கு சொந்தமான நிலத்தை வலிகாமத்தில் போரினால் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த மக்களுக்கு 216 ஏக்கர் நிலத்தில் வீடு கட்டுவதற்காக விடுவிப்பது என முடிவு செய்துள்ளது.


ஏற்கனவே காங்கேசன்துறையில் மூடப்பட்டுள்ள சீமெந்து தொழிற்சாலைக்கு சொந்தமான 65 ஹெக்ரேயர் நிலத்தை அதாவது 161 ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டு வீடு கட்டும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.



யாழ் மாவட்டத்தில் உள்ள இராணுவத்தினர் இங்கே 100 வீடுகள் கட்டும் வேலையில் ஈடுபட்டுள்ளார்கள். விடுவிக்கப்பட்டுள்ள இக் காணியில் 130 வீடுகள் கட்ட முடியும்.

02 இல்

# தமிழர்களை கபளீகரம் செய்ய நினைக்கும் முஸ்லிம் தலைவர்கள்



(கொழும்பு)

2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர் முஸ்லிம் அரசியல்வாதிகளின் கை மேலோங்கி வருகின்றது. குறிப்பாக 2015 ஜனவரி 08 ஆம் திகதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்களின் கை மேலோங்கி வருகின்றமையைக் காணக் கூடியதாக உள்ளது.

02 இல்

## இலங்கை வருகிறார் புவியழகி ஏஞ்சலியா ஓங் (Angelia Ong)



(கொழும்பு)

பிலிப்பைன்ஸ் நாட்டு பேரழகி ஏஞ்சலியா ஓங் 2015 ஆம் ஆண்டு புவியழகி (மிஸ் ஏர்த்) வெற்றி பெற்றவர். இவர் தெரண ரி.வி. நிறுவன அழைப்பின் பெயரில் இலங்கை வருகிறார்.

02 இல்

## அரசுக்கு களங்கத்தை ஏற்படுத்தும் புத்தர்சிலை நிர்மாணிப்புகள்




(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பௌத்த சிலைகள், பொளத்த கோயில்கள் கட்டுவதனால் எந்த பிரயோசனமும் இல்லை.

02 இல்

## கொண்டோடிச் சுப்பர்



# தினச்செய்தி
வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

தொலைபேசி : 021 2242636
தொலைநகல் : 021 2242139
இணையதளம் : www.thinacheithi.com/lk


## சம்பந்தரும் தமிழ் அரசியல் கைதிகளும்

சிறைச்சாலைகளில் நீண்டகாலமாக தடுப்பு காவலில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை இந்த அரசாங்கம் விடுதலை செய்ய தாமதம் காட்டி வருகின்றது என எதிர்கட்சித் தலைவரும், தமிழ் தேசிய கூட்டணியின் தலைவருமான இரா. சம்பந்தன் அண்மையில் நாடாளுமன்றத்தில் கண்டனம் தெரிவித்தார்.

அவர் நாடாளுமன்றத்தில் இது சம்பந்தமாக பேசுகின்ற பொழுது, மைத்திரிபால சிறிசேனா தலமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் இது வரை ஒழுங்கான முறையில் நடக்கவில்லை என்று குற்றம் சுமத்தினார். ஆனால் சென்ற அரசாங்கத்தில் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ தடுப்பு காவலில் இருந்த 11 ஆயிரம் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்கி விடுதலை செய்தார் என்று தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் 18 மாத காலம் ஆகியும் இது வரையும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவில்லை. நாங்கள் எதிர் பார்க்கின்ற மாதிரி அவர்கள் சுறுசுறுப்பாக இயங்கவில்லை என்று நாடாளுமன்றத்தில் பேசுகின்ற போது சம்பந்தன் குறிப்பிட்டார்.

எதிர்க் கட்சித்தலைவர் இரா. சம்பந்தன் முதன் முறையாக சிறிசேனா அரசாங்கத்தைக் கண்டித்துள்ளார். ஆனால் சிறி சேனா அரசாங்கத்தை தமிழருக்கு சார்பான அரசாங்கம் என குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது.

மேலும் அவர் பேசுகையில் ஜக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மன்றத்தில் பயங்கரவாத தடைச்சட்டம் சட்டத் திற்கு விரோதமானது என ஏற்றுக்கொண்டு அந்தச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டார்.

டிசம்பர் 2015 ஆம் ஆண்டு எந்தவித குற்றச்சாட்டும் இல்லாது தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட 39 தமிழ் அரசியல் கைதிகளை பிணையில் விட்டார்கள். ஆனால் இன்றும் 250 மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தடுப்புக் காவலில் உள்ளார்கள். இதில் 117 பேருக்கு எதிராக அரசு குற்றம் சுமத்தி விசேட உயர் நீதி மன்றத்தில் சமர்ப்பித்து அவர்களது வழக்கை துரிதப்படுத்த முன்வந்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக எந்தவிதமான குற்றச்சாட்டுக்களும் இல்லாத போதிலும் அவர்கள் விடுதலை செய்யப்படாமல் இருப்பது வேதனைக்குரியது. இது ஒவ்வொரு தமிழ் அரசியல் கைதிகளுக்கும் மன உளைச்சலை உரு வாக்கும் ஒரு விடயம் ஆகும். இதனால் தான் அவர்கள் உண்ணாவிரத நோன்பு இருந்தார்கள் என்று திரு. இரா. சம்பந்தன் நாடாளுமன்றத்தில் பேசும் போது சுட்டிக் காட்டினார்.

ஜக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மன்றத்தில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பேசுகின்ற பொழுது பயங்கரவாத தடைச் சட்டம் 1979 ஆம் ஆண்டு அமு லுக்கு வந்தது. அந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு வது தொடர்பாகவும் புதிய பயங்கரவாத தடை சட்டத்தை உருவாக் குவது சம்பந்தமாகவும் ஒரு குழு ஒன்று இறுதி வடிவம் வரை கின்றது என்று குறிப்பிட்டார் என்று சம்பந்தன் தெரிவித்தார்.

சம்பந்தன் பேசுகின்ற பொழுது, வெளிவிவகார அமைச்சர் ஜநா சபையின் மனித உரிமைகள் மன்றத்தில் பேசுகின்ற பொழுது பயங்கரவாத சட்டம் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளான சட்டம் என்றும் அந்த சட்டத்தை தவறான முறையில் கையாண்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டார்.

இந்த சட்டத்திற்கு கீழ் எவ்வாறு ஒருவரைத் தடுப்புக் காவலில் வைக்க முடியும்? இந்த பயங்கரவாத சட்டம் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

மேலும் சம்பந்தன் பேசுகின்ற பொழுது கே.பி. என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் மீது எந்த வித குற்றச் சாட்டுகளும் பதியப்படவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச ஆயுத கொள்வனவில் ஈடுபட்டு இருந்தவர் ராஜபக் அரசாங்கத்தின் செல்லப் பிள்ளையாக இருந்தவர். பின்பு வந்த அரசாங்கத்திலும் கே.பி. செல்லப்பிள்ளையாக இருந்து வருகிறார். என்று திரு. இரா. சம்பந்தன் கூறினார்.

திரு. இரா. சம்பந்தன் தமிழ் அரசியல் கைதிகளை விடு தலை செய்ய வேண்டும் என்று எடுத்துக்கூறிய விடயம் பாராட் டத்தக்கது. இருந்த போதிலும் அவர் நாடாளுமன்றத்தில் தேவையில்லாமல் கே.பி. யின் பெயரை இழுத்தது வரவேற்கத் தக்க விடயமாக தெரியவில்லை. இது அவரின் தனிப் பட்ட விரோதத்தை காட்டுகின்றது என்று சொன்னால் மிகை யாகாது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## வடபகுதி...

உலகெங்கும் உள்ள 142 முத லீட்டாளர்கள் இக்கருத்துக் களத்தில் பங்குபற்றி, வட பகுதி யில் தாம் மேற்கொள்ள இருக் கும் முதலீட்டு திட்டங்கள் அபி விருத்திகள் பற்றி ஆளுநர் ரெஜி னோல்ட் கூரே ஏற்பாடு செய்த முதலீட்டார்கள் கருத்து களத்தில் அறிவித்தார்கள்.

இது தொடர்பாக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயின் இணைப்பு செயலாளர் எச். சுமண பால தினச்செய்திக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இது வரையில் மொத்தமாக 46 முதலீட்டாளர்கள் ரூபா 60 பில்லியன் ஐ (60 தர 1000 பிரித்தல் 10 ஆல் பிரித்தால் 6 ஆயிரம் கோடி) முதலீடு செய்ய முன்வந்துள்ளனர்.

இவர்களில் பத்து முதலீட்டா ளர்கள்பால்பதப்படுத்தும்நிலையம் உருவாக்க முன்வந்துள்ளார்கள். முல்லைத்தீவு வவுனியா விவசாயி களின் கால்நடை உற்பத்திக்கு உதவவும் முன்வந்துள்ளனர். மாடு, எருமை போன்ற கட்டாக் காலி கால்நடைகளை வழிக்குக் கொண்டுவந்துபால்உற்பத்தியைப் பெருக்கி பால் பதனிடும் நிலையம் அமைக்க முதலீட்டாளர்கள் முன் வந்துள்ளனர்.

மலேசிய நிறுவனம் ரூபா 1.5 பில்லியன் முதலீட்டில் சோளம் பதனிடும் மற்றும் அரைக்கும் ஆலை நிறுவ முன்வந்துள்ளது.

இந்தோனேசியாவில் உள்ள தக்கியூபா [Tacuba] எனும் நிறு வனம் தேசிய தண்ணீர் வடிகாலமைப்பு சபையுடன் இணைந்து கடல் நீரை நன்னீராக் கும் திட்டத்துக்கு டொலர் 32 மில்லியன் செலவிட திட்டமிட் டுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் யாழ்ப்பாணத்தின் குடி நீர்த் தேவையைப் பூர்த்தி செய் வதற்கு தினமும் 20 ஆயிரம் கியூபெக் தண்ணீரை வழங்க முடியும் என இவர்கள் அறிவித் துள்ளார்கள். வடமாகாண உல் லாசப் பயணத்துறையை அபி விருத்தி செய்வதற்கு நட்சத்திர ஹோட்டல்களை அமைக்க மேலும் ஐந்து நிறுவனங்கள் முன் வந்துள்ளன.

வடமாகாண முதலீட்டாளர் கருத்துக்களம், ஒவ்வொரு மாதமும் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தலைமை யில் கூடி அபிவிருத்தித் திட்ட முன்னேற்றம் பற்றி கலந்துரை யாடும் என இணைப்பாளர் எச். சுமணபால தெரிவித்தார். இந்த 46 முதலீட்டாளர்கள் முதலீடு செய்யும் திட்டத்தின் 45000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என அறியப்படுகிறது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## சீமெந்து...

இராணுவத்தினால் கட்டப்படும் வீடு ஒவ்வொன்றும் 2 பரப்பு நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. வீடு மாத்திரம் 540 சதுர அடி கொண்டதாக உள்ளது.

இதே போல மேலும் காங் கேசன்துறை கிழக்கு பகுதியில் 460 ஏக்கர் நிலம் விடுவிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிலம் பளை வலிகாமம், தையிட்டி ஆகிய பகுதிகளில் விடுவிக்கப்பட உள்ளது. கிராம சேவையாளர் பிரிவு 234, 233, 235, 236 மற்றும் 250 ஆகிய பிரிவுகளில் உள்ள நிலங்களே விடுவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

அனேகமாக விடுவிக்கப்படு கின்ற நிலங்களுக்கு காணி சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உரிமை கோரலாம் என்றும் தெரியவருகிறது. இவ் வாறு விடுவிக்கப்படும் நிலங்கள் பிரதேச செயலகங்களுக்கு அறி விக்கப்பட்டு பிரதேச செயலகங்கள் மூலம் உரியவர்களின் கோரிக் கைகள் பரிசீலிக்கப்பட்டு வழங் கப்படுமென தெரியவருகிறது.

இவ்வாறு விடுவிக்கப்படும் 460 ஏக்கர் நிலமும் உயர்பாது காப்பு பிரிவில் அடங்கியுள்ளது என்றும் இந்த நிலங்கள் இராணு வத்தினரால் விடுவிக்கப்படுகின் றது எனவும் தெரியவருகின்றது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## தமிழர்களை...

அவர்கள் தமிழர்களை கிள் ளுக்கீரை போல நடத்தி வரு கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க தலை மையிலான அமைச்சரவையில் பல முஸ்லிம் தலைவர்கள் அமைச்சர்களாகவும் உதவி அமைச்சர்களாகவும் பதவி வகிக் கின்றனர். வட மாகாணத்தைப் பொறுத்த வரை வன்னியின் ஏக சக்கரவர்த்தியாக அமைச் சர் ரிஷாத் பதியுதீனே இருந்து வருகின்றார். அவர் பொறுப்பேற் றிருக்கும் கைத் தொழில் வர்த்தக அமைச்சின் கீழ் 32 கூட்டுத் தாபனங்களும் கூட்டுத் தாபன அந்தஸ்துள்ள கம்பனிகளும் இருக்கின்றன.

மாந்தை உப்புக் கம்பனியில் மாத்திரம் மன்னாரைச் சேர்ந்த தமிழர் ஒருவர் இயக்குன ராக உள்ளார். ஏனைய கூட்டுத் தாப னங்களிலும் நிறுவனங்களிலும் உயர் பதவியில் தமிழர்கள் எவ ரும் இல்லை. அனைத்துப் பத விகளுக்கும் முஸ்லிம்களே நிய மிக்கப்பட்டுள்ளனர்.

தமிழர்களுக்கு எந்தச் சந்தர்ப் பங்களையும் அவர் வழங்க வில்லை. இது அமைச்சர் ரிஷ ாத் தமிழர்களுக்கு இழைக்கும் பெரும் துரோகமாகும். இது போல ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமும் அவரின் கீழ் இயங்குகின்ற கூட்டுத் தாபனங் களில் தமிழர்களுக்கு எந்தவொரு சந்தர்ப்பங்களையும் வழங்க வில்லை.

அமைச்சர்களான ரிஷாத் பதியுர்தீனும் ரவூப் ஹக்கீமும் தாங்களே முஸ்லிம்களின் ஏகத் தலைவர்களாக வரவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக போட்டா போட்டி போட்டுக்கொண்டு தமிழர்களுக்கும் வழங்க வேண் டிய உரிமைகளை முஸ்லிம் களுக்கு வழங்கி வடக்கு கிழக் கில் தமிழர்களை மூன்றாம் தரப் பிரஜைகளாகவே நடத்தி வரு கின்றார்கள்.

ஒரு காலத்தில் பொதுபலசேனா என்ற பௌத்த தீவிரவாத அமைப்பு முஸ்லிம்களை ஆக்ரோமாக எதிர்த்த போது தமிழர்கள் தமிழ் பேசும் முஸ்லிம்களை ஆதரித் தனர். அவர்களுக்கு பக்கபலமாக நின்றனர். ஆனால் அதே முஸ் லிம்கள் தமிழர்களுக்கு கிடைக்க வேண்டிய பதவிகளை தாங்களே பெற்றுக் கொண்டு தலைநிமிர்ந்து வலம் வருகின்றனர்.

நாடாளுமன்றத்தில் தமிழர் கள் தரப்பில் மொத்தம் 16 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியினால் நியமிக்கப் பட்ட அமைச்சரான திரு. டி.எம். சுவாமிநாதன் மட்டுமே அமைச் சரவையில் உள்ள ஒரே தமிழ் அமைச்சராக உள்ளார். அவரும் தமிழ் மக்களின் முன்னேற்றம்

(தொடர்ச்சி... 22 இல்)

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## இலங்கை...

'தெரண மிஸ் ஸ்ரீ லங்கா 2016" போட்டியில் வெற்றி பெற்றும் இலங்கை அழகிக்கு கிரீடம் சூட்ட உள்ளார். இலங்கை அழகி விழா இம் மாதம் 31 ஆம் திகதி வஸ்கடுவ - சிட்றஸ் ஹெட்டலில் இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது.

2015 ஆம் ஆண்டு மிஸ் ஏர்த் போட்டியில் 2 ஆம் இடம் பிடித்த அமெரிக்க அழகியான பிரிட்டாணியும் இந்த நிகழ்வின் போது கலந்து கொள்ள உள்ளார்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## அரசுக்கு...

இது அரச நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் செயல் என டாக்டர் ராஜித சேனாரட்ண கூறினார்.

அரச பேச்சாளரும், சுகாதார அமைச்சருமான டாக்டர் ராஜித சேனாரட்ண மேலும் கூறுகையில் விடுதலைப்புலிகளை தோற்கடித்து யுத்தம் முடிவடைந்த பிற்பாடு பாதுகாப்பு படையினர் அரச மரங்களின் கீழும் நாற்சந்திகளி லும் பௌத்த கோயில்கள் புத்தர் சிலைகளை நிர்மாணித்து வரு கிறார்கள். இந்த மாதிரியான இரா ணுவ முயற்சி அரசாங்கத்திற்கு எந்த நல்ல பலனையும் அளிக்க வில்லை.

இவ்வாறான இராணுவத்தின் செயற்பாடுகள் அரசாங்கம் மேற் கொண்டு வரும் நல்லிணக்க முயற்சிகளை முறியடிப்பதாகவே அமைகின்றது என்றும் தெரி வித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த விடம் பல முறை கூறினேன். அவர் இக் கூற்றை ஏற்றுக் கொண்டாலும், பாதுகாப்பு படையினர் இவ்வாறு செய்வதனை தான் தடுக்க முடியாது என்று கூறினார்". இராணுவம் கைப்பற்றிய இடங்களில் நிர்மா ணிக்கப்படும் சிலைகளும் விகா ரைகளும் பராமரிப்பு இன்றி போகும் ஒரு அபாயம் ஏற்படும் என டாக்டர் ராஜித சேனாரட்ண சுட்டி காட்டினார்.

# இலஞ்சம் கேட்டேனா.. நானா.. இல்லவே இல்லை - ஜனாதிபதி மைத்திரி மறுப்பு



இலஞ்சம் கேட்டேனா நானா இல்லவே இல்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மறுத்துள்ளார். The Sydney Morning Herald ,The Age ,அவுஸ்ரேலிய வானொலி ஆகியன சென்ற 24 ம் திகதி வெளியிட்ட செய்தியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2009 ஆம் ஆண்டு அவரது இணைச் செயலாளர் மூலம் இலஞ்சம் கோரினார் என்று குற்றம் சாட்டி செய்திகளை வெளியிட்டிருந்தன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2009 ஆம் ஆண்டு விவசாய அமைச்சராக இருந்த போது "ஸ்நோவி மௌன்ரிற் இன்ஜினியரிங் கம்பனி" யிடமிருந்து இலங்கையில் பாலம் ஒன்றை அமைப்பதற்காக இலஞ்சம் கோரினார் என்று அவுஸ்ரேலிய ஊடகங்கள் வெளியிட்ட செய்தியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முற்றாக மறுத்து விட்டார்.நான் எந்தக்காலத்திலும் யாரிடமும் இலஞ்சம் கேட்டதில்லை. இந்த நிலையில் தனக்கு இலஞ்சம் வாங்க வேண்டிய எந்தத் தேவையும் இல்லையென ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விவசாயத்துறை அமைச்சராக இருந்த காலத்தில் அவரது இணைச் செயலாளர் ஒருவர் லஞ்சம் பெற முயற்சித்தார் என அவுஸ்ரேலிய ஊடகங்களில் வெளியான செய்தியை முற்றாக மறுத்துள்ள ஜனாதிபதி இந்த விடயம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசாங்கம் ஏன் கேபியை கைது செய்யவில்லை?



கே.பி என்று அழைக்கப்படும் கே.பத்மநாதனை அரசாங்கம் ஏன் இன்னும் கைது செய்யவில்லை என்று நாடாளுமன்ற ஒத்திவைப்பு தீர்மானத்தில் பேசும்போது எதிர்க்கட்சித் தலைவர் திரு. இரா. சம்பந்தன் கேள்வி எழுப்பினார்.


"கே.பி என்று அழைக்கப்படும் பத்மநாதன் விடுதலைப்புலிகளின் சர்வதேச ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டவர், அவருக்கு எதிராக ஏன் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை" என்று கேள்வி எழுப்பினார்.

"கேபி சென்ற அரசின் செல்லப்பிள்ளையாக இருந்தவர். அவர் இந்த அரசுக்கும் செல்லப் பிள்ளையா? இது என்ன நியாயம்" எனக் கேட்டார்.

"அது மாத்திரமல்லாமல் கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனின் நிலை என்ன? அவர் பாரிய குற்றம் செய்தவர். அவரைக் கைது செய்ய ஏன் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை" எனக் கேள்வி எழுப்பினார்.

"பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தவர். (இவர் பத்து மாதங்களாக தடுப்புக் காவலில் உள்ளார்.) அவருக்கு எதிராக ஏன் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை" என திரு சம்பந்தன் நாடாளுமன்றத்தில் பேசும்போது கேள்வி எழுப்பினார்.

# நானுஓயா நகரம் குப்பைகளால் துர்நாற்றம்...



(க.கிஷாந்தன்)

நுவரெலியா பிரதேசசபைக்குட்பட்ட நானுஓயா நகரம் வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளினால் அதிகமாக விரும்பப்படும் நகரமாகும்.இந் நகரத்தின் பகுதி ஒன்றில் மகாத்மா காந்தியின் நினைவு மண்டபம் ஒன்று உள்ளது இந்த மண்டபத்திற்கு அருகில் கொட்டப்படும் குப்பை அகற்றப்படாமல் இருக்கின்றது. இயற்கை காட்சிகளை புகைப்படம் எடுப்பதற்காக இப்பகுதிக்கு செல்லும் சுற்றுலா பயணிகள் அங்கு வீசும் துர்நாற்றங்களினால். மூக் கைப் பிடித்தபடி செல்கின்றனர். இக் குப்பையை அவ்விடத்திலிருந்து அகற்றும்படி நுவரெலியா பிரதேச பைக்கு பொது மக்களால் பல்வேறு கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டும் இதுவரை காலமும் நடவடிக்கைகள் மேற்கொண்டதாக தெரியவில்லை. பகலில் நாய்களும் இரவில் பன்றிகளும் குப்பையைக் கிளறுவதால் பொதுமக்கள் சிரமத்திற்கு ஆளாகின்றனர். இக் குப்பையை உடனடியாக அகற்ற அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என பிரதேச வாசிகள் கோரிக்கை விடுகின்றனர்.


# மாணவரின் படிப்பை பாதிக்கும் தொலைக் காட்சி இணைப்பு

(மஸ்கெலியா நிருபர் செ.தி.பெருமாள்)

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் பல தோட்டங்களில் கேபிள் மூலம் தொலைக்காட்சி இணைப்பு வழங்குவதில் சிலர் ஆர்வம் காட்டுகின்றனர். மின்சார சபைக்கு உரித்தான மின் கம்பங்கள் ஊடாக அதற்கான கேபிள்களை பொருத்துகின்றனர். இந்த இணைப்பு. ஏனையவற்றிலும் பார்க்க குறைவான செலவு குறைவானது டிஷ் அன்ரனா மழை மற்றும் காற்றினால் பாதிக்கப்படும் ஆனால் இதனால் எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படாது என மலையக மக்களின் ஆசையையும் ஆர்வத்தையும் தூண்டி அவர்களுக்கு இணைப்பை ஏற்படுத்தி கொடுத்துள்ளனர்.

தற்போது பாடசாலை சிறுவர்களின் படிப்பு உட்பட அனைத்து செயற்பாடுகளும் தடைபட்டு எந்நேரமும் தொலைக்காட்சியின் முன்னால் அமர்ந்து கொண்டு அதனை பார்வையிடுவதே அவர்களின் பொழுதுபோக்காக மாறியிருக்கிறது. அதாவது பாடசாலை செல்லும் சிறார்கள் பாடசாலை செல்வதை தவிர்த்தும் பல மாணவ மாணவிகள் பாடசாலை விட்டு வந்ததும் தொலைக் காட்சியின் முன்னால் அமர்ந்து விடுவதும் அவர்களின் படிப்பில் பாரிய பின்னடைவை எதிர்நோக்குவதற்கு ஏதுவாக அமைகிறது. மலையக மக்களின் முன்னேற்றம் என்பது பிள்ளைகளின் படிப்பிலேயே தங்கி இருக்கிறது என்பது பலரும் அறிந்ததே எனவே படிப்பை பாதிக்கும் இவ்வாறான செயல்களை செய்யும் இந்த நபர்களின் இவ்வாறான சேவையை நீக்கி மலையக சிறார்களின் முன்றேற்றத்திற்காக சம்பந்தபட்டோர் தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு நலன் விரும்பிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அசிங்கமான சுவரோவியம்




(அவுஸ்திரேலியா)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வருகிற நவம்பர் 8 ஆம் திகதி நடக்கிறது. அதில் ஜனநாயக கட்சிசார்பில் முன் னாள் வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டனும், குடியரசு கட்சி சார்பில் கோடீஸ்வரரும் தொழிலதிபருமான டொனால்டு டிரம்பும் களம் இறங்கியுள்ளார். இந்நிலையில், ஹிலாரி கிளிண்டனை மிகவும் ஆபாசமான வகையில், சித்திரித்து சுவர் சித்திரம் ஒன்று அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் வரையப்பட்டிருந்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நீச்சல் ஆடையில் அந்தரங்க உறுப்புகள் அதிகமாக வெளியே தெரியும்படி இந்த ஓவியம் வரையப்பட்டுள்ளது. இதுகுறித்து உள்ளூர் அதிகாரிகளுக்கு தகவல் போயுள்ளது. அவர்களின் கோபப்பார்வைக்கு சுவர் உரிமையாளரும், இதை வரைந்த தெருவோர ஓவியர் லஸ்சக்சும் உள்ளாகியுள்ளனர். கிராஃபிடி தடை சட்டம் 2007 ன்கீழ், கிட்டத்தட்ட நிர்வாணமாக வரையப்பட்டுள்ள இந்த ஓவியம் தவறாகும். "கலைக்கு சென்சார் செய்யும் விஷயத்துக்கு நான் ஆதரவு தெரிவிப்பவன் கிடையாது. ஆனால், ஹிலாரி என்று இல்லை, எந்த ஒரு பெண்ணாக இருந்தாலும், இப்படி வரைந்திருக்க கூடாது" என்று கூறுகிறார், கவுன்சில் உறுப்பினர் சாரா கார்டர். இந்த ஓவியத்தை அழித்துவிட உள்ளூர் அரசியல்வாதிகள் நெருக்கடி கொடுத்து வருகிறார்கள். ஆனால், பொலிஸார் இதுகுறித்து விசாரணை நடத்தும் வரை அந்த ஆதாரத்தை அழிக்கவும் முடியாது என்ற தர்மசங்கடத்தில் அவர்கள் சிக்கியுள்ளனர்.

# வன்னியில் தமிழரின் நிலை

(கார்த்தி - வவுனியா நிருபர்)

தமிழர்கள் வன்னியில் 3 ஆம் தரப் பிரஜைகள் ஆக்கப்பட்டுள்ளார்கள். வன்னியில் இன்று திட்டமிட்ட முஸ்லீம் குடியேற்றங்கள் நடைபெறுகின்றன. அதே நேரத்தில் வன்னியில் சிங்கள குடியேற்றமும் நடைபெறுகின்றது. தமிழன் 3 ஆம் தரப்பிரஜை நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது வேதனைக்குரிய விடயம்.

ஈழத்தமிழன் தமிழ் தேசிய வீரன் பண்டார வன்னியன் ஆண்ட மண். எங்கள் வன்னி மண் ஆங்கிலேயர் எம்மை ஆளக்கூடாது என்றதுக்காக போர் தொடுத்த பண்டார வன்னியன் ஆண்ட மண் எங்கள் வன்னி மண்.

அதே வழியில் எங்களை விட பெரும்பான்மை இனம் எம்மை ஆண்டுவிட கூடாது என்பதுக்காக 60 வருடங்களுக்கு மேலாக அஹிம்சை ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் போராடியவர்கள் நாம். ஆனால் இன்று நாம் எங்கு சென்று கொண்டிருக்கின்றோம்? எமது பண்பாடு என்ன? எமது கலைகள் எங்கே? எமது கல்வி எங்கே? இன்று வவுனியா முல்லைத்தீவு ஆகிய இடங்களில் தமிழர்கள் 3ம் தரப் பிரஜைகளாக உள்ளார்கள்.

முன்பொரு காலத்தில் சகல துறைகளிலும் உயர் பதவி வகித்தவர்கள் தமிழர்கள் ஆனால் இன்று அது எங்கே சென்று விட்டது சரி நாம் விடயத்திற்கு வருவோம் வன்னி பெரும் நிலப்பரப்பில் பெரும்பான்மை இனமாக வாழ்வது தமிழர்களே ஆனால் இங்கு உள்ள திணைக்களங்களிலும் வங்கிகளிலும் வைத்தியசாலைகளிலும் தனியார் நிறுவனங்களிலும் எத்தனை தமிழர்கள் பணிபுரிகின்றனர்? இது எனது முதல் கேள்வி. வவுனியா செட்டிகுளம் ஆண்டியா புளியங்குளத்திலிருந்து வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேசத்துக்கு ஒரு முஸ்லீம் நபர் வாச்சர் வேலைக்கு போகின்றார் என்றால் ஏன் அந்த வாச்சர் வேலைக்கு இந்த பிரதேசத்தில் இவ்வளவு தூர இடைவெளிகளில் ஒரு தமிழ் இளைஞன் இல்லையா இந்த வன்னியில்? இதற்கு யார் காரணம்?

வவுனியா பம்பைமடு பகுதியில் உள்ள காட்டை அழித்து அதில் முஸ்லீம்களை குடியேற்றி அதற்கு புதிய சாளம்பைக்குளம் என்று பெயரும் இடுவார்களாம். இதை கேட்பதற்கு தமிழர் தரப்பில் முதுகெலும்புள்ள தமிழன் யாருமில்லையா?

சிங்களவர் அத்துமீறுகிறார்கள். தமிழரின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன என கூச்சலிடும் அன்பர்களே கண் முன்னே உங்கள் நிலங்களை இன்னுமோர் சிறுபான்மை இனத்தவருக்கு தாரை வார்த்து விட்டு நிற்கின்றீர்களே தெரியவில்லையா?

இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்டு இன்று வரை ஓலைக் கொட்டிலிலும் மரங்களின் கீழும் எம் இனம் வாழ்ந்து கொண்டிருக்க காக்கையன் குளத்திலும் சாளம்பைக்குளத்திலும் மனிதரே இல்லாத ஓட்டு வீட்டில் காக்கைகள் மட்டும் எச்சமிட்டுகொண்டிருக்கின்றன வீட்டு உரிமையாளர்கள் யார் என்று கேட்டால் யாரோ முகம்மது முஸ்தப்பாவாம்!

யார் இவர்கள்? எங்கே என்று கேட்டால், அவர்கள் புத்தளத்தில் தொழிலதிபராம். கெப்பித்தி கொல்லாவிலும் இக்கிரி கொல்லாவிலும் இரண்டு கடைகள் உள்ளதாம். இவ்வீடுகள் வீட்டுத்திட்டத்தில் அமைச்சர் றிஷாத் தந்தவர் என்கிறார்களாம்.

உண்மைதான் நாம் யாரையும் குறை கூறவில்லை. அவர்கள் தம் கடமையை தன் மக்களுக்கு சரியாக செய்கிறார்கள் நிச்சயமாக யாராலும் மறுக்கப்படாத உண்மை.

அரச திணைக்களங்களிலும் சரி, தனியார் நிறுவனங்களிலும் சரி தமிழர்களுக்கு இடமில்லை இந்த வன்னியில் ஆனால் வன்னி மண் எங்களின் சொந்த மண் என்று வெறுமனே ஊளையிட்டுக்கொண்டிருக்கின்றோம். எமது மக்களின் அபிவிருத்தி எங்கே? தமிழ் மக்கள் பிரதிநிதிகள் எங்கே?

இல்லை எமது மக்களுக்கு அபிவிருத்தி என்றால் என்ன என்று தான் புரியுமா? இல்லை புரிந்து கொள்ள எம் மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவும் இல்லை. புரிந்து கொண்டவர்களையும் புறந்தள்ளிவிட்டனர் கொண்டவர்களையும் புறந்தள்ளி விட்டனர் எம்மவர்கள்! இன்று உதாரணமாக ஒரு வங்கியில் வேலைவாய்ப்பு எவ்வாறு வழங்குகின்றனர் தெரியுமா? 10 வெற்றிடம் இருந்தால் அதில் ஐந்து - சிங்களவர், நான்கு முஸ்லிம்கள், ஒன்று - தமிழர். இது தான் இடம்பெறுகிறது.

இந்த வன்னியில் தமிழன் மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளான் இதற்கு என்ன காரணம்?

இது இப்படி இருக்க, மறுபுறம் அன்று ஒருநாள் (2013) வவுனியாவின் பிரபல ஆண்கள் பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவர்கள் சிலர் கைகலப்பில் ஈடுபட்டனர். அதில் ஒரு மாணவன் அமைச்சரின் றிஷாத்தின் உறவினராம். அதற்காக மற்றைய மாணவனை பாடசாலையில் வைத்தே பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர். பாதிக்கப்பட்ட மாணவனின் உறவினர்கள் பெற்றோர்கள் . அனைவரும் அம் மாணவனை மீட்க முயற்சி செய்தனர். பிரபல பத்திரிகை நடாத்தும் பா. உறுப்பினரிடமும் உதவி கோரினர். ஆனால் எம்மவர்கள் யாரும் முன்வரவும் இல்லை. அவர்களை விடுதலை செய்யவும் இல்லை. யுத்தம் முடிந்து விடுதலை புலிகள் அழிக்கப்பட்டார்கள் புதிய கோஷ்டிகள் தலைதூக்கியுள்ளது முஸ்லீம் என்ற போர்வைக்குள்.

## சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து இலங்கை உப தலைவர் டில்ஷான் ஓய்வு




(இலங்கை)

17 வருடமாக இலங்கை அணியில் இடம் பிடித்திருந்த முன்னணி கிரிக்கெட் வீரரும் vice captain னுமான திலகரத்னே டில்ஷான் ஓய்வை அறிவித்துள்ளார். சொந்த மண்ணில், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் இலங்கை பங்கேற்கின்றது. இரு அணிகளும் தலா 1 போட்டிகயில் வென்றுள்ள நிலையில், இன்னும் 3 போட்டிகள் எஞ்சியுள்ளன. இப்போட்டி தொடர் முடிவடைந்ததும் ஒரு நாள் மற்றும் ரி20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப்போவதாக டில்ஷான் அறிவித்துள்ளார். 2013இல் இவர் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். எனவே டில்ஷான் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து முற்றாக விடைபெற உள்ளார். 1999 ஆம் ஆண்டு சிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் களம் கண்டார் டில்ஷான். இதுவரை 87 டெஸ்ட், 329 ஒருநாள், 78 ரி20 போட்டிகளில் ஆடியுள்ளார். ஒருநாள் போட்டிகளில் 10 ஆயிரம் ரன்களை கடந்த நான்காவது இலங்கை வீரர். ரி20 போட்டிகளில் ஜெயவர்த்தனாவுக்கு அடுத்து சதம் அடித்த 2 ஆவது இலங்கை வீரர் டில்ஷான். 2011 இல் பல்லேகெலேயில் நடந்த ரி20 போட்டியில் ஆஸிக்கு எதிராக இந்த சதத்தை (104 ரன்கள்) விளாசினார். டில்ஸ்கூப் எனப்படும், தலைக்கு மேலே பந்தை தூக்கிவிடும் வித்தியாசமான ஷொட்டுக்காக பெயர் பெற்றவர் இவர்.

## இரண்டாவது பூமி கண்டுபிடிப்பு..!



(அமெரிக்கா)

சூரியக் குடும்பத்திற்கு அருகே புதிய பூமி போன்ற கிரகத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். சூரியனுக்கு அருகே உள்ள பிராக்ஸிமா சென்டாரி என்ற செந்நிற குள்ள நட்சத்திரத்தை இது சுற்றிவருவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பாறைகள் நிறைந்த கிரகமாக இது அடையாளம் காணப்பட்டுள்ளது. இது பார்ப்பதற்கு கிட்டத்தட்ட பூமி போலவே உள்ளதாம். சூரியக் குடும்பத்திற்கு வெளியே, நமக்கு வெகு அருகே உள்ள கிரகம் ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

இது சிறிய கிரகம்தான். முற்றிலும் நமது கிரகம் போல என்று கூறி விட முடியாது. அதேசமயம் நமது பூமியின் சாயல் உள்ளதாம். ஏற்கனவே பிராக்ஸிமா மீது விஞ்ஞானிகளுக்கு ஒரு சந்தேகம் இருந்து வந்தது. அதாவது இந்த நட்சத்திரமானது ஒரு சூரியனைப் போல செயல்படுவதாகவும்,இதை ஒரு கிரகம் சுற்றி வந்து கொண்டிருக்கலாம் என்ற சந்தேகம் விஞ்ஞானிகளுக்கு இருந்தது. தற்போது அந்த சந்தேகம் உறுதியாகியுள்ளது. இதுவரை கிடைக்காமல் இருந்து வந்த ஆதாரம் தற்போது கிடைத்துள்ளது. பிராக்ஸிமா சூரியனைப் போல செயல்படுவதும், அதைச் சுற்றி சிறியகிரகம் சுற்றி வருவதும், அது பூமியைப் போல இருப்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நமது சூரியக் குடும்பத்திற்கு அப்பால் பிராக்ஸிமா போல ஆயிரக் கணக்கான, கோடிக் கணக்கான குட்டி நட்சத்திரங்கள் உள்ளன. இருப்பினும் நமது சூரியக் குடும்பத்திற்கு வெகு அருகே நம்மைப் போன்ற ஒரு கிரகம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும். இங்கு உயிரினங்கள் இருக்கின்றனவா என்று தெரியவில்லை. இப்போதைக்கு நமது சாயல் இருந்தாலும் கூட அங்கு நம்மைப் போல யாரேனும் இருப்பார்களா என்ற ஆர்வமும் அதிகரித்துள்ளது.

## நீந்திக் கடந்த நெருப்பாறு நாவல் வெளியீடு




(யாழ்ப்பாணம்)

நா. லோகேந்திரநாதன் எழுதிய "நீந்திக் கடந்த நெருப்பாறு" எனும் நாவல் வன்னியில் இடம்பெற்ற இறுதிப்போரையும் போருக்கான வாழ்வையும் சித்திரிக்கிறது.

போரின் ஒவ்வொரு நகர்வையும், அப்போரின் போது மக்கள் மேற்கொண்ட இடப்பெயர்வுகளும் இடப்பெயர்வின்போது சந்தித்த அவலங்களும் இலக்கியமாக்கப்பட்டுள்ளன. வீரமும் தியாகமும் மரணமுன் நிறைந்த ஒரு வரலாற்று வடிவமாக இப்படைப்பு திகழ்கிறது. இந்த நாவலின் அறிமுக விழா யாழ்ப்பாணம் நாவலர் கலாசாலை மண்டபத்தில் மூத்த இலக்கியவாதி இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது. மயூரன் தொடக்க உரையையும், கை. சரவணன் அறிமுக உரையையும் நடத்தினர். தி. செல்வமனோகரன், கே.ரி. கணேசலிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.




## நைஜீரியாவில் ஜனாதிபதியின் பெயரை நாய்க்கு வைத்தவர் கைது



(நைஜீரியா)


வடக்கு நைஜீரியாவில் உள்ள ஒகுன் மாநிலத்தை சேர்ந்த ஒருவர் தனது வளர்ப்பு நாய்க்கு அந்நாட்டின் ஜனாதிபதியான முஹம்மது புஹாரியின் பெயரை சூட்டியுள்ளார். இதே பெயரை சொல்லி நாயை அழைப்பதுடன், நாயின் உடலின் இருபக்கங்களிலும் நைஜீரிய மொழியில் முஹம்மது புஹாரி என்ற பெயரையும் அந்நபர் எழுதி வைத்துள்ளார். ஜனாதிபதி பிறந்த வடக்கு நைஜீரியாவில் வாழும் முஸ்லிம்களுக்கு அந்நபரின் செயல் ஆத்திரத்தை உண்டாக்கியதால் சிலர் இது தொடர்பாக பொலிஸில் புகார் அளித்துள்ளனர். இதுபோன்ற செயல்கள் விரைவில் மதமோதல்களை தூண்டி விடுவதற்கு காரணமாக அமைந்து விடலாம் என்பதால் உடனடியாக நடவடிக்கையில் இறங்கிய பொலிஸார் நாட்டின் ஜனாதிபதியின் பெயரை நாய்க்கு சூட்டிய அந்நபரை கைது செய்து, அவர் மீது வழக்குப்பதிவு செய்துள்ளனர்.






# யாழில் அமைச்சர்கள் கலந்து கொண்ட திருமண நிச்சயதார்த்தம்





சென்ற 22 ஆம் திகதி ஆகஸ்ட் மாதம் ஹொட்டல் பிள்ளையார் இன் இல் (Hotel Pillayar Inn) காலை 10 மணிக்கு நடைபெற்றது.

சாரையடி புலோலியை சேர்ந்த திருமதி சிவமலர் இரமேஸ்வரனின் மகனான சஜீவனுக்கும் டாக்டர். என். யோகராஜன் - மாலதி தம்பதிகளின் புதல்வியான அஸ்மிக்கும் திருமண நிச்சயதார்த்தமும் அதைத் தொடர்ந்து திருமணப்பதிவு நிகழ்வும் நடைபெற்றது.

திருமணப்பதிவு என்று சொன்னால், சட்டப்படி கல்யாணம் நிறைவு பெற்று விட்டது என்பதுதான் அர்த்தம். இனி சம்பிரதாயப்படி திருமணம் நடக்க வேண்டியது தான் பாக்கி.

யாழ்ப்பாண சமூகத்திலே திருமணம் என்பது ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஏற்படும் உறவு அல்ல. அது இரண்டு குடும்பங்களுக்கு இடையிலான உறவினை வலுப்படுத்தும் நிகழ்வொன்றாகும்.


இந்த திருமணப் பதிவுக்கு கௌரவ அமைச்சர் மஹிந்த சமரவீர மற்றும் கௌரவ ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும் சாட்சி கையெழுத்து இட்டு மணமக்களையும் பெற்றோரையும் கௌரவித்தார்கள்.


இந்த கல்யாண பதிவுக்கு கௌரவ அமைச்சர் மஹிந்த சமரவீர, கௌரவ ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. சுரேஸ் பிரேமசந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மாகாண சபை உறுப்பினருமான திரு. எம்.கே. சிவாஜிலிங்கம், மாகாண சபை உறுப்பினர் திரு. விந்தன் கனகரத்தினம், தினச்செய்தி ஆசிரியர் திரு. திருமதி. கே.ரி. இராஜசிங்கம் முன்னனாள் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் நாடாளுமன்ற வேட்பாளரான உரும்பிராயைச் சேர்ந்த, எஸ்.எஸ். குணநாயகம் ஆகியோர் திருமணப் பதிவு வைபவத்தில் கலந்து கொண்டார்கள்.


வைபவ ஆரம்பத்தில், கௌரவ அமைச்சர் மஹிந்த சமரவீர தாரை தப்பட்டைகள் முழங்க ஊர்வலமாக பிள்ளையார் இன் மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டார். அவர் வாசலிலே பூரண கும்பம் வைத்து விபூதி, சந்தனம் குங்குமம் வழங்கி பூமாலை அணிவித்து வரவேற்கப்பட்டார்.











# சொன்னார்கள் சொன்னார்கள்

இனவாதத்தை தூண்டும் வகையில் செயற்படும் சகலரையும் கட்சியை விட்டும் நீக்கவுள்ளதாக ஐ.ம.சு.மு. செயலாளர் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். ஒருபோதும் இனவாத • கட்சிகளுடன் ஸ்ரீ.சு.க. கூட்டுச் சேரப் போவதில்லையென்றும் அவர் குறிப்பிட்டார். வடக்கிலும் தெற்கிலும் உள்ள சில இனவாதிகள் மீண்டும் இனவாதத்தை தூண்ட முயல்வதாக குறிப்பிட்ட அவர் சு.க. இனவாத கட்சி அல்ல எனவும் தெரிவித்தார்.



சந்தேக விஷ ஊசியால் மரணமடைந்தோர் பெயர் விபரப் பட்டியலை உடன் தாருங்கள் வடக்கு முதலமைச்சரிடம் அமைச்சர் மனோ கோரிக்கை.



முப்படைகளின் உயர் மட்டத்திலிருந்து அடி மட்டம் வரையிலான அனைத்து அங்கத்தவர்களதும் பாதுகாப்புக்காகவும் அபிமானத்துக்காகவும் தான் முன்னிற்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தினார். முப்படைகளின் பிரதானி என்ற ரீதியிலும் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியிலும் தனது பொறுப்புகள் தொடர்பாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும்குறைத்துமதிப்பிட்டுதான் நடவடிக்கை மேற்கொள்வதில்லை யெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.



'அச்சுறுத்தல்கள் விடுக்கப்படும் பட்சத்தில், புதிய அரசியல் கட்சியொன்று உருவாக்கப்படும்" என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி அலுவலகர் சங்கத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இடம்பெற்ற நிகழ்வில் நேற்று திங்கட்கிழமை (22) கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.




காவிரி நடுவர் மன்ற உத்தரவுப்படி, காவிரியிலிருந்து தமிழகத்துக்கு உரிய நீரை திறந்து விடும்படி கர்நாடக அரசுக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா சமீபத்தில் கடிதம் எழுதியிருந்தார். இதற்கு கர்நாடகா தரப்பில் இருந்து எந்தப் பதிலும் இல்லை. இதையடுத்து 'தமிழகத்துக்கு உரிய பங்கைப் பெறுவதற்கு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும்"என, சட்டசபையில் ஜெயலலிதா அறிவித்திருந்தார்.



இலங்கையின் பொருளாதாரத்தில் வடமாகாணத்தின் பங்களிப்பு மிக முக்கியமானது எனவும் வடக்கு மாகாணம் மொத்த தேசிய உற்பத்தியில் முக்கிய பங்கு வகிப்பதாகவும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்தார்.



இலங்கையின் சட்டத்தில் இருப்பதற்கு, தகுதியற்ற சட்டம் என்று அரசாலேயே விமர்சிக்கப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் அரசியல் கைதிகள் எதற்காக இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் நேற்று சபையில் கேள்வி எழுப்பியுள்ளார்.



## அங்கும் இங்கும்

# இளவரசர்களின் செல்லப்பெயர்கள்

நம்பினாலும் அல்லது நம்பாவிட்டாலும் சரி பிரித்தானிய அரச குடும்பமும் மற்றயவர்களைப் போல் ஒருவருக்கொருவர் செல்லப் பெயர்களை வைக்கின்றனர்.

2007 இன் பிற்பகுதியில் இளவரசர் வில்லியமும் ஹரியும் மறைந்த தங்கள் தாயார் இளவரசி டயானா தங்களை முறையே "Wombat" "Ginger," என அழைத்தார் என தெரிவித்துள்ளனர். தான் இரண்டு வயதாக இருக்கும் போது ஆரம்பித்ததாக வில்லியம் தெரிவித்தார்.

இவரது செல்லப்பெயர் "Wombat" ஹரியின் செல்லப்பெயர் "Ginger," அரச பரம்பரையில் இந்த இரு சகோதரர்களிற்கு மட்டும் செல்லப்பெயர்கள் இருக்கவில்லை. குயின் எலிசபெத் 11 "Tillabet" என அழைக்கப்பட்டார்.

அதே நேரம் வில்லியம் தனது மனைவி கேற் மிடில்ரனை "Poppet."என குறிப்பிடுகின்றார்.





# சீருடையான இஸ்லாமியர்களின் முழு நீள உடை

ஹிஜாப் எனப்படும் முழு நீள இஸ்லாமியர்களின் உடை அணிய எதிர்ப்புகள் கிளம்பி வரும் நிலையில் இது கனடாவின் ஒரு பிரிவு பொலிஸாருக்கு அங்கீகரிக்கப்பட்ட சீருடையாக உள்ளது. பிரான்ஸ்.ஜேர்மனி ஆகிய நாடுகளில் இஸ்லாமிய பெண்கள் முழு நீள உடை அணிய தடை விதிக்கப்பட்டு வரும் நிலையில் கனடாவில் பெண் பொலிஸாரின் சீருடையாக இந்த உடை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, அரசாங்க செய்தி தொடர்பாளர் Scott Bardsley கூறியதாவது. இஸ்லாமியர்களின் இந்த சீருடை கனடாவின் பன்முகத்தன்மையை பிரதிபலிக்கும் வகையில் உள்ளது. இந்த சீருடையானது இருநூறு வருடங்களுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பரந்த விளிம்பின் தொப்பி பிரபலமானதாகும். தற்போது இந்த உடை மிகவும் அரிதாகவே காணப்படுகிறது. இந்த உடை பொலிஸ் வேலைக்கு மிகவும் பொருத்தமாக இருப்பதாக உள்ளூர் செய்தி நிறுவனங்கள் தகவல் தெரிவித்துள்ளன. 1990 இல் சீக்கிய அதிகாரிகளுக்கும் தலைப்பாகை அணிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த சீருடை, 1800 ஆம் ஆண்டு அமெரிக்க மதுபான வர்த்தகர்களை கண்காணிக்கும் பொருட்டு அனுப்பப்பட்ட பொலிஸாருக்காக வடிவமைத்ததாகும். பிரித்தானிய ராணுவ உடைகளைப் பார்த்து இந்த சீருடைகளில் சிறிய மாறுதல்கள் கொண்டு வரப்பட்டன.ஸ்வீடன், நோர்வே மற்றும் அமெரிக்காவின் சில மாகாணங்களில் இந்த கொள்கைகளை பின்பற்றி வருகின்றனர். 10 வருடங்களுக்கு முன்னதாகவே லண்டன் மாநகர காவல் இந்த சீருடைக்கு ஒப்புதல் வழங்கி பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்ஈழப் போராட்டத்தில் கிட்டு

## பிரபாகரனின் வாழ்க்கை வரலாறும் சமகால நிகழ்வுகளும்

பிரபாகரன் 1983 ஆம் ஆண்டு தொடக்கம் 1986 ஆம் ஆண்டு வரை சென்னையில் தனது காரியாலயத்தில் தங்கி இருந்தார். இவ்வாறு அங்கே அவர் இருந்த காலத்தில் மிகவும் பக்குவப்பட்டவராக மிகவும் அரசியல் சாணக்கியங்கள் நிறைந்து, இராணுவ ரீதியிலும் ஒரு தந்திரோபாயங்கள் நிறைந்த ஓர் தலைவராக படிப்படியாக மாறினார்.

கொலை செய்ய தேவையாயின் அதை செய்து தமிழீழத்தை அடைவதற்கான கொள்கையை வகுத்தார். தான் இலங்கைக்கு எதிரான போராட்டத்தில் முக்கிய புள்ளி என கூறுபவர்கள் வேறு எவரையும் போராட்டத்தில் சேர்த்துக் கொள்வதை பிரபாகரன் வரவேற்கவில்லை.

ரெலோவினரை நாட்டை விட்டு துரத்திய பிற்பாடு பிரபாகரன் 'தனிக்காட்டு ராஜாவாக' வடபகுதியில் கருதப்பட்டார். தமிழீழ விடுதலைப் புலி இயக்க போராளிகள் தொடர்ந்தும் ஒழிந்து மறைந்து வாழ்ந்து கொண்டு இருந்த ரெலோ உறுப்பினர்களைத் தேடுவதிலும் அவர்களை அழித்து ஒழிப்பதிலும் ஈடுபட்டார்கள். ரெலோவின் ஆயுதங்களை தேடித் தேடி அபகரித்தார்கள்.

அது மாத்திரமல்லாமல் ஸ்ரீ சபாரட்ணத்தின் கொலைக்கு முன்னர் இந்தியா பெருந்தொகையான ஆயுதங்களையும், வாகனங்களை அனுப்பி வைத்திருந்தது. அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட ஆயுதங்களையும், வாகனங்களையும் கண்டு பிடிக்கும் முயற்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டார்கள்.

ஸ்ரீசபாரட்ணம் கொலை செய்யப்பட்டு அவரது உடலை பேரூந்து நிலையத்தில் போட்டு பிரசாரம் செய்ததை எல்லா தமிழரும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது பிரபாகரனுக்கு தெரிந்ததே.

இதே நேரத்தில் ரெலோ இயக்கம் இல்லாத யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளை ஓர் யுத்தத்தில் வெகு விரைவில் வென்று விடலாம் எனக் கருதிய இலங்கை இராணுவம் மே 17 ஆம் திகதி 1986 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஒரு யுத்தத்தினை ஆரம்பித்தது.

இந்த யுத்தத்தில் இலங்கை இராணுவத்தை எதிர்த்து பயங்கரமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் போராடினார்கள். விடுதலைப் புலிகளின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் இலங்கை அரசாங்கம் விமானம் மூலம் குண்டுகள் பொழிந்தது. இவ்வாறு குண்டுகள் போட்டதனால் பல பொது மக்கள் கொல்லப்பட்டார்கள்.


இதற்கிடையில் ரெலோவினரை தாக்கி ஸ்ரீ சபாரட்ணத்தை கொலை செய்ததை திரு. இராஜநாயகத்தை ஆசிரியராக கொண்டு இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் 'தமிழ் ரைம்ஸ்" என்ற ஆங்கில மாத பத்திரிகை கடுமையாக கண்டித்து செய்திகள் வெளியிட்டது.

ஆனால் இந்தப்பத்திரிகையில் வெளிவந்த செய்தியை பார்த்து பிரபாகரன் எந்தவிதமான கவலையும் அடைந்ததாகத் தெரியவில்லை. "நாங்கள் எந்தவொரு இயக்கத்தையும் அழித்து ஒழிக்கவில்லை ஆனால் ரெலோவுக்கு பாடம் தான் படிப்பித்தோம்," என்று பிரபாகரன் ஒரு பேட்டியில் கூறியிருந்தார்.

அதே நேரம் ரெலோவுக்கு எதிரான யுத்தம் ராஜீவ் காந்தியின் தூதுவரான பி. சிதம்பரம் இலங்கை வரும் நேரம் பார்த்து நடைபெற்றது. சிதம்பரம் இலங்கை வந்து ஏப்ரல் 21ஆம் திகதி தொடக்கம் மே 4 ஆம் திகதி வரை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் தூதுவர் இலங்கை அரசாங்கத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது இலங்கை அரசாங்கம் தமிழருக்கு சுய ஆட்சி கோரிக்கைகள் சம்பந்தமாக அதனது திட்டத்தை தயாரித்திருந்தது. இவ்வாறு இலங்கை அரசாங்கம் தயாரித்த திட்டங்கள் சம்பந்தமாக சில தெளிவுகளை புதுடில்லி இலங்கையிடம் கேட்டது.

இந்தியா கேட்ட விடயங்கள் சம்பந்தமாகத் தெளிவுபடுத்த இலங்கைத் தூதுக்கோஸ்டி ஒன்று இந்தியா விரைந்தது. ராஜீவ்காந்தியின் தூதுவரான அமைச்சர் சிதம்பரம் பேச்சில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கும் அதே நேரம் கொழும்புக்கு வெளியில் உள்ள கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இலங்கை றைட்ஸ்ரார் (Tri-Star) விமானம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.



இந்த விமானத் தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டார்கள். 40க்கு அதிகமானோர் காயமடைந்தார்கள். குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்ட பலரின் உடல்கள் எரிந்து கரிக்கட்டையாக இருந்தன அவர்களை அடையாளம் காணமுடியாது இருந்தது.

இந்த றைட்ஸ்ரார் விமானம் லண்டனில் இருந்து கொழும்பு வந்து பின்னர் கொழும்பில் இருந்து மாலைதீவு செல்லத் தயாராக இருந்த பொழுது தான் குண்டு வெடித்தது. இந்த விமானத்தின் பயணிகள் பெரும்பாலானோர் ஐரோப்பியர்கள் அவர்கள் விமானத்தில் ஏற முற்படும் போது தான் குண்டு வெடித்தது. அதையடுத்து நான்கு நாட்கள் கழித்து மத்திய தந்தி காரியாலயத்தில் குண்டு வெடித்தது. கொழும்பின் இருதயம் போன்று அமைந்துள்ள மத்திய தந்தி காரியாலயத்தில் குண்டு வெடித்ததில் 12 பேர் கொல்லப்பட்டார்கள். 125க்கு மேற்பட்டோர் காயமடைந்தார்கள்.

இந்தக் குண்டு வெடிப்பை அடுத்து. இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா சிதம்பரத்திற்கு கொடுத்த தீர்வுத் திட்டத்திற்கு மேல் இனி தான் எதுவும் செய்யத்தயாராக இல்லை என்று முழங்கினார்.

இதற்கிடையில் யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டளைத்தளபதி கிட்டு ஒரு முக்கிய தலைவராக உருமாறிக் கொண்டு வந்தார். அந்த நேரம் யாழ்ப்பாணம் கிட்டுவின் கட்டுப்பாட்டில் இருந்தது.

இலங்கை இராணுவத்தினர் ஒல்லாந்தரின் கோட்டைக்குள் அடங்கி இருந்தார்கள். அந்தக் கோட்டையை சுற்றி தமிழீழ விடுதலைப் போராளிகள் சென்ரி (sentry) வைத்திருந்தனர். விடுதலைப் புலிகள், வாகனங்களின் சொந்தக்காரர்களிடம் இருந்தும் வர்த்தகர்களிடம் இருந்தும் பல வரிகளை விதித்து பணத்தை பெற்றுக் கொண்டார்கள்.

வீட்டுத் தேவைகளுக்கு தேவைப்படும் பல பொருட்கள், சவர்க்காரம், ஜாம், குளிர்பானம், தேன் போன்றவற்றை அவர்கள் தயாரித்து விற்றார்கள். பிரபாகரனின் வார்த்தை தான் அங்கே சட்டம். பிரபாகரனின் சட்டங்களை வெற்றிகரமாக யாழ்ப்பாணத்தில் வழிநடத்திக் கொண்டு இருந்தவர் கிட்டு என்று அழைக்கப்படும் சதாசிவம் கிருஸ்ணகுமார் ஆகும்.

ஒரு ஈழப் போராட்டத்தில் முக்கிய கட்டளைத் தளபதியாக கிட்டு உருவானார். கிட்டுவும் பிரபாகரனின் ஊரான வல்வெட்டி துறையை சேர்ந்தவர். பிரபாகரனின் இள வயதில் இருந்து இருவரும் தோழனாவர். 1962 ஆம் ஆண்டு தான் கிட்டு பிறந்தார். இவர் ஒரு அச்சுக்கூட தொழிலாழியின் 2 ஆவது மகன் ஆவார்.

கல்வியைப் பெரிதாகக் கற்றது இல்லை 1978 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளில் சேர்ந்து கொண்டார். யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா கொலை செய்யப்பட்டு 3 வருடங்களுக்கு பின்னர் அவர் தன்னுடைய பெயரை "வெங்கட்" என வைத்துக் கொண்டார். அதன் பின்னர் எல்லோரும் வெங்கிட்டு என்று அழைத்தார்கள். அது குறுகி "கிட்டு" ஆகிற்று.

1983ம் ஆண்டிற்கு பிற்பாடு யாழ்ப்பாண கட்டளைத் தளபதியாக கிட்டு நியமிக்கப்பட்டார். இராணுவ தந்திரங்கள் தெரிந்தவராகவும் ஈன இரக்கமற்ற கொலைகாரனாகவும் இருந்தார். இவருக்கு எல்லோரும் பயப்படும் நிலை உருவாகிற்று.

எல்லா ஆயுதங்களையும் கையாளக் கூடிய திறமை கிட்டுவிடம் இருந்தது. கிட்டு தான் யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளை பிரபல்யப்படுத்தியவர் அதேவேளை எல்லோரும் கிட்டுவுக்குப் பயந்தார்கள். கிட்டுவுக்கு பாடல் கேட்பதில் நல்ல விருப்பம் அதே வேளை தமிழில் நல்ல எழுத்தாளரும் கூட.

**அரசகேசரி**

சிறு வயதில் இருந்தே கமரா, பேனா போன்ற சின்ன சின்ன பொருட்களை திருத்தும் வல்லமை கொண்டவர் விடுதலைப்புலிகளில் சேர்ந்த பிற்பாடு ஆயுதங்களை எளிதில் கழட்டி பூட்டி திருத்தக் கூடிய ஆற்றல் இருந்தது.

பிரபாகரன் பொதுவாகவே போராளிகளுடன் கடுமையாக இருப்பார். கிட்டுவைப் பொறுத்த வரை அவ்வாறு அல்ல கிட்டு ஒரு ரெலோ போராளி போராடும் போது கொலை செய்து ரயர் போட்டு எரித்தார். இந்த செயலை மக்கள் எதிர்த்தார்கள். எதிர்த்த மக்களைப் பார்த்து சரி இல்வாறு இறந்த உடலை என்ன செய்வது? இப்படியே விட்டுப் போக நாயும் காகமும் கடித்துக் குதறவா என்று கேட்டார்.

"எனக்கு தத்துவங்கள் தெரியாது. நான் தத்துவங்கள் பேசுவது இல்லை. எனக்கு எனது செயலில் தான் நம்பிக்கை உள்ளது" என பத்திரிகையாளருக்கு கொடுத்த பேட்டியில் கூறினார். கிட்டு எப்பொழுதும் போராட்டத்தில் பின் வரிசையில் நின்றது கிடையாது எப்போதும் முன்வரிசையில் நின்று வழி நடத்துவார். யாழ்ப்பாணத்தில் இருந்த சகல விடுதலைப் புலி போராளிகளும் அவரின் கட்டுப்பாட்டிலே தான் இருந்தார்கள்.

(தொடரும்)



# ஒலிம்பிக்


## தெரிந்ததும் தெரியாததும்

31 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் பிறேஸிலின் தலைநகர் ரியோடி ஜெனிரோவில் ஆகஸ்ட் ஐந்தாம் திகதி முதல் ஆகஸ்ட் 21 ஆம் திகதி வரை கோலாகலமாக இடம்பெற்று முடிந்துள்ளன.

பிறேஸிலில் இடம்பெற்று முடிந்த ஒலிம்பிக் போட்டிகளில் 11இ303 விளையாட்டு வீரர்கள் பங்குபற்றினார்கள். உலகின் 206 நாடுகள் இப்போட்டிகளில் பங்குபற்றியிருந்தன. அமெரிக்காவிலிருந்து மாத்திரம் 550 விளையாட்டு வீரர்களும் 150 விளையாட்டு உதவியாளர்களும் பங்குபற்றினார்கள்.

அதே நேரம் சுமார் 9000 பேரை சனத்தொகையாக கொண்ட உலகின் மிகச்சிறிய தீவுகளில் ஒன்றான நௌருவிலிருந்து இரண்டு வீரர்கள் அடங்கிய அணி பங்குபற்றியிருந்தது. "எல்சன் பிறச்வெல்" பாரம் தூக்குபவர் ஆகவும் "ஒபினா ஜுறா" ஜுடோ







போட்டிகளிலும்பங்குபற்றினார்கள். இவர்கள் ஆரம்பப் போட்டிகளில் வெற்றி பெற்றிருந்தாலும் பின்னர் வந்த இரண்டாம் சுற்றில் சோபிக்கத் தவறியிருந்தார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை அனுராதா கூரே, நிலுக்கா கீதானி, ராஜசேகர சுமேதா ரணசிங்க நிலுக்கா, கருணாரட்ண மாங்கள சமரக்கோன், மத்யூ அபயசிங்க, கிபிங்கோ ரஹீம், சமேர தர்ம பாதன மற்றும் சுரேஷ் பீரிஸ் ஆகியோர் பங்குபற்றினர்.

ஒலிம்பிக் வரலாற்றைப் பொறுத்த வரை இலங்கை இதுவரையில் இரண்டு பதக்கங்களை மட்டுமே பெற்றுள்ளது. இம்முறை எந்தப்பதக்கத்தையும் இலங்கை வெல்லவில்லை.சோகம் மட்டுமே எஞ்சியது.

இதே வேளை 120 கோடி மக்களைக் கொண்ட இந்தியாவினால் வெறும் இரண்டு பதக்கங்களை மாத்திரமே வெல்ல முடிந்தது. இம்முறை இந்தியாவின் சார்பாக 117 போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தார்கள். இது 2012 ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளுடன் ஒப்பிடும் போது 34 பேர் அதிகமாகும்.

இந்தியாவிற்கு ஒரு வெள்ளிப் பதக்கமும் ஒரு வெண்கலப் பதக்கமுமே கிடைத்தது. 120 கோடி மக்களைக் கொண்ட ஆசியாவின் மிகப்பெரிய நாடான இந்தியாவினால் ஒரு தங்கத்தையேனும் வெல்ல முடியாமற் போனமை துரதிஷ்டமே. பசுபிக் தீவு நாடான பிஜித் தீவு ஒரு தங்கம் வென்றது. பிஜித் தீவின் மொத்த மக்கள் சனத்தொகை சுமார் ஒன்பது லட்சங்களாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறை ஒலிம்பிக் போட்டிகளில் அகதிகள் அணியொன்றும் முதற் தடவையாக பங்குபற்றியிருந்தது. இவர்களை விட கொசோவோ மற்றும் தென்சூடான் அணிகளும் முதற்தடவையாக பங்குபற்றியிருந்தன.

ஒலிம்பிக்கில் வழங்கப்பட்ட 306 பதக்கங்களும் (தங்கம் வெள்ளி வெண்கலம்) மொத்தமாக 28 விதமான ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டன.

இம்முறை ஒலிம்பிக் போட்டிகளில் றக்பி 7 மற்றும் கோல்ப் ஆகிய விளையாட்டுக்கள் முதன் முதலில் விளையாடப்பட்டன. இவை அனைத்தும் பிறேஸிலின் 33 மைதானங்களில் நடைபெற்றன.

மைக்கல் பெல்ப்ஸ் அமெரிக்காவின் உலகப் புகழ்பெற்ற நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் இதுவரை மொத்தம் 28 பதக்கங்களை வென்றிருக்கிறார்.

இம்முறை ஒலிம்பிக் போட்டியில் அவர் மொத்தமாக ஐந்து தங்கம் மற்றும் ஓர் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றிருக்கிறார். நீச்சல் அரங்கில் இவரது சாதனைகளை முறியடிப்பது கடினமான விடயம்.

**உசைன் போல்ட் :**

இந்த மாதம் உலகில் அதிகமாக உச்சரிக்கப்பட்ட சொல் இதுவாகத்தான் இருக்கும். ஜமெய்க்காவின் இளம் சிங்கம் என வர்ணிக்கப்படும் இவர் தொடர்ச்சியாக மூன்று ஒலிம்பிக் போட்டிகளில் முன்று விதமான அஞ்சல் ஓட்ட போட்டிகளில் தங்கம் வென்ற தங்கமகன் என்ற பெருமைக்குரியவர். இம்முறையும் உசைன் போல்ட் 100மீ, 200மீ, 4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டப்போட்டிகளில் தங்கம் வென்று அசத்தினார். உலகில் அதிகமான ரசிகர்களை தன்பக்கம் ஈர்த்துள்ள இந்த வீரர் இம்முறை ஒலிம்பிக் போட்டிகளுடன் ஒலிம்பிக் அரங்கிலிருந்து ஆனந்தமாக விடைபெற்றார்.

**நிறைவு விழா :**

பிறேஸிலின் புகழ்பெற்ற மரக்கானா விளையாட்டரங்கில் நடைபெற்ற நிறைவு விழா வைபவம் 3 மணித்தியாலங்கள் வரை நீடித்தது. நிறைவில் ஒலிம்பிக் ஜோதி அணைக்கப்பட்டது.

விழாவில் கண்கவர் வாண வேடிக்கைகளும் நிறையவே இடம்பெற்றன. நிறைவு வைபவத்தில் 2020 ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் ஜப்பான் நாட்டின் பிரதமர் ஷின்ஷோ அபேயும் கலந்து கொண்டிருந்தார்.

பிறேஸிலின் றியோ நகரின் மேயர் ஐ.ஓ.சி தலைவரிடம் ஒலிம்பிக் கொடியை கையளிக்க அதனை அவர் டோக்கியோ நகர ஆளுநரிடம் கையளித்தார்.







## ஒலிம்பிக் துளிகள்




இம்முறை ஒலிம்பிக் போட்டிகளில் பிஜி ஜோர்தான் பஹறெய்ன் சிங்கப்பூர் வியட்னாம் கோஸ்ராறிக்கா தஜிகிஸ்தான் ஆகிய நாடுகள் தமது முதலாவது பதக்கங்களை சுவீகரித்தன.

அநேகமான ரஷ்ய வீரர்கள் போதை வஸ்து பாவித்த குற்றச்சாட்டில் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றுவதில் இருந்து தடை செய்யப்பட்டனர். இதனால் இவர்கள் பதக்கப் பட்டியலில் மிகவும் பின் நோக்கிச் செல்ல நேரிட்டது.

எகிப்து வீரர் "islam el shehaby" இஸ்ரேல் நாட்டு வீரருடன் கை குலுக்க மறுத்ததனால் போட்டிகளில் பங்குபற்றுவதில் இருந்து தடைசெய்யப்பட்டார்.


ரியோ ஒலிம்பிக் 100 மீற்றர் பட்டர்ஃப்ளை நீச்சல் போட்டியில் சிங்கப்பூரை சேர்ந்த ஜோசப் ஸ்கூலிங் முதலிடம் பிடித்து தங்கம் பதக்கம் வென்றுள்ளார். 2 ஆவது இடத்தைப் பெற்ற பெல்ப்ஸ் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார். ஜோசப் ஸ்கூலிங், பெல்ப்ஸை வீழ்த்தி முதலிடம் பிடித்துள்ளார்.




## இத கொஞ்சம் கேளுங்கள்

- போனை இடது காதில் வைத்துப் பேசுங்கள்
- மருந்து மற்றும் மாத்திரைகளை குளிர்ந்த நீரில் குடிக்கக் கூடாது.
- மாலை 5 மணிக்கு மேல் வயிறு முட்டச் சாப்பிடுவது கூடாது.
- தண்ணீரை காலையில் அதிகமாகவும், இரவில் குறைவாகவும் குடிக்கவும்.
- தூங்குவதற்கு சிறந்த நேரம் இரவு 10 மணி முதல் காலை 4 மணி வரையாகும்.
- மதிய உணவுக்கு பின்பும் மருந்துகள் எடுத்துக் கொண் பின்பும் உடனே படுத்தல் கூடாது. குறைந்தது அரைமணி நேரம் கழித்து தான் தூங்க வேண்டும்.
- செல்போனில் சார்ஜ் கடைசி பாரில் இருக்கும்போது போன் எடுக்கக் கூடாது. ஏனென்றால் அந்த நேரத்திர் சாதாரண ரேடியேஷனை விட 1000 மடங்கு அதிகம் இருக்கும்.

## ஆறு வித்தியாசங்கள்





ஆறு வித்தியாசங்களை கண்டு பிடித்து
**தினச்செய்தி**
தில்லைக்கட்டி வீதி,
சுன்னாகம்.
எனும் முகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.




உலகின் நீளமான மற்றும் உயரமான இடத்தில் கண்ணாடி அமைப்பாகம் கொண்ட பாலம் சுற்றுலா பயணிகளுக்கு சீனாவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதில், அதிக பட்சமாக ஒரு நாளில் 8 ஆயிரம் பேர் சென்று வர முடியும். சீனா, உலகின் நீளமான மற்றும் உயரமான கண்ணாடி பாலத்தை சுற்றுலாப் பயணிகளுக்காக திறந்து வைத்துள்ளது.

இரண்டு மலைக் குன்றுகளை இணைக்கும் படியான இந்த கட்டமைப்பு, ஹுனான் மாநிலத்தில் ஜான்ஜாஜி பள்ளத் தாக்கிற்கு மேல், சுமார் 300 அடி உயரத்தில் உள்ளது. பார்வையாளர்கள் பள்ளத்தை, 99 மூன்றடுக்கு கண்ணாடி பேனல்கள் வழியாக பார்க்கலாம். ஒரு வண்டி செல்லும் அளவிற்கு பலமான இந்த பாலத்தில் பாதசாரிகளுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதிகபட்சமாக ஒரு நாளில் 8 ஆயிரம் பேர் சென்று வர முடியும்.

கண்ணாடி பாலங்களும், மலைப் பாதை களும் சீனாவில் மிக பிரபலம். வித்தியாசமான புகைப்படம் எடுப்பதற்கான, குறிப்பாக திருமண புகைப்படங்கள் எடுக்க வாய்ப்புகளை இந்த பாலம் வழங்குகின்றன.

# சுடோகு புதிர் - 1

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | | | 7 | | | | |
| 6 | | | 1 | 9 | 5 | | | |
| | 9 | 8 | | | | | 6 | |
| 8 | | | | 6 | | | | 3 |
| 4 | | | 8 | | 3 | | | 1 |
| 7 | | | | 2 | | | | 6 |
| | 5 | | | | | 2 | 8 | |
| | | | 4 | 1 | 9 | | | 5 |
| | | | | 8 | | | 7 | 9 |

### விளையாடும் முறை

1. ஒவ்வொரு அறையிலும் 1 முதல் 9 வரை உள்ள எண்களை ஒரு முறை மட்டுமே எழுத வேண்டும்.
2. ஒவ்வொரு கிடைமட்ட (Row) வரிசையிலும் 1 முதல் 9 வரையுள்ள எண்கள் ஒரு முறை மட்டுமே வர வேண்டும்.
3. ஒவ்வொரு நெடு (column) வரிசையிலும் 1 முதல் 9 வரையுள்ள எண்கள் ஒரு முறை மட்டுமே வர வேண்டும்.

சுடோகு புதிரை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி

**சுடோகு புதிர் - 1**
**தினச்செய்தி**
தில்லைக்கட்டி வீதி,
சுன்னாகம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



# குறுக்கெழுத்துப் போட்டி - 17

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 17

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 | ☒ |
| ☒ | | ☒ | | ☒ | 4 |
| 5 | | ☒ | ☒ | 6 | |
| | ☒ | 7 | 8 | | ☒ |
| 9 | 10 | ☒ | | ☒ | 11 |
| ☒ | 12 | | | ☒ | |

**இடமிருந்து வலம்**

1. பிரேசிலில் நடைபெற்ற விளையாட்டுத் திருவிழா.
5. புதையல் எடுக்க இது கொடுப்பார்கள்.
6. பொருளின் பெறுமதி.
7. ஆதரவு இல்லாதவர்.
8. சேறுடன் சேர்ந்து வரும் சொல்.
12. கமுகில் இருந்து கிடைப்பது.

**மேலிருந்து கீழ்**

2. இது ஒரு மலர்.
3. துணைக்குப் போனாலும் இதற்குப் போகாதே என்பர்.
4. நால்வகை நிலங்களில் ஒன்று.
5. வெற்றி பெற்றவர்களுக்கு கிடைப்பது.
6. இது பெரு விருட்சமாகும்.
8. வாய்க்குள் இருப்பது.
10. முல்லைக்குத் தேர் கொடுத்த மன்னன். (தலைகீழ்)
11. ஆணும் அல்ல பெண்ணும் அல்ல.

குறுக்கெழுத்துப் போட்டியின் சரியான விடைகளை எழுதி தபால் அட்டையில் ஒட்டி உங்கள் பெயர், முகவரியுடன் செப். 08 ஆம் திகதிக்கு முன்னர் எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதிய ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் 10.09.2016 ஆம் திகதி வாரமலரில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப்போட்டி - 15 இன் விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. சிறைச்சாலை | 2. அறை |
| 7. கரு | 3. சாடி |
| 8. கண்ணாடி | 4. சருகு |
| 10. தீ | 6. அண்ணா |
| 11. கவிதை | 9. வில் |

### சரியான விடையை எழுதியவர்கள்

1. த. பூபதி, சுழிபுரம் மேற்கு.
2. வா. கோபிகா, சாவற்காடு, மானிப்பாய்.
3. எல். சவிதா, இல. 35, பிக்கரிங்ஸ் வீதி, கொட்டாஞ்சேனை.
4. ஆ. சற்குணம், வைரவப்புளியங்குளம், வவுனியா.
5. பா. சுமதி, இல. 12, ஏகாம்பரம் வீதி, திருகோணமலை.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 17**
**தினச்செய்தி வாரமலர்,**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**

# அரசகேசரியின் பதில்கள்



**கேள்வி : முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தலைமையில் புதிய கட்சி உதயமானால் நல்லாட்சி அரசுக்குப் பாதிப்பு ஏற்படுமா?**

செ.பதுமராஜன், நவாலி

பதில் : நிச்சயமாக

**கேள்வி : வர்த்தகர் கடத்தல் மீண்டும் ஆரம்பமாகி விட்டதா?**

டி.டிரேரன், தெமட்டகொட.

பதில் : சுலைமான் திடீரென காணாமல் போனதைப் பார்க்கும் போது அப்படித்தான் பார்க்கத் தோன்றுகிறது?

**கேள்வி : கமலுக்கு செவாலியர் விருது வழுங்கப் பட்டது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

கி.புஷ்பராணி, மல்லாவி.

பதில் : விருதுக்கு ஏற்ற நபர் கமல்.

**கேள்வி : பேராதனை பல்கலைக் கழக தமிழ் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப் பட்டதன் பின்னணி என்ன?**

ஏ.பாரதி, திருகோணமலை.

பதில் : யாழ்ப்பாண பல்கலைக் கழக சம்பவம்தான் இதன் பின்னணி. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

**கேள்வி : ஒலிம்பிக்கில் இலங்கை வீரர்களின் செயற்பாடு எப்படி இருந்தது?**

கி. ரவீந்திரன், புளியங்குளம்.

பதில் : படுமோசம் விளையாட்டு அமைச்சு இருக்கிறது. ஆனால், அது அக்கறை காட்டுவதில்லை.கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டும். 10 ஃ15 கி.மீ கிழமையில் மூன்று நாட்கள் ஓட வேண்டும்.

**கேள்வி : இலங்கையில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டதாக அரசு கூறுகிறது. அப்படியானால் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படுமா?**

சி. விமலராஜன், ஊரெழு.

பதில் : பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கு புதிய சட்டம் அமுல்படுத்தப்படும் என அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் கூறுகிறார். ஆனால் அமைச்சரவை பேச்சாளரான டாக்டர் ராஜித சேனாரட்ன பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படமாட்டாது என்கிறார். கோட்டைக்குள் குத்துப்பாடு.

**கேள்வி : கொஞ்ச நாட்களாக அமை தியாக இருந்த யாழ்ப்பாணத்தில் மீண்டும் வாள் வெட்டு ஆரம்பமாகி விட்டதே?**

நி.யாழினி, கேகாலை.

பதில் : இதுதான் முப்பது வருடகால துப்பாக்கி கலாசாரத்தின் பிரதிபலிப்பு.

**கே: வொஷிங்டன் மீது அணுகுண்டு வீசப் போவதாக வட கொரியா மிரட்டி உள்ளதே. இதனால் மூன்றாவது உலக மகா யுத்தம் வெடிக்குமா?**

எம்.எம். ஜோன்சன், இல்லைத்தீவு.

பதில் : புலி புலி என்று பகிடியாகச்சொன்னால் ஒரு நாள் உண்மையாக புலி வந்துவிடும். அப்போது வொஷிங்டனல்ல முழுஅமெரிக்காவும் அழிந்துவிடும். மூன்றாவது உலகப்போரை யார் தொடுப்பார்.


**கேள்வி: ஒலிம்பிக்கில் அமெரிக்காவின் ஆதிக்கத்தை இல்லாமல் செய்ய முடியாதா?**

பா. விஜயகுமார், ஓமந்தை

பதில் : ஜப்பான்,கொரியா,கென்யா போன்ற நாடுகள் தங்கம்,வெள்ளி, வெண்கலம் பெறுகின்றன. 120 கோடி மக்கள் உள்ள இந்தியா இரண்டு பதக்கங்களை த்தான் பெற்றது. இலங்கையின் நிலையும் இது தான். வளரும் நாடுகள் திறமையான வீரர்களைக் கண்டு பிடித்து உரிய பயிற்சி கொடுத்தால் அமெரிக்காவின் ஆதிக்கத்தை அடக்கலாம்.

**அரசியல், சினிமா,**
**விளையாட்டு சம்பந்தமான உங்கள்**
**கேள்விகளை தபால் அட்டையில்**
**எழுதி அனுப்பவும்.**
*கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி*
**அரசகேசரி**
**தினச்செய்தி**
*தில்லைகட்டிவீதி,*
*சுன்னாகம்.*

# குருவிகளின் சாபம்



ஒரு ஒதுக்குப் புறமான இடத்தில் ஒரு சிறு சிவன் கோவில். அக் கோவிலில் ஒரு பூசகர் அவருக்கு உதவியாளர் பூசகர் ஒரு வயது போனவர் காலையில் நேரஞ் செல்லத்தான் கண் விழிப்பார்.

அக் கோவிலில் ஒரு பகுதியில் ஒரு சிறு பூந்தோட்டம் பல வகையான பூக்கள். இந்த பூக்களை எடுத்துத்தான் பூசகர் சாமிக்குச்சாத்துவார். இந்த பூந்தோட்டத்தின் நடுவிலே ஒரு ஆலமரம், அந்த ஆலமரத்தில் கூடு கட்டி சில குருவிகள் வாழ்ந்து வந்தன. தினமும் காலையில் அந்த பூஞ்சோலையில் உள்ள பூக்களில் வடியும் தேனை குடித்து வந்தன. நேர காலத்திற்கு எழும்பாத பூசகர் தேனை எடுத்த அதாவது எச்சில்படுத்திய பூக்களைப்பிடுங்கித் தான் சிவனுக்கு அர்ச்சனை பண்ணுவது அவர் வளக்கம். இது குருவிகளுக்கு சந்தோஷம். இப்படி நடந்து கொண்டிருக்கும் போது ஒரு பாம்பு இந்தக் குருவிகள் மேல் கண் வைத்து இவைகளை இரையாக்குவதற்கு தினசரி அந்த ஆலமரத்தடிக்கு வந்து போகும்.

தீடீர் என ஒரு நாள் வயது போன அர்ச்சகர் காலமாகிவிட்டார். இவருக்குப் பதிலாக ஒரு புது அர்ச்சகர் வந்து சேர்ந்தார். இவர் வலு ஆசாரம் உள்ளவர். குருவிகள் வந்து எச்சில் படுத்தும் முன் எழுந்து பூக்களை எல்லாம் ஆய்ந்து வைத்துவிடுவார். இதனால் பூக்கள்காலையில் மரத்தில் இல்லாத படியால் தேன் எடுக்க குருவிகளுக்கு சந்தர்ப்பம் இல்லாது போய்விட்டது. எனவே குருவிகள் எல்லாம் சேர்ந்து அந்த புதுக்குருக்களை எப்படியும் விரட்ட வேணும் என்று கங்கணங்கட்டிக் கொண்டன. பாம்புமோ குருவிகளை இரை யாக்க வேணும் என்று தினசரி மரத்தடிக்கு வந்துபோகும். இப்படியாக நடந்து கொண் டிருக்கும் போது ஒரு நாள் அர்ச்சகர் வழமை போல பூக்கள் கொய்ய மரத்தடிக்கு வந்தார்.


ஏற்கனவே குருவிகளைப் பிடிக்க மரத்தடியில் காவல் இருந்த பாம்பு அவன் எனக்கு இடஞ்சலாக வந்து விட்டானோ என எண்ணி அவரை கடித்து விட்டது. உடனே அர்ச்சகர் ஐயோ ஐயோ பாம்பு கடித்து விட்டதே என கத்திக்கொண்டு கீழே விழுந்துவிட்டார். இவர் கத்தியதைக்கேட்ட இவரது உதவியாளர்கள் கையில் கம்புடன் வந்து அருகில் கிடந்த பாம்பை அடித்துக் கொன்றார்.

இவை அனைத்தையும் மரக்கொப்புக்களில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த அந்தனை குருவிகளும் ஆட்டம் போட்டபடி தமது குரல்களில் ஆடி ஆனந்தப்பட்டன. இனி மேல் எங்களுக்கு எந்த விதத் தடைகளும் இன்றி தேன் குடிக்கலாம் என மறுபடியும் ஆடிப்பாடி மகிழ்ந்தன.

எங்களுடைய சாபம் பலித்துவிட்டதே எங்கள் எதிரிகள் இருவருமே இறந்து விட்டார்கள். இனி எங்கள் பாடு கொண்டாட்டம் தானே என கிளைக்கு கிளை தாவித்தாவி கத்திக்கத்திச் சந்தோஷப்பட்டன.

**வ. நடராசா**

# அசத்தலான அறை



நாள் முழுக்க உழைத்துவிட்டு, வீட்டிற்குள் வந்தாலும் முதலில் நாம் நுழையும் இடம் பாத்ரூம்தான். அதிலும் வாஷ்பேஷின் தான் நாம் தேடிச்செல்லும் இடம். அப்படிப்பட்ட இடத்தை அழகாகவும், தூய்மையாகவும், வித்தியாசமாகவும் வைத்துக் கொள்வதன் மூலமாக வீட்டிற்குள் நுழைந்ததும், அது உங்கள் MOOD ஐ மாற்றும்.

இன்று பலரும் தங்களுடைய வீட்டை அலங்கரிக்கும்போது அதிக கவனத்துடனும் கலைநயத்துடனும் இருக்க வேண்டும் என நினைப்பது, முதலில் பெட்ரூம், அடுத்து ரெஸ்ட் ரூம் (பாத்ரூம்) தான். சுவர் டிசைன் முதல் கலர் மற்றும் அங்கு இருக்கும் டைல்ஸ் என பல ரசனைகளை இன்றைய இளைஞர்கள் எதிர்பார்க்கிறார்கள். தங்களுடைய கற்பனைத் திறனை வைத்து புது புது டிசைன்களை தங்களுக்கென செய்து கொள்கிறார்கள்.

Sultry designs in washbasin வித்தியாசமான டிசைன்களில், விதவிதமான கலர்களிலும் இந்த வகையான வாஷ் பேஷின்கள் கிடைக்கும். என்னதான் டிசைன்களில் வெரைட்டி காண்பித்தாலும் வெண்மை நிறம் தான் அழகுக் கூட்டும். அதிலும், பிளன்டேட் பைப்புடன் கூடிய வாஷ்பேஷின்களுக்கு எப்போதும் மவுசு அதிகம். சான்டல் கலர், அடர்த்தி பிரவுன் கலர் மற்றும் பல டஸ்கி கலர்களும் பலருடைய சொய்ஸாக இருக்கிறது.

டாய்லெட்களில் வைாய்ட் கலர் எப்போதும் கவனத்தை ஈர்க்கும். மேலும், வாஷ்பேஷின்களில் UV லைட்கள் பயன்ப டுத்தும் போது நம்முடைய டென்ஷன் மூட் குறைகிறது. LED remote கண்ட்ரோல் கொடுக்கப்பட்டிருக்கும் பாத்ரூம் டிசைன்கள் பெரும்பாலும் டெம்பரேச்சர் போன்றவைகளைச் சரியாக வைத்திருக்க உதவுகிறது.

# சூரிய மின்சார சாதனை

அவுஸ்திரேலியாவிலுள்ள நியூசவுத் வேல்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், சூரியஒளியிலிருந்து மின்சாரம் தயாரிப்பதில் புதிய சாதனை அளவை எட்டியுள்ளனர். அவர்கள் உருவாக்கியுள்ள புதிய சூரிய ஒளி தகடு சாதாரண சூரிய ஒளியை, 34.5 சதவீதம் மின்சாரமாக மாற்றும் திறன் கொண்டது. இது தான், உலகிலேயே மிக அதிகமான அளவு ஒளிமின் மாற்ற விகிதம். ஒரு சூரிய ஒளிக் கதிரை, 28 சதுர செ.மீ. அளவுள்ள முப்பட்டக கண்ணாடி வழியே செலுத்தி, அதை நான்கு கதிர்களாக பிரித்து சூரிய மின்சாரம் தயாரிக்கும்படி விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இதனால் நான்கு மடங்கு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடிவதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். சூரியஒளியிலிருந்து, 35 சத வீத மின்சாரத்தை தயாரிக்கும் தொழில் நுட்பம், 2050ம் ஆண்டுக்குள் சாத்தியமாகும் என, ஒரு ஆய்வுக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் அதற்கு முன், அந்த எல்லையை முறியடித்துள்ளனர்.

# பிரெஞ்ச் நாயகனான உலகநாயகன் கமல்

உலகநாயகன் கமல்ஹாசனின் கலைச் சேவையை பாராட்டி பிரான்ஸ் நாட்டின் உயரிய விருதான "செவாலியர் விருது" வழுங்கவுள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. செவாலியர் விருது என்பது உலகின் பல பகுதிகளில் இயங்கிவரும் முன்னணி மனிதர்களை பெருமைப்படுத்தும் வகையில் பிரெஞ்சு அரசாங்கம் 1957இல் இருந்து ஆண்டுதோறும் வழங்கி வரும் மிக உயர் விருது.

செவாலியர் என்பது உயர் பெருமைக்குரியவர் என்ற பொருளாகும் தனது ஒவ்வொரு படங்களிலும் புதுமையை அறிமுகப்படுத்தி தமிழ் சினிமாவை உலக தரத்திற்கு கொண்டு சென்ற உன்னத கலைஞர் கமல்ஹாசன். களத்தூர் கண்ணம்மாவில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி ,ஒரு நடன இயக்குநராக பின்னர் நடிகனாக வளர்ந்து கமல் படைத்த சாதனைகள் மலைக்க வைப்பவை. இன்று ஒரு தயாரிப்பாளராக ,இயக்குநராக, கதை வசன கர்த்தாவாக ,பாடலாசிரியராக, பாடகராக பல்வேறு பரிமாணங்களில் முத்திரை பதித்த ஒரு முழுக்கலைஞன் கமல்ஹாசன். தென்னிந்திய மொழிகளில் மட்டுமல்ல ,வடஇந்தியாவிலும் வெற்றிக் கொடி கட்டிய மாபெரும் கலைஞன் என்பதை இவரை விமர்சிப்பவர்களும் கூட ஒத்துக் கொள்வார்கள். இந்திய விருதுகளை கடந்த கமல்ஹாசனுக்கு தற்போது சர்வதேச அளவில் விருதுகள் குவிந்து வருகின்றன. கடந்த சில மாதங்களுக்கு முன்னதாக திரைத்துறையில் உலகநாயகன் கமலஹாசன் ஆற்றிய பங்கினை கௌரவித்து பிரான்ஸ் அரசு "லாங்லாய்ஸ் விருது" வழங்கியது.

பிரெஞ்சு சினிமாவின் பிதாமகர்களில் ஒருவராகக் கருதப்படும் ஹென்றி லாங்லாய்ஸ், திரைப்படங்களை ஆவணப் படுத்தி பாதுகாத்து வைப்பதன் முன்னோடியாக திகழ்ந்தவர். அவரின் நினைவாக வழங்கப்படும் "லாங்லாய் விருது" கமல்ஹாசனுக்கு வழங்கப்பட்டது.

தற்போது மீண்டும் ஒரு கௌரவமாக பிரான்ஸ் நாட்டின் கலாச்சார அமைச்சகம் திரைப்படத் துறையில் கமல்ஹாசனின் சாதனைகளை கௌரவித்து செவாலியர் விருதினை அறிவித்துள்ளது.


இதற்காக சிறப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டு கமல்ஹாசனுக்கு விருது வழங்கப்படும் என பிரான்ஸ் அரசு தெரிவித்துள்ளது.

பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு ஆண்டு தேறும் பிரான்ஸ் கலாச்சார அமைச்சகத்தின் சார்பில் செவாலியர் விருது அறிவிக்கப்படுகிறது.

கலைத்துறையில் சிறந்த சேவையைப் பாராட்டி 1997ம் ஆண்டு நடிகர் திலகம் சிவாஜிக்கு இந்த விருது வழங்கப்பட்டது. அஞ்சலி கோபாலன் செவாலியர் விருது பெற்றுள்ள முதல் இந்திய தமிழ் பெண். திருநங்கைகள் நல்வாழ்வுக்காகவும், எய்ட்ஸ் நோயாளிகளின் மறுவாழ்வுக்காகவும் அவர் ஆற்றி வரும் தொண்டுக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

சிவாஜியின் கலை உலக வாரிசான கமல் செவாலியர் பெறப்போவது தமிழர்க்கு பெருமையே!





இந்தியாவில் இந்த விருதை சினிமா பிரபலங்களான நான்கு பேர் இதுவரை பெற்றுள்ளனர். ஐந்தாவதாக இந்த விருதுப் பட்டியலில் கமல் தற்போது இணைந் துள்ளார்.

இதன்மூலம் தமிழ் சினிமாவில் செவாலியே விருது பெறும் இரண்டாவது நடிகர் என்ற பெருமையையும் கமல் பெற்றுள்ளார். இதுவரை செவாலியே விருது பெற்ற இந்திய திரைப்பிரபலங்களின் விபரமாவது 1987ம் ஆண்டு வங்கதேச திரைப்பட இயக்குநர் சத்யஜித்ரே 1997ம் ஆண்டு மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் 2007ம் ஆண்டு பாலிவுட் நடிகர் அமிதாப் 2014ம் ஆண்டு பாலிவுட் நடிகர் ஷாரூக்கான் 2016 ஆண்டு நடிகர் கமல்ஹாசன்

தமிழ் சினிமாவில் புதுப் புது முயற்சி.. செய்யும் கமலின் சில படங்கள் தமிழ் ரசிகர்களிடம் வரவேற்பை பெறாவிட்டாலும், அதைப் பற்றி கவலைப்படாமல் அடுத்த பயணத்திற்கு தயாராகிவிடுவார். அவர்தான் கமலஹாசன். தமிழ் திரைப்பட வரலாற்றில் முக்கிய இடத்தை வகித்து வரும் கமலின் முயற்சிகள் அசாத்தியமானது. அந்த வகையில் பல படங்களைப் பற்றி பேசலாம். அதில் முக்கியமான மூன்றுப் படங்களை எடுத்துக் கொள்ளலாம். தனது சொந்த தயாரிப்பில் உருவாக்கிய ராஜபார்வையில் பார்வையிழந்த கதாநாயகனாக நடித்து அசத்திஇருப்பார் கமலஹாசன். எல்லோராலும் பரபரப்பாக பேசப்பட்ட இந்தப் படம் வசூல் ரீதியாக அதன் இலக்கை அடைய முடியாமல் போய்விட்டது. இது ஒரு பெரிய இழப்பு என்றாலும் கவலை இல்லை கமலுக்கு...ஸ்டார்ட் கேமரா என்று அடுத்தப் படத்திற்கு போய்விடுவார் கமல். அதைப் போன்றுதான் குணா திரைப்படமும். இதுவும் பெரிய அளவில் மக்களால் பேசப்படவில்லை என்றாலும் நடிப்பில் பல புதிய முயற்சிகளை கமலஹாசன் இந்த திரைப்படத்தில் செய்திருப்பார். தன்னை கறுப்பாக்கிக் கொண்டு மனநலம் பாதிக் கப்பட்டவர் போன்ற வேடத்தில் நடிப்பில் பல புதிய திறவுகோலை மக்கள் முன் வைத் திருப்பார். டெக்ஸ் என்று அடுத்தப் படத்திற்கு தயாரானார் கமல் ஹேராம் திரைப்படம் இதில் மிக முக்கியமானது. காந்திசுதந் திரப்போராட்டம் என்று கதைப்போக் கில்சொல்லிச் சென்றாலும் இந்திய வரலாற்று பின்னணியை மிகத் துல்லியாக இந்தப் படத்தில் கமலஹாசன் சொல்லியிருப்பார். கதை சொல்லும் விதமும், நடிப்பும் பின்னிப் பிணைந்த அற்புதமான ஒரு கலைப்படைப்பு அது. ஆனால் இந்தப் படமும் மக்கள் மத்தியில் பெரிய வரவேற்பை பெறவில்லை. திரைப்படத் துறையில் இனி சேரவருவோருக்கும், ஏற்கனவே இருப்பவர் களுக்கும்,

திரைப்படத் துறை மாணவர்களுக்கும் பாடமாகவே அமைந்துள்ளது. ஒரு படத்தை எப்படி எடுப்பது என்று இயக்கத்தை கற்றும் கொள்ளும் பாடமாகவே ஹேராம் திரைப் படம் இன்றும் உள்ளது. இந்தப் படத்திற்கு வரவேற்பில்லை என்றாலும் அதைப் பற்றி கவலையில்லாமல் அடுத்த பல முயற்சிகள் பலபிரச்சனைகள் எல்லா வற்றையும் கடந்து நிற்கிறார் கமலஹாசன். அவரின் இதுபோன்ற புது புது முயற்சி களும் தோல்வி கண்டு அஞ்சாமல் பயண த்தைத் தொடர்வதும்தான் நடிப்பின் உச்ச த்தை தொட்டுள்ள கமலுக்கு இன்று செவாலியே விருது என்ற உயரிய விருது கலைவுலகின் சிறந்த சேவைக்காக வழங் கப்பட்டுள்ளது.பிரான்ஸ் நாட்டின் மிகஉயரிய செவாலியே' விருதுக்கு தேர்வு செய்யப் பட்டமைகாக நன்றி தெரிவித்துள்ள நடிகர் கமல்ஹாசன், கலை, இலக்கியத்துக்கு ஆற்ற வேண்டிய பணிகளுக்கான ஊக்கியாக கருதும் இவ்விருதினை எனது ரசிகர் களுக்கும், அபிமானிகளுக்கும் அர்ப்பணம் செய்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

பெங்களூர் நாட்கள், ஓகே கண்மணி உள்ளிட்ட பல்வேறு படங்களில் நடித்தவர் நித்யா மேனன். நிறைய படங்களில் நடிக்க எனக்கு வாய்ப்பு வருகிறது. எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்வதில்லை. இதனால் என்னை திமிர் பிடித்தவள் என சிலர் சொல்கின்றனர். அதுபற்றி எனக்கு கவலை இல்லை. நடிகையாவேன் என்று நான் எண்ணியதில்லை. கண்முன் தவறு நிகழும்போது அதை எதிர்ப்பேன். இது எனது குணம். தவறுகளை மக்கள் முன் படம்பிடித்து காட்டும் என்பதற்காக பத்திரிகை யாளராக ஆகத்தான் விரும்பினேன். ஆனால் விதி என்னை நடிகை யாகிவிட்டது. நடிப்பதை நம்பி என் வாழ்க்கை இல்லை. அதனால்தான் எல்லா வாய்ப்புகளையும் ஏற்காமல் தேர்வு செய்து நல்ல பாத்திரங்களில் மட்டும் நடிக்கிறேன். திரையில் நான் எப்படி வரவேண்டும் என்பதை தீர்மானிக்கும் உரிமை எனக்குத்தான் உள்ளது என்றார்.






தில்லுக்கு துட்டு பட வெற்றிக்கு பின், மெகா பட்ஜெட் பட கதாநாயகனாகி விட்ட சந்தானம், புதுமுக இயக்குனர் பச்சையப்பன் ராஜா இயக்கும் படத்தில் புலியுடன் நடிக்கிறார். இப்படத்தில், சந்தானம், புலியுடன் மோதும் காட்சிகளில், புலியை, "கிரபிக்ஸ் வடிவில் காண்பிப்பதற்காக, "கிரபிக்ஸ்" பணிகள் அமெரிக்க மற்றும் ஹொங்கொங் போன்ற நாடுகளில் நடக்கிறது. இக்கிரபிக்ஸ் பணிகளுக்காக மட்டுமே, நான்கு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

## மூன்று வேடங்களில் கார்த்தி

ட்ரீம் வாரியார் பிக்சர்ஸ் எஸ்.ஆர். பிரகாஷ் பாபு, எஸ்.ஆர்.பிரபு தயாரிக்கும் படம், 'காஷ் மோரா'. கார்த்தி ஹீரோவாக நடிக்கிறார். நயன்தாரா, ஸ்ரீதிவ்யா, விவேக் உட்பட பலர் நடிக்கின்றனர். 'இதற்குத் தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா' படத்தை இயக்கிய கோகுல் இயக்குகிறார். ஓம் பிரகாஷ் ஒளிப்பதிவு செய்கிறார். சந்தோஷ் நாராயணன் இசை அமைக்கிறார். 'இது ஹாரர், காமெடி, ஆக்ஷன், பீரியட் என்று பல்வேறு களத்தில் பயணிக்கும் கதையாக உருவாகிறது. கார்த்தி மூன்று வேடங்களில் நடித்துள்ளார். அந்த மூன்று தோற்றங்களுக்கு 7 மாதம் எடுத்துகொண்டு 47 தோற்றங்களை தேர்வு செய்து, அதிலிருந்து மூன்று வேடங்கள் உறுதி செய்யப்பட்டன.





## நடிப்பை நம்பி நான் இல்லை



சிவகார்த்திகேயன் நடித்துள்ள “ரெமோ“ படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து தற்போது போஸ்ட் புரொடக்‌ஷன்ஸ் பணிகள் இரவுபகலாக விறுவிறுப்புடன் நடைபெற்று வருகிறது. இந்த படத்தின் ரிலீஸ் திகதி ஒக்ரோபர் 7 என்று ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் விரைவில் ட்ரைலர் மற்றும் இசை வெளியீட்டு திகதிகள் அறிவிக்கப்படவுள்ளன. இந்நிலையில் இந்த படத்தின் டைட்டில் திடீரென மாற்றப்பட்டுள்ளது. “ரெமோ“ என்ற டைட்டில் தற்போது “ரெங்கநாதன் என்கிற மோகனா” என்ற டைட்டில் மாற்றப்பட்டுள்ளது. தமிழக அரசின் வரிவிலக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த டைட்டில் மாற்றப்பட்டுள்ளதாக தெரிகிறது.

## ரெமோவின் தலைப்பு மாற்றம்



## புலியுடன் நடிக்கும் சந்தானம்!

ன், மெகா பட்ஜெட்
னம், புதுமுக
இயக்கும் படத்தில்
ல், சந்தானம்,
புலியை, “கிரபிக்ஸ்“
பிக்ஸ்” பணிகள்
ங் போன்ற
க்ஸ் பணிகளுக்காக
ஒதுக்கப்பட்டுள்ளது.





பிரபல நடிகை கீர்த்திசுரேஷின் வீடு கல்யாண களையுடன் தடல் புடலாக திருமண ஏற்பாடுகள் நடந்து வருகிறதாம். ஆனால் திருமணம் கீர்த்தி சுரேஷுக்கு என்று நினைக்க வேண்டாம். அவரது உடன்பிறந்த சகோதரி ரேவதி சுரேஷுக்குத் தான் திருமண ஏற்பாடுகள் நடந்து வருகிறதாம். தென்னிந்திய திரையுலகின் பல திரைப்படங்களுக்கு விஷுவல் எஃபெக்ட் பணிகளை செய்து வரும் ரேவதி சுரேஷுக்கு கேரளாவில் உள்ள குருவாயூர் கோவிலில் வரும் செப்டெம்பர் 8 இல் திருமணம் நடைபெறவுள்ளதாகவும், செப்டம்பர் 11 ஆம் தேதி சென்னை பாடி பகுதியில் உள்ள திருமால் திருமகள் வசந்த மஹாலின் ரிசப்ஷன் நடைபெறும் என்றும் கீர்த்தி சுரேஷ் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

## கீர்த்தி வீட்டில் கல்யாணம்

# மக்கள் நாயகன்..



காலஞ்சென்ற முன்னாள் இலங்கைப் பிரதமர் திரு பிரேமதாசாவின் செயலாளராக இருந்த திரு விஜயதாச என்பவர், எதை யையுமே நேர்த்தியுடன் செய்ய விரும்பும் பிரதமருடன் பணியாற்றுவது என்பது சுலபமான விடயமல்ல என தன் செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

அளித்த செவ்வியில் ..

**உங்கள் முழுப் பெயர் என்ன?**

கன்டுகுமார ஹப்புடொரகமகே ஜோதியா ரத்தின விஜயதாச

**உங்கள் சொந்த இடம்?**

உதகமுல்ல, நுகேகொட. எனது சிறுபிராய த்தின் அதிக பகுதியை அங்குதான் கழி த்தேன்.

**உங்களது பெற்றோர் யார்?**

என்னுடைய அம்மாவின் பெயர் பொத் துவில ஆராய்ச்சிகே எமலீன் பீரிஸ் ஜயதுங்க. அவர் நவின்ன, மகரகம என்னுமிடத்திலி ருந்து வந்தவர். அப்பாதான் கன்டேகுமார ஹப்புடொரகமகே ஹென்றி விஜயதாச. அவர் எத்திலிய கொடவைச் சேர்ந்தவர். எனது பெற்றோர்கள் இருவருமே பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள்.

**உங்களுடன் கூடப் பிறந்தவர்கள்.?**

நாம் எழுவரில் நான்தான் தலைப்பிள்ளை. எனக்கு மூன்று சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் உண்டு.

**நீங்கள் எங்கே கல்வி கற்றீர்கள்?**

எனது முதற் பாடசாலை தளபத்பிட்டிய பௌத்த கலவன் பாடசாலை. இப்பொழுது அதன் பெயர் சித்தார்த்த வித்தியாலய. அதன் பின்னர் ஹவ்லொக் டவுனின் ஆங்கில மொழியிலான பாடசாலையில் கல்வி தொட ர்ந்தது. பன்னம்பிட்டியவில் உள்ள தர்மபாலா கல்லூரியில் பல்கலைக் கழக நுழைவுக்கான கல்வியைக் கற்றேன். தரம் நான்கிலிருந்து இங்கேதான் என் கல்வி தொடர்ந்தது.

**பட்டப் படிப்பிற்கு நீங்கள் எந்தெந்த பாடங் களைத் தேர்வு செய்தீர்கள்?**

பெரதேனியாப் பல்கலைக் கழகத்தில் பூமிசாஸ்திரப் படிப்பில் பட்டம் பெற என் கல்வியைத் தொடர்ந்தேன்.

**உங்களுடன் கல்விகற்றவர்களில் இன் றுயார் இருக்கிறார்கள்?**

சினிமாத்துறையில் ஜாம்பவானாகி பிரபல் யமாகவுள்ள திஸ்ஸா அபேயசே கரவைக் குறிப்பிடலாம். மாஜி இராணுவ கமாண்டர் றோஹான்டாலுவத்த எனது வகுப்புத் தோ ழன். மாஜி விமானப் படை கமாண்டராக இருந்த ஒலிவர் ரணசிங்க ஒரே பாடசாலை யில் கற்றவர். கடற்படை யின் உயர் அதிகா ரியாக இருந்த டீ.கே. டிஸநாயக்க இன் னொருவர். ஒரே பாடசாலையிருந்து மூவர் முப்படைகளின் உயர் அதிகாரிகளாக இருந் தது கவனிக்கத் தக்கது. நான் ஹவ்லொக் டவுனில் படித்துக் கொண்டிருந்த சமயம் இண்டாம் உலக மகாயுத்தம் வெடித்தது.

**உலக மகாயுத்தம் பற்றிய உங்கள் அனு பவம் என்ன?**

நானும் எனது சகோதரனும் ஹவ்லொக் டவுன் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த நேரம் அது. பாடசாலையின் பின்புறமாகஇரு பதுங்கு குழிகளை நிர்மாணித்தார்கள். வகு ப்புகள் பாதுகாப்பு பயிற்சிக்காகவும், உணவு உற்பத்திக்காகவும் அப்பொழுது ஒதுக்கப்ப ட்டிருந்தன.

**அரச சேவையில் இரண்டு யுகங்களைச் சந்தித்தவர் என்ற முறையில், இன்றைய அரசசேவை பற்றிஉங்கள் கருத்து என்ன?**

அது பின்தங்கிய நிலையில் இருப்பதாக நான் கருதுகிறேன். இன்றைய கல்வித் திட்டமே இதற்கான காரணம். 1960இல் நான் சிவில் உத்தியோகஸ்தர்களுக்கான பரீட்சை யில் சித்தியடைந்தேன். ஆனால் இது 1963 இல் நீக்கப்பட்டு விட்டது. 1956இல் இந்த இறக்கநிலை ஆரம்பமாயிற்று. அரசியல்வா திகளின் பிழைகளைத் திருத்துமளவிற்கு அன்றைய சிவில் அதிகா- ிகள் செயற்பட்டா ர்கள். நானும் அப்படித்தான் பணியாற்றி இருந்தேன்.

**ஓர் உதாரணம் சொல்லுங்களேன்?**

எல்லோரும் திரு பிரேமதாச மிகவும் கண்டிப் பானவரென நினைத்தார்கள். ஆனால் அவர் என் ஆலோசனையை எப்பொழுதுமே செவி மடுப்பார். சில சுற்றுநிருபங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டினால், ஒன்றில் அதை நீக்கி விடுவார் அல்லது தவிர்த்து விடுவார். 1983,இல் நான் இவரின் செயலாளராக நியமிக்கப்பட்டேன். இரு வாரங்கள் கழித்து என் மேசை மீது நிறையக் கோப்புகள் கிடப்பதைக் கண்டேன். அலரி மாளிகை விநியோகம் சம்பந்தப்பட்ட பல்வேறு பற்றுச் சீட்டுக்கள் அடங்கிய கோப்புகள்தான் மேசை யில் கிடந்தவை. நான் இவற்றில் எதையுமே அங்கீகரிக்கவில்லை. முன்னைய காலங்க ளில் இருந்த பிரதமர்களால் இப்படியான பற்றுச் சீட்டுக் கொடுப்பனவுகள் அந்தந்தப் பிரதமர்களின் தனிப்பட்ட கணக்கு நிதிகளி லிருந்து எடுக்கப்பட்டு வந்தன. பிரதமர் ஸ்ரீமாவோ றோஸ்மாட் மாளிகையில்தான் வசித்து வந்தார். பிரதமர் டட்லி சேனநாயக்கா வுட்லான்ட் மான்ஸனில் வசித்தார். இவர்கள் இருவரும் பொது வைபவங்களில் கலந்து கொள்ள மட்டும் அலரி மாளிகைக்கு வருவ துண்டு.

**தொகையாகக் கிடந்த கோப்புகளின் கதி என்னவாயிற்று?**

விநியோகஸ்தர்கள் முறையிட்டதனால், ஏன் கொடுப்பனவை அங்கீகாரம் செய்யவில்லை என்று ஜனாதிபதி கேட்டார். அப்படியொரு முறை வழக்கில் இல்லை என்று அடித்துக் கூறினேன். என்னை வேலையிலிருந்து ஜனாதிபதி நீக்கிவிடுவாரென நான் நினை த்தேன். ஆனால் அவர் அப்படிச் செய்ய வில்லை. முன்னைய பிரதமர்கள் அலரிமாளி கையில் வசிக்வில்லை என்பது உண்மைதான். ஆனால் சீனா, ரஷ்யா உட்பட பல வெளிநாட்டு அரசுகள் இருப்பிட, உணவு, வாகனச் செலவுகளுக்கு பணம் கொடுத்துள்ளன. நீங்கள் இதுபற்றி சீனத் தூதுவராலயத்தில் விசாரிக்கலாம். அதன் முடிவில் நாம் நடவடிக்கை எடுககலாம் என்று கூறியிருந்தார். நானும் அந்த விசாரணைக்குப் பின் பணக் கொடுப்பை அங்கீகாரம் செய்தேன்.

**இது சம்பந்தமாக உங்களுக்கு பிரச்சினை கள் ஏற்படவில்லையா?**

இல்லை. ஜனாதிபதியின் அங்கீகாரத்துட னேயே எல்லாம் நடந்தது.

**நிர்வாகச் சட்டமூலங்களுக்கு அமைய இந்தக் கொடுப்பனவுகள் செல்லுபடிய ற்றவை என்று விவாதித்தால் என்ன செய்திருப்பீர்கள்?**

இன்றுவரை அப்படியொன்றும் இல்லை. ஜனாதிபதி அங்கீகரித்தால் பிறகென்ன விவாதம்? சீன அரசும் இப்படித்தான் செய் கிறது. ஜனாதிபதி இந்தப் பிரச்சினைக்கு இப்படித்தான் சாதுர்யமாக முகம் கொடுத் திருந்தார்.

**எப்படி நீங்கள் சிவில் சேவைக்குள் நுழை ந்தீர்கள்?**

1960 மார்ச் மாதம் நான் முதலில் அரச சேவையில் இணைந்தேன். எனக்கு இரு வருடப் பயிற்சி அளிக்கப்பட்டது. பொதுஜன சேவை பற்றி முழுமையாக அறிய இந்தப் பயிற்சி தேவைப்பட்டது.

**ஒரு காலகட்டத்தில் பல பதவிகளை நீங்கள் பொறுப்பேற்று இருந்தீர்கள்? அப்பொழுது வேலைப் பளுவை எப்படித் தாங்கிக் கொண்டீர்கள்?**

உள்ளூர் வீடமைப்பு நிர்மாண அமைச்சின் நிரந்தரச் செயலாளர், லான்ட் றிபோம் கமிஷனின், ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை, சிறீலங்கா பொறியியல் கூட்டுத்தா பனம் ஆகியவற்றின் தலைவர், என்று பல பதவிகள் எனக்குத் தரப்பட்டிருந்தன. இதை விட பிரேமதாசாவின் செயலாளர் பதவி வேறு. இவற்றையெல்லாம் எப்படிச் செய்து முடித்தேன் என்று இப்பொழுது நினைத்துப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது.

**எப்படி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாப னத்தில் இணந்தீர்கள்?**


1960இல் எனக்குக் கிடைத்த முதல் அரச பணியே இதுதான். அப்பொழுதிருந்த கல்வி, ஒலிபரப்பு அமைச்சில் நான் உதவிச் செயலாளராக இணைந்து கொண்டேன்.

**1971 இல் வெடித்த கிளர்ச்சி பற்றிய உங் கள் அனுபவம் என்ன?**

அப்பொழுது நான் கேகாலையின் அரச அதிபராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அங்கு பொலிஸ் சுப்பிரென் டனாகக் கடமையாற்றியவர் அனா செனிவரத்ன. பின்பு இவர் பொலிஸ் அதிப ராகப் பதவி உயர்த்தப்பட்டவர். இவர் கேகாலைக்கு வருமுன்னர் புலனாய்வு தலைமை அதிகாரியாக இருந்தவர். இளவட்டங்கள் கேகாலையெங்கும் புரட்சி யில் இறங்கியிருப்பதாக இவர் என்னிடம் கூறினார். காடுகளில் வகுப்புகள் நடாத்தி வருவதோடு, கெரில்லா மோதல்களிலும் பயிற்சி கொடுத்து வருவதாகவும் இவர் கூறினார். குண்டுகள் செய்வதற்காக இரசா யணப் பொருட்களை பாடசாலை ஆய்வு கூடங்களில் யாரோ களவாடி வருவதாக பொலிஸ் அறிக்கைகள் இருந்தன. நெலுண்டியாவில் குண்டு வெடித்து பலர் காயமடைந்தார்கள். இதன் பின்னணியில் ஜனதா விமுக்த பரமுனஇருந்ததாக அறியப் பட்டது.

(தொடர்ச்சி ... 21 இல்)







# சிறுவர் பக்கம்

## வாரமொரு குறள்



*குறள் 44*

*பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை*
*வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.*

**பொருள்**

பழிக்கு அஞ்சாமல் சேர்த்த பொருள் கணக்கின்றி இருப்பினும் அதைவிட, பழிக்கு அஞ்சிச் சேர்த்த பொருளைப் பகுத்து உண்ணும் பண்பிலேதான் வாழ்க்கையின் ஒழுக்கமே இருக்கிறது.

## விடுகதைகள்

1. நான் உருக இருள் விலகும். நான் யார்?
2. பச்சை வண்ணப் பெட்டிக்குள் பளிச்சிடும் முத்துக்கள்!
3. கொம்புகள் இரண்டுண்டு மாடல்ல..., வேகமாய் ஓடும் குதிரையல்ல..., நிற்கக் கால் உண்டு மனிதன் அல்ல... இது என்ன?
4. இடி இடிக்குது, மின்னல் மின்னுது..., மழை மட்டும் பெய்யலே... இது என்ன?
5. உயிர் இல்லா நீதிபதியின் ஒழுங்கான நியாயம்... இது என்ன?
6. ஆயிரம் பேர் அணிவகுப்போம்! ஆரவாரம் இருக்காது!... நாங்கள் யார்?
7. தேகம் சிவப்பு..., வாய் அகலம்... தகவல் எல்லாம் சாப்பாடு... நான் யார்?
8. மழை பெய்தால் மலரும் பூ... இது என்ன?

விடைகள்:
1. மெழுகுவர்த்தி 5. தராசு
2. வெண்டைக்காய் 6. எறும்புக் கூட்டம்
3. சைக்கிள் 7. தபால் பெட்டி
4. பட்டாசு 8. குடை

## வௌவால்



தகுந்த வரத்தை வாங்கிடவா
தலைகீழாகத் தொங்குகிறாய்?
பகலில் எவரோ திட்டினரா?
இரவில் மட்டும் சுற்றுகிறாய்.

குடைபோல் சிறகை விரித்தபடி
குழந்தை போலே ஆடுகிறாய்.
குட்டிச் சத்தம் கேட்டாலும்
'கூகீ' என்றே கத்துகிறாய்.

பழந்தரும் மரத்தின் கிளைகளிலே
பகலில் முழுக்க உறங்குகிறாய்.
பார்ப்பதற்கு எலி முகமாய்
ஏனோ தோற்றம் தருகின்றாய்


முதுகில் எலும்பு இருக்கிறதே
முயற்சிகள் உண்டா உன்னிடத்தில்?
முயன்று முழுதாய்ச் செய்தாலே
தோல்விகள் வருமா கிட்டத்தில்?

## வானத்தில் அன்னப்பறவை!




விண்வெளியில் பல நட்சத்திரத் தொகுதிகள் அமைந்துள்ளன. இந்த நட்சத்திரக் கூட்டங்களை ஒன்றாகப் பார்ப்பது நமக்குப் பல உருவங்களை நினைவுபடுத்தும். நட்சத்திரப் புள்ளிகளை இணைத்து விதம் விதமாக உருவங்களைக் கற்பனை செய்து மகிழலாம். விண்வெளியின் வட பகுதியில் 88 நட்சத்திரத் தொகுதிகள் உள்ளன. அதில் ஒரு நட்சத்திரத் தொகுதி 'சிக்னஸ்' (Cygnus) எனப்படுகிறது. கிரேக்க மொழியில் 'சிக்னஸ்' என்றால் 'அன்னம்' எனப் பொருள். சிக்னஸில் உள்ள ஒன்பது நட்சத்திரங்கள் பார்க்க அன்னப் பறவை போன்றஅழகான தோற்றத்தைத்தருகிறது. சிக்னஸில் உள்ள மிகப் பிரகாசமான நட்சத்திரம் 'டெனெப்' (Deneb). இது சூரியனைவிட சுமார் 60,000 மடங்கு பிரகாசமானதாம்! 'சிக்னஸ்' நட்சத்திரத் தொகுதியின் நான்கு நட்சத்திரங்களை ஒன்றாகப் பார்க்கும்போது சிலுவை போலவும் தெரிவதால் இதை 'வட சிலுவை' (Northern Cross) எனவும் குறிப்பிடுகின்றனர். அடுத்தமுறை வானில் உள்ள நட்சத்திரங்களைப் பார்க்கிறபோது நீங்களும் என்ன மாதிரியான சித்திரங்கள் தெரிகிறது என்பதை அறிந்து மகிழுங்கள்!

விண்வெளியில் சுமார் 400 பில்லியன் நட்சத்திரங்கள் உள்ளன. இரவு வானில் கிட்டத்தட்ட 3000 நட்சத்திரங்களை வெறும் கண்களாலேயே நம்மால் பார்க்க முடியும். பூமிக்கு மிக அருகில் உள்ள நட்சத்திரம் சூரியன். அடுத்தபடியாக 'பிராக்ஸிமா சென்டாரி' (Proxima Centauri) என்ற நட்சத்திரம் பூமிக்கு மிக அருகில் உள்ளது. பூமியிலிருந்து 4.2 ஒளி ஆண்டுகள் தொலைவில் இது உள்ளது.




## நம்பிக்கை


பணக்கார இளைஞன் ஒருவனின் விலை உயர்ந்த கார் அவன் வீட்டின் வெளியே நின்று கொண்டிருந்தது. அந்த வழியாக வந்த ஓர் ஏழைச்சிறுவன் அருகில் சென்று அந்த வண்டியை எட்டிப் பார்த்தான். பின் தொட்டுப் பார்த்தான்.



அதன் அழகு அவன் மனதைக் கட்டிப் போட்டது. அதைப் பார்த்த இளைஞன் சிரித்துக்கொண்டே "இது என் அண்ணன் எனக்குப் பரிசாகத் தந்தது" என்றான். அதைக் கேட்ட சிறுவனின் முகத்தில் வியப்பு ஒட்டிக்கொண்டது. "உனக்கும் இப்படி ஓர் அண்ணன் இருந்திருக்கலாம் என நீ ஆசைப்படுகிறாயா?" என்றான் அந்த இளைஞன். அதற்கு சிறுவனோ சிறிதும் யோசிக்காமல், "இல்லை அப்படி ஓர் அண்ணனாக நானும் வளர வேண்டும் என்று விரும்புகிறேன்" என்றான்.

இதுதான் நம்பிக்கை. அடுத்தவரிடம் கை ஏந்தாமல், தான் பிறருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் தான் நல்ல நம்பிக்கை.


## தலை போல வருமா?



எறும்புகளுக்கு பல சிறப்பு திறமைகள் உண்டு. தங்களைவிட பல மடங்கு எடையை எறும்புகளால் தூக்க முடியும். தங்கள் உடலால் 'பாலம்' அமைக்க முடியும். எறும்புகள் ஏனைய பூச்சியினங்களை விடவும் அதிக காலம் வாழக் கூடியது. கிட்டத்தட்ட 30 வருடங்கள் வரை வாழும். இப்படி பல திறன்களை சொல்லலாம். ஆனால், எறும்புகளுக்கு தங்கள் கூட்டத்தில் மொத்தம் எத்தனை எறும்புகள் இருக்கின்றன என்பதைப் பற்றி, மிக துல்லியமான கணிப்பு இருப்பதாக உயிரியல் விஞ்ஞானிகள் சொல்கின்றனர். வழக்கம்போல ஒரு எறும்புடன் இன்னொன்று முட்டிக் கடந்து செல்லும் போதே, அவற்றால் இந்த துல்லியமான கணிப்புக்கு வர முடிகிறது. இந்த உணர்வு, எறும்புகளின் கூட்டத்திற்கு பாதுகாப்பை தருகிறது. புதிய இடத்தில் புற்று அமைக்க அல்லது புதிய இடத்தில் உணவு தேட வேண்டும் என்றால் எல்லா எறும்புகளும் கூட்டமாக கிளம்புவதில்லை. முதலில் எறும்புக் கூட்டத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் சில, 'தேடல் பணியாளர்'களை அனுப்பி பார்த்து வரச்சொல்லி, அதன் பிறகே அவை செல்கின்றன.

இது போன்ற தேடல் முறைகளை கணினி வலைப் பின்னல்களில் பயன்படுத்த முடியும் என்று, இப்போது கணினி விஞ்ஞானிகள் சொல்கின்றனர். உதாரணமாக, 'பேஸ்புக்'கில் எத்தனை பேர் குறிப்பிட்ட அரசியல் கட்சியினர் இருக்கின்றனர் என்பதை கண்டறிய, எறும்புகளைப் போல, நண்பர், நண்பரின் நண்பர், அவரை பின்தொடருபவர் என்று தொடர்பு கொண்டாலே கட்சியினரின் சதவீதத்தை கணிக்க முடியும் என்கின்றனர் விஞ்ஞானிகள். இது குறித்த ஆய்வை, அமெரிக்காவிலுள்ள எம்.ஐ.டி., கணினி அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆய்வக விஞ்ஞானிகள் சமீபத்தில் வெளியிட்டுள்ளனர்.



# கண்ணிலே கான்சரா?

'என்னது.. கண்களிலும் கான்சரா?' என விழிகளை விரிக்காமல் விவரங்களைப் படியுங்கள். கண்களில் வரக் கூடிய புற்றுநோய்களில் மிகவும் பரவலானது ரெட்டினோபிளாஸ்ட்டோமா. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தாக்கக் கூடியது இது. ஒரு கண்ணிலோ, இரண்டு கண்களிலுமோ வரலாம். சில நேரங்க ளில் இது மூளை வரை தாக்கக் கூடியது. அதை ட்ரைலேட்டரல் ரெட்டினோ பிளா ஸ்ட்டோமா என்கிறோம். ரெட்டினோ பிளாஸ்ட்டோமா புற்றுநோயின் முதல் அறிகுறியாக குழந்தையின் கண்கள் பூனைக்கண்கள் மாதிரித் தெரியும். கேட்ஸ் ஐ ரெஃப்ளெக்ஸ் (Cat's Eye Reflex) என்று சொல்வோம். அதன் பெயர் லூகோகோரியா (Leukocoria) கோரியா என்றால் கண்ணின் பாப்பா. அந்த பாப்பா பகுதிக்குள் வெள்ளையாக பின்னால் விழித்திரையில் புற்றுநோய் தெரியும். அதனால் கண் பூனைக்கண் போலத் தெரியும். ஒரு கண் சிவப்பாகவும் இன்னொரு கண் வெள்ளையாகவும் தெரியும். அதை வைத்துத்தான் பெற்றோர் கண்டுபிடிப்பார்கள்.

ரெட்டினோபிளாஸ்ட்டோமாவுக்கு பரம்பரைத் தன்மையும் காரணமாக இருக்கலாம். குடும்பத்தில் யாருக்கேனும் ரெட்டினோ பிளாஸ்ட்டோமா இருந்தால், குழந்தை பிறந்ததும் உடனடியாக விழித்திரை சிறப்பு மருத்துவரிடம் காட்டி, குழந்தைக்கு புற்றுநோய் இருக்கிறதா என சோதித்துக் கொள்ள வேண்டியது அவசியம். அதன் பிறகும் அடிக்கடி பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டும். ரெட்டினோபிளாஸ்ட்டோமாவுக்கு முன் காலத்தில் ஒரே தீர்வு நியூக்ளியேஷன் (Enucleation). அதாவது, அந்தக் கண்ணையே எடுத்துவிட்டு, இம்பிளான்ட் என ஒன்றை வைத்து பக்கத்தில் உள்ள கண்ணைப் போலவே தோற்றமளிக்கச் செய்ய முடியும். நியூக்ளியேஷன் செய்துவிட்டு, கண்ணை மூளையோடு சேர்க்கிற ஒப்டிக் நரம்புப் பகுதி யில் புற்றுநோய் செல்கள் இருக்கின்றனவா என்பதையும் மைக்ரோஸ்கோப் வைத்துப் பார்க்க வேண்டும்.

தேவைப்பட்டால் அந்தக் கண் உட்காரும் சாக்கெட் போன்ற ஆர்பிட் பகுதிக்கு ரேடியேஷன் மற்றும் கீமோதெரபி கொடுத்துவிட்டு, பிறகு இம்பிளான்ட் வைக்க வேண்டும். சீக்கிரமே கண்டுபிடிக்கும் பட்சத்தில் இப்போது பிராக்கி தெரபி (Brachy Therapy) என ஒன்று வந்திருக்கிறது. ரேடியோ ஆக்டிவ் மெட்டீரியலை கண்ணில் கட்டிகள் உள்ள குறிப்பிட்ட இடத்தில் வைத்துத் தைத்துவிடுவார்கள். அது அந்த இடத்தில் மட்டும் ரேடியோதெரபியை கொடுக் கும். கண்ணுக்குள் செலுத்தக்கூடிய கீமோ தெரபி மருந்துகளும் (Cisplatin) இப் போது வந்துள்ளன. என்னதான் நவீன சிகிச்சைகள் வந்தாலுமே, கண்களுக்குள் புற்றுநோய் வந்து விட்டால் பார்வை பறிபோகிற வாய்ப்புகள் மிக மிக அதிகம். பூனைக்கண் மாதிரி அறிகுறி காட்டலாம் அல்லது கண்கள் சிவந்து வீங்கிப் போய் கண் வலி வந்தது போலக்கூட குழந்தையிடம் மாற்றங்களைக் காணலாம்.

இதை ஆரம்பத்திலேயே கவனிக்காமல் அலட்சியப்படுத்தினால், அது குழந்தையின் நுரையீரல், கல்லீரல், எலும்புகள் போன்றவற்றையும் பாதிக்கும். இது ரொம்பவே தீவிர பாதிப்புகளைக் கொடுக் கக் கூடிய புற்றுநோய் என்பதால் எத் தனை சீக்கிரத்தில் கண்டுபிடித்து சிகிச்சைகளைத் தொடங்குகிறோமோ அவ்வளவு நல்லது. அடுத்தது குழந்தைகளுக்கு வரக்கூடிய முக்கியமான புற்றுநோய் ராப்டோமயோசார்கோமா (Rhabdomyosarcoma). கண்களைச் சுற்றியுள்ள தசைகள் மற் றும் மென் திசுக்களில் வரக்கூடிய புற்றுநோய் ஒன்றும் உள்ளது. இதில் கண்கள் மிகவும் வீங்கிவிடும். கண்ணே முன்னாடி வருகிற மாதிரியான நிலை தெரியும். இதற்கு எக்சென்ட்டெரேஷன் (Exenteration) என்கிற முறையில்தான் சிகிச்சை அளிக்க வேண்டும்.

ரெட்டினோபிளாஸ்ட்டோமா முன்காலத்தில் குழந்தையின் உயிரையே பறிக்கிற அளவுக்கு அதிகமாக இருந்தது. இன்று நவீன மருத்துவ சிகிச்சைகளின் மூலம் அது குறைந்திருக்கிறது. இந்த இரண்டு வகை புற்றுநோய்களைத் தவிர பெரியவர்களுக்கு வரக்கூடிய எல்லா வகையான புற்று நோய்களும் குழந்தைகளுக்கும் வரலாம். தவிர, உடலில் வரக்கூடிய புற்று நோய், உதாரணத்துக்கு லுகிமியா (Leukemia) என்கிற ரத்தப் புற்றுநோயில், குழந்தைகளின் கண்களில் ரத்தக் கசிவு இருக்கும். லுகிமியாவில் ரத்தத்தின் அடர்த்தி அதிகமாகிவிடும். உடலின் மற்ற பகுதிக ளில் உள்ள ரத்தக் குழாய்களைவிட விழித் திரையில் உள்ள ரத்த நாளங்கள் மெலிதாக இருக்கும்.

எனவே ரத்தம் அதிக அடர்த்தி காரணமாக சீராகப் பாயாமல் நிற்கும் போது ரத்தக் குழாய் வெடித்து கண்களுக்குள் ரத்தக் கசிவு ஏற்படும். நிறைய குழந்தைகளை இந்த நிலையில் பார்க்கிறோம். அவர்களுக்கு எளிமையான ஒரு ரத்தப் பரிசோதனை செய்து பார்த்தால் லுகிமியா இருப்பது தெரிய வரும். உடலில் வேறு எங்காவது புற்றுநோய் இருந்தால் விழித்திரையின் பின்னால் உள்ள கோராய்டு என்கிற அமைப்பை பாதிக்கும். மெட்டாஸ்ட்டிட்ஸ் எனப்படுகிற அந்த நிலையில் விழித்திரை பிரிந்து எக்யூடேட்டிவ் ரெட்டினல் டிடாச்மென்ட் (Exudative retinal detachment) வரலாம். இதற்கெல்லாம் முதலில் உடலில் புற்றுநோய் பாதித்த பகுதிக்கு சிகிச்சை அளிக்க வேண்டும். கண்களில் ஏற்படுகிற ரத்தக் கசிவுக்கு லேசர் சிகிச்சை அல்லது விட்ரெக்ட்டமி என்கிற அறுவை சிகிச்சை பரிந்துரைக்கப்படும். எனவேதான் சொல்கிறோம்.... கண்களைக் கவனியுங்கள்!



வெயில் காலத்தில் விருந்தாளிகள் வந்து ஜூஸ் தயாரிக்க நிறைய ஐஸ் கட்டிகள் தேவைப்படும் போது பெரிய மற்றும் சிறிய பிளாஸ்டிக் பைகளில் நன்னாரி வேரை சிறியதாக வெட்டி கழுவி தண்ணீருடன், ரப்பர் பேண்ட் போட்டு ப்ரீஸ் செய்து உபயோகிக்க, எளிதில் ஜூஸ் தயாரிக்கலாம்.

முதல் நாள் வடித்த சாதம் மீந்து போய் விட்டால் அதை மிக்சியில் அரைத்து அதனுடன் இரண்டு கைப்பிடி கடலைமாவு சேர்த்து, அரைத்த பச்சை மிளகாய் விழுது உப்பு, கறிவேப்பிலை, சிறிது சீரகம் மற்றும் தயிர் சேர்த்து கலந்து தண்ணீர் விட்டு நன்கு கலந்து தோசையாக வார்த்தால் தோசை சூப்பர் சுவையாக இருக்கும்.

கருணைக்கிழங்கு அரிப்பு இல்லாமல் இருக்க எலுமிச்சை நீர் அல்லது புளிக் கரைசலில் வேகவைக்க வேண்டும். மூல வியாதி, உடல்பருமன், மூட்டுவலி, புற்று நோயை விரட்டிவிடும். இதன் கார்ப்பு சுவை உடல் கொழுப்பை குறைக்க உதவும். ரத்த ஓட்டத்திற்கு நல்லது.

தர்பூசணித் தோலை மெல்லியதாக சீவி எண்ணெயில் பொரித்து மிளகாய், உப்புப் பொடி தூவி சாப்பிடலாம். நடுவிலுள்ள வெண்மைப் பகுதியை கூட்டு அல்லது அடை, வடையில் துருவிப் போட்டு செய்யலாம்.

# தேன் கலந்து...



- பாலில் தேன் கலந்து இரவில் சாப்பிட நல்ல தூக்கம் வரும், இதயம் பலம் பெறும்.
- பழச்சாற்றுடன் தேன் கலந்து சாப்பிட்டால் புது ரத்தம் உண்டாகும்.
- எலுமிச்சைப் பழச்சாற்றுடன் தேன் கலந்து சாப்பிட்டால் இருமல் குணமாகும்.
- நெல்லிக்காய் சாற்றுடன் தேன் கலந்து சாப்பிட்டால் இன்சுலின் சுரக்கும்.
- ஒரேஞ் பழத்துடன் தேன் கலந்து சாப்பிட்டால் நல்ல தூக்கம் வரும். ரோஜாப்பூ குல்கந்தில் தேன்கலந்து சாப்பிட்டால் உடற்சூடு தணியும்.
- தேங்காய்ப்பாலில் தேன் கலந்து சாப்பிட்டால் குடல்புண், வாய்ப்புண்கள் ஆறும்.
- இஞ்சியுடன் தேன் கலந்து சாப்பிட்டால் பித்தம் தீரும்.
- கரட்டுடன் தேன் கலந்து சாப்பிட்டால் ரத்தச்சோகை போகும்.
- தேனில் சுண்ணாம்பு கலந்து தடவ கட்டிகள் உடையும்.

# கூந்தல் வளர்ச்சியடைய...





தலைமுடி உதிர்வதைத் தடுத்து முடியின் வேரை வலுப்படுத்தி கூந்தல் வளர்ச்சியை அதி கரிக்கச் செய்வதில் வெங்காயம் முக்கிய பங்காற்றுகிறது என லாம். இதற்கு காரணம் வெங்காயத்தில் உள்ள சல்ஃபர் என்ற வேதிப் பொருள்தான். வெங் காயச் சாற்றை தலையில் 5 நிமிடம் மசாஜ் செய்வதனால் ரத்த ஓட்டத்தை அதி கரிக்கச் செய்கிறது.

வெங்காயச் சாறு தயாரிக்கும்போது நறுக்கிய வெங்காயத்தை தண்ணீரில் போட்டு நன்கு கொதிக்க வைக்க வேண்டும். பின்னர் வெங்காயம் நன்கு வெந்து அதிலுள்ள சாறு வெளியேறியவுடன் அந்த நீரை வடிகட்டி ஸ்கல்ப்பில் நன்கு மசாஜ் செய்ய வேண்டும். பின்னர் ஒரு மணி நேரம் கழித்து ஷம்பு போட்டு தலை முடியை அலசினால் ஒரே மாதத்தில் முடி கொட்டுவது நின்றுவிடும். கொதிக் கும் தேங்காய் எண்ணெயில் வெங்காயச் சாறு கலந்தும் தலையில் தடவலாம். சூடு ஆறிய பின்னர் வெங்காய சாறு கலந்த சுத்தமான தேங்காய் எண்ணெயை தலை யில் தடவி தலை குளித்து வந்தால் தலைமுடி வேரை வலுப்படுத்தி வளர்ச்சியடையச் செய்கிறது. இதே போல தேனுடன் வெங்காயச் சாறு கலந்தும் தலை முடிக்கு தடவலாம். 2 வாரங்களில் முடி உதிர்வது குறைந்து 4 வாரத்தில் புதிதாக முடி வளரும். ஒலிவ் எண் ணெயை 15 நிமிடம் தலையில் தேய்த்து பின்னர் வெங்காயச் சாற்றினைக் கொண்டு மசாஜ் செய்து 10 நிமிடத்துக்குப் பின் ஷம்பு போட்டு மிதமான சுடுநீரில் தலையை அலசினால் தலைமுடி நன்கு வளரும்.

# உலக அரசியல் ஒரு பார்வை



## யாத்திரை சென்ற மைத்திரி

வெளிநாட்டு அரசியலை கூறுவதற்கு முன்னர் பிள்ளையார் சுழி போடுவது போல எமது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா திருப்பதி யாத்திரை சென்றதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. சென்ற சனிக்கிழமை 20ம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா ஓர் ஆண்டு நல்லாட்சி நிறைவை முன்னிட்டு திருப்பதி வெங்கடாச்சலபதியை தரிசிக்க ஆந்திரா பிரதேசம் சென்றார். அவரது மனைவி ஜெயந்தி புஸ்பகுமாரி சிறிசேனாமகன் தஹம சிறிசேனா ஆகியோரும் சென்றிருந்தார்கள்.

மைத்திரிபால சிறிசேனா திருப்பதிக்கு யாத்திரை சென்றது இது 2 ஆவது முறையாகும். சிறிசேனா அவரது குடும்பத்துடன் திருப்பதிக்கு வருவதை அடுத்து தமிழ் நாட்டு ஆந்திர எல்லையில் உள்ள தமிழ் நாட்டு அரசியல் கட்சி பிரமுகர்களையும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாளர்கள் அடங்கலாக மொத்தம் 30 பேரை ஆந்திர பொலிஸார் கைது செய்து காவலில் வைத்தார்கள்.

மைத்திரிபால சிறிசேனாவும் அவரது குடும்பத்தினரும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணிக்கு திருப்பதி சுப்ரபாத பூசையில் பங்குபற்றி சாமி தரிசனம் செய்தார்.

அதை யடுத்து மீண்டும் 6.30 மணிக்கு விசேட பிரமுகருக்கான பூசையில் கலந்து கொண்டு மீண்டும் ஒரு முறை சாமி தரிசனம் செய்தார்.

சாமி தரிசனம் செய்து வெளியில் வந்தால் ஆந்திர அரசாங்கம் அவருக்கு வழங்கிய வாகன சாரதியை காணவில்லை. சாரதியை எதிர்பார்த்து 15 நிமிடங்களுக்கு மேல் மைத்திரிபால சிறிசேனா குடும்பத்தினருடன் காவல்நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சாரதி வரவில்லை என்றதும் ஆந்திர பொலி ஸார் பரபரப்பு அடைந்தார்கள். இதில் ஏதோ ஒரு சதி இருக்கின்றது என நினைத்து பாது காப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என செய்திகள் வெளிவந்தன. அதேநேரம் ஆந்திர பிரதேச வனத்துறை அமைச்சர் போயலா கோபாலகிருஸ்ண ரெட்டி திருப்பதி வெங்கடாச்சலபதியின் ஆனந்த நிலையம் அடங்கிய படத்தினை ஜனாதிபதிக்கு கையளித்தார்.




அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை நிரந்தர எதிரியும் இல்லை என்பது பொதுவாக கூறப்படும் வாக்கியம். சர்வதேச அரசியலிலும் இக் கூற்று பொருந்துவது குறிப்பிடத்தக்கது. பிராந்திய அரசியலில் நொந்து நூலாகிப் போகவேண்டிய சமயத்தில் காய்களை வெகுசாமர்த்தியமாக நகர்த்த வேண்டியுள்ளது. துருக்கிய ஜனாதிபதி ரிசப்தயிப் ஏர்துவான்ரஷ்யாவுக்கு மேற்கொண்ட விஜயமானது இரு நாட்டு உறவுகள் மேம்படா விட்டாலும் கூட சீரழியாமல் காப்பதில் கணிசமான பங்களிப்பை வழங்கிற்று என்றே கூறவேண்டியுள்ளது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர்புடினை சந்தித்த இவர் இருநாட்டு அரசியல் பொருளதார விடயங்கள் பற்றி மனம் திறந்து உரையாடியுள்ளனர்.

கடந்த எட்டு மாதங்களாக சம்பந்தப்பட்ட இரு நாடுகளுக்கும் இடையில் சுமுகமான உறவுகள் பேணப்படவில்லை. ஆனால் இரு நாடுகளும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளவும் தயாராக இல்லை.

காரணம் இருநாடுகளும் ஒன்றிலொன்று தங்கியிருக்க வேண்டியது அவசியத் தேவையாக உள்ளது. ஆகவே இரு நாடுகளும் நாசூக்காக அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்த வேண்டியுள்ளன. துருக்கியை பொறுத்தவரையில் ரஷ்யாவின் அணுசக்தி மற்றும் பெற்றோலியம் தேவையாக உள்ளது. அதுமட்டுமல்ல தங்களது அந்நிய செலாவணிக்கு ரஷ்ய சுற்றுலா பயணிகள் தேவை அவசியமாகவுள்ளது. யுத்தத்தில் முனைப்பு காட்டினாலும் கூட இரு நாடுகளின் அரசியல் எதிர்காலத்தையும் கேள்விக் குறியாக்கும் என்பது இருநாட்டு ராஜதந்திரிகளுக்கும் தெரியும்.

கால் நூற்றாண்டுகளாக தொடரும் ரஷ்ய -துருக்கிய உறவானது சிரியாவில் ஏற்பட்ட யுத்தத்தில் ரஷ்ய போர் விமானங்களை துருக்கி சுட்டு வீழ்த்தியதை அடுத்து இரு நாட்டு உறவுகளும் விரிசலின் உச்சக்கட்டத்தை அடைந்தது. எனினும் சமாதானமும் அல்ல போரும் அல்ல என்ற நிலையிலேயே இரு நாடுகளும் பயணிக்க வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டது.

இதேவேளையில் சர்வதேசரீதியில் இயன்ற அளவிற்கு எதிரி நாடுகளை குறைப்பதே தமது நோக்கமென துருக்கிய பிரதமர் பினாலியிஜ்திரிகும் குறிப்பிட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதேவேளையில் துருக்கிய ரஷ்ய தற்போதைய உறவு நிலை குறித்த விவகாரம் தொடர்பாக அமெரிக்க தரப்பு அச்சமடைந்து கொண்டிருக்கும் நிலையில் அமெரிக்க ஜனாதிபதி பராக்ஒபாமா அடுத்த மாத மளவில் வியட்நாம் தலைநாகர் லாவோஸிற்கு மேற்கொள்ள உள்ளார். இந்த விஜயமானது ஆசியப்பிராந்தியத்தில்தன் நட்புவட்டத்தை வலுப்படுத்தும் ஓர் நடவடிக்கையாக கருதப்படுகிறது. செப்டெம்பர் 6 தொடக்கம் 08 வரை நடைபெறவுள்ள நாடுகளில் உயர்மட்ட மாநாட்டில் சீனா, தென்கொரியா, ஜப்பான், அவுஸ்திரேலியா, ரஷ்ய நாட்டு தலைவர்களும் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுவதாக வெள்ளை மாளிகை வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன. லாவோஷிற்கு பயணம் மேற்கொள்ளும் முதல் அமெரிக்க ஜனாதிபதி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.



இதற்கிடையில் அடுத்த சில வருடங்களில் ஆபிரிக்காவின் தென் பகுதி நாடுகளில் பெரும் உணவு நெருக்கடி எற்படக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுவதாக உலகப் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இயற்கை அனர்த்தம் மற்றம் சூழல் வெப்பமடைதல் போன்ற காரணிகளால் 18 மில்லியன் மக்களுக்கு உணவு நெருக்கடி ஏற்படலாம் என உலக உணவு ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேற்கூறப்பட்ட காரணிகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் சம்பந்தபபட்ட நாடுகள் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென உலக நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மற்றும் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக பாகிஸ்தான் விடுத்த நல்லெண்ண சமிக்கையை இந்தியா நிராகரித்துள்ளது. பாகிஸ்தான் வெளியுறவுத்துறை ஆலோசகர் அயஸ்வாஸ் அகமது இவ் விடயம் தொடர்பான சமரசப் பேச்சு வார்த்தையில் ஆர்வம் காட்டிய போதிலும் இந்திய வெளியுறவுச்செயலர் பாகிஸ்தான் தரப்பினரின் இம் முயற்சியை நிராகரித்துள்ளதாக இந்தியதரப்பு தெரிவித்துள்ளது. அதே வேளையில் இந்திய வெளியுறவுச் செயலர் ஜெய்சங்கர் இஸ்லாமாபாத் செல்வதற்குதயாராக இருப்பதாகவும் அங்கு எல்லை தாண்டியபயங்கரவாதம் மற்றும் ஆசியப் பிராந்திய நிலவரம் குறித்து பேசத் தயாராக இருப்பதாகவும் பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் ஜம்முகாஷ்மீரில் நிலவும் பிரச்சினைக்கு தீர்வு காண பாகிஸ்தானுக்கு எந்தவித தார்மீக உரிமையும் கிடையாது என இந்திய வெளியுறுவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் இந்தியாவின் மணிப்பூர் நகரில் ஆர்பாட்டங்கள் நடாத்திய இரும்பு பெண் மணி என வர்ணிக்கப்பட்ட ரோம்ஷர் மிலாவின் அகிம்சை போராட்டம் தோல்வியில் முடிவடைந்ததும் இந்திய மக்களின் எதிர்ப்பை தேடிக் கொண்டதும் அரசியல் வட்டாரத்தில் பெரும் சர்ச்சையை தோற்று விக்க காரணமாக இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவரது போராட்டத்தை தனது சுயநலத்திற்காகவும் வெறும் அரசி யல் அபிலாஷைகளுக்கும் பயன் படுத்தப்பட முற்பட்டமையே காரணம் எனக் குறிப்பிடப் படுகின்றது.

மணிப்பூர் நகரில் அறுபது ஆண்டுகளாக நீடித்து வரும் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ப தற்காகவும் மணிப்பூர் பஸ் நிலையத்தில் பேருந்துக்காக தரித்து நின்ற பத்து அப்பாவி பொதுமக்கள் தீவிர வாதிகள் எனக் கருதப்பட்டு ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டமையுமே இவரது போராட்டத்திற்கு காரணங்கள் எனக் கூறப்பட்டாலும், கூட இவர் தன் நோக்கில் உறுதியாக நில்லாமல் போராட்டத்தை இடையில் விட்டமை இவரது தோல்விக்கு காரணம் என அரசியல் விமர்சகர்களால் கருத்துக்கள் வெளியிடப் பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

க.கணேசராசா

## போட்டிச் சிறுகதை 16

பெயர் : குணலிங்கம் நிறோஜினி
முகவரி : சபாபதிப் பிள்ளை வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
சிறுகதை : உண்மை நட்பு




பெருங்குடி எனும் ஊரில் இரு நண்பர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் ராமன், சரவணன் ஆவர். அவர்கள் சிறு வயதில் இருந்து நெருங்கிய நண்பர்கள். இருவரும் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுப்பது வழக்கம். ராமனோ மிகவும் கஸ்ரப்பட்டவன், ஒருவரும் இல்லாத அனாதை. ஆனால் சரவணனோ தந்தை ராஜதுரை, தாய் சுசித்திரா, தங்கை ராதா என சொந்தங்கள் கொண்ட பணக்காரன். சரவணனின் குடும்பம் ராமனை அனாதையாக ஒரு போதும் அவனை நினைப்பதில்லை.

தங்களது சொந்த உறவைப்போலவே ராமனை நினைத்துக்கொள்வார்கள். சரவணனை மேல் படிப்பு படிக்க வைத்தது போல ராமனையும் தங்களது சொந்தச் செலவில் படிக்க வைத்து, இருவரையும் ஒரே கொம்பனியில் வேலை வாங்கிக் கொடுத்து பெரிய பதவிக்கு இருவரையும் கொண்டு வந்தார்கள். அதன் பிறகு எல்லோரும் எதுவித கஷ்டமும் இல்லாமல் வாழ்ந்து வந்தார்கள். அப்போது தான் சரவணனின் தந்தைக்கு ஒரு செய்தி வந்தது.

அவருக்கு சோலை வனம் எனும் கிராமத்தில் நிறைய சொத்துக்கள் இருந்தன. அவரின் அண்ணான சக்கரவர்த்தி எல்லா சொத்துக்களையும் அபகரிக்க எண்ணினான். இவற்றை எல்லாம் அறிந்த ராஜதுரை தனது குடும்பத்துடன் ராமனையும் கிராமத்திற்கு கூட்டிச் செல்ல இருந்தார். ஆனால் ராமனும், சரவணனும் ஒரே கொம்பனியில் வேலை செய்வதால் சரவணனுக்கு மட்டும் அனுமதி கிடைத்தது ராமனால் செல்ல முடியவில்லை.

இதற்கிடையில் ராதாவிற்கு பாடசாலையில் இறுதிப் பரீட்சை நடைபெற இருந்தது. அவளாலும் செல்ல முடியவில்லை. ராமனை நம்பி சரவணனின் குடும்பம் ராதாவைக் கவனமாக பார்த்துக்கொள்ளுமாறு சொல்லிவிட்டு சோலை வனக் கிராமத்திற்குச் சென்றது. அங்கு சென்று சொத்துப் பிரச்சினைகளை தீர்த்து விட்டு அந்த சொத்துக்கள் அனைத்தையும் சரவணனின் தந்தை சக்கரவர்த்திக்குக் கொடுத்துவிட்டு எங்களுக்கு அங்குள்ள சொத்து மட்டும் போதும் இங்கு இருக்கும் சொத்துக்கள் எதுவும் தேவையில்லை என கூறி விட்டு இரண்டு வாரங்கள் கிராமத்தில் தங்கிவிட்டு சென்றார்கள்.

வீட்டுக்கு சென்றபோது ராமனையும், ராதாவையும் காணவில்லை. பாடசாலைக்கு ராதாவும் ராமன் கொம்பனிக்கும் சென்று இருப்பார்கள் என தாயிடம் கூறினார்கள். ஆனால் இரவாகியும் இரண்டு பேரையும் காணவில்லை என தேடிச் சென்றார்கள். அவர்கள் எங்கு தேடியும் கிடைக்கவில்லை. இவற்றை எல்லாம் சிந்தித்த சரவணன் இருவரும் காதலித்து இருப்பார்கள் என நினைத்தான்.

இவ்வளவு காலமும் இருவரையும் புரிந்து கொள்ளாமல் இருந்து விட்டோம். இருவரும் இவ்வளவு காலமும் காதலித்துக்கொண்டு இருந்துள்ளார்களே இது தெரியாமல் போய் விட்டதோ எங்களுக்கு. இருவரும் சரவணனையும் அவரது குடும்பத்தையும் ஏமாற்றி ஊர் மக்கள் முன்னாடி மரியாதை இழந்து தலைகுனிய வைத்து விட்டார்கள் என சரவணனும் அவனது குடும்பமும் கவலை கொண்டது.

நான் அவர்கள் இருவரையும் மன்னிக்கமாட்டேன் என்று பழி உணர்வோடு பார்த்துக்கொண்டு இருந்தான் சரவணன். நான் ராமன் மேல் வைத்த நம்பிக்கையை இழக்கச் செய்து விட்டாளே என நினைத்து சரவணன். எனக்கு தங்கையும் இல்லை, நண்பனும் இல்லை என கூறி அழுதான். அவன் நினைப்பது தவறு என புரியும் காலம் வந்தது. ஒரு வருடத்திற்கு பிறகு ராமன் சரவணனின் வீட்டிற்கு வந்தான்.

சத்தமாக சரவணனை அழைத்தான். அப்போது எங்கேயே கேட்ட குரலாக உள்ளது என எண்ணி வேகமாக வெளியே வந்து பார்த்து இவன் என்னையும் எனது நட்பையும் எனது குடும்பத்தையும் ஏமாற்றி என்னை நடுத்தெருவில் விட்டு சென்ற ராமன் அல்லவா எப்படி எனது வீட்டிற்கு வரலாம் என்று வேகமாக ஓடி வந்து ராமனை கன்னத்தில் அறைந்தான். அவனை கொல்ல நினைத்து அருகில் இருந்த பூச்சாடியால் அடிக்க ஓங்கிய போது கோவிலுக்கு சென்று விட்டு வந்த சரவணனின் பெற்றோர் வேண்டாம் என தடுத்தார்கள்.

ராமனை விட்டுவிடு, ராமனைக் கொலை செய்து விட்டு நீ சிறைச்சாலைக்கு சென்றால் எங்களை பார்த்துக்கொள்ள ஒருவரும் இல்லை. நீ தான் ஒரு ஆளாக இருந்து எங்கள் இருவரையும் பார்த்துக் கொள்கிறாய் என்று அழுதார்கள். எங்களது மகளான ராதா ஓடிய போதே இறந்து விட்டாள் ராமனை நீ கொன்றால் உனக்கு என்ன நன்மை உள்ளது. இதனால் துன்பமும் கஷ்டமும் உனக்கும் எங்களுக்கும் வந்து சேரும்.

அதனைக் கேட்ட சரவணன் ராமனைக் கொல்லும் முயற்சியை விட்டு அவனை வெளியேற்றினான்.

ராதாவின் நெருங்கிய தோழியான கீதா ராதாவின் தாயான சுமித்திரா வீட்டிற்குப் பக்கத்தில் தான் இருக்கிறாள். ராதாவின் தோழியான கீதா அங்கு நடந்த பிரச்சினைகள் அனைத்தையும் ராதாவிற்கு தொலைபேசி மூலமாக நடந்தவற்றைக் கூறினாள்.

அனைத்தையும் அறிந்த ராதா அழுது கொண்டு தனது குழந்தையையும் தூக்கிக் கொண்டு தனது தாயின் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். அவள் அவர்கள் மூவரையும் கோபமாக அழைத்தாள். அப்பொழுது அவர்கள் ராதா ராமனுடனும் குழந்தையுடனும் நிற்பதைக் கண்டு திகைத்தார்கள்.

தயவு செய்து நான் சொல்வதை கேட்கும் வரை யாரும் திருப்பிப் பேசக் கூடாது எனக் கூறினாள்.

“நான் முரளி என்றொருவனை காதலித்தேன். அவன் என்னை உயிராக நேசிக்கிறேன் என்று கூறினான். நான் அவனை நம்பி ஏமாந்துவிட்டேன். அப்பொழுது தான் நீங்கள் சொத்துப் பிரச்சினைக்காக ஊருக்குப் போய் விட்டீர்கள் அப்பொழுது தான் ராமன் அண்ணா என் அருகில் வந்து ராதா ஏன் கவலையா இருக்கிறாய் என கேட்டார். என்ன பிரச்சினையாக இருந்தாலும் என்னிடம் கூறு நான் தீர்த்து வைக்கிறேன் என்றார் ராமன் அண்ணா. அப்போது கூட நான் உண்மையை கூறவில்லை. அதன் பிறகு எனது உயிர்த் தோழியான கீதாவிடம் சென்று கேட்டார். அவள் தனக்கு எதுவும் தெரியாது என கூறினாள் கீதா. இவற்றை எல்லாம் யோசித்துக் கொண்டு வந்தார் ராமன் அண்ணா அப்பொழுது நான் வீட்டில் மயங்கிக் கிடந்தேன்.

ராமன் அண்ணா என்னை காரில் வைத்தியசாலைக்கு தூக்கிச் சென்று வைத்தியரிடம் காட்டினார். அப்பொழுது தான் நான் கர்ப்பமாக இருப்பது ராமன் அண்ணாவுக்கு தெரிய வந்தது. அதனைக் கேட்ட ராமன் அண்ணா திகைத்துப் போய்விட்டார். அதன் பிறகுதான் நான் நடந்தவற்றை அவரிடம் கூறினேன். நான் காதலித்து ஏமாந்த விடயத்தை கேட்ட ராமன் அண்ணா முரளியை தேடி கண்டு பிடித்து அவனுடன் என்னைக் கூட்டிச் சென்று அவனின் தாய் தந்தையரிடம் அவன் செய்த தவறுகளையும் எடுத்துக் கூறி முரளியையும் நல்லவனாக திருத்தி எங்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைத்தார்.

அது மட்டுமல்லாது தனக்கு தெரிந்த ஒருவரிடம் வேலை வாங்கிக் கொடுத்து இருப்பதற்கு வீடும் நல்ல வசதிகளையும் செய்து தந்தார். அப்படிப்பட்ட நல்ல குணமுடையவரை தவறாக நினைத்து விட்டீங்களே? என்னை தனது உடன் பிறந்தவளாக நினைத்தவரை என்னுடன் சேர்த்து எவ்வாறு நினைத்தீர்களோ. அண்ணாவைப் பார்த்து நீ அவர் உன்மேல் வைத்த உண்மையான நட்பையும் உணராமல் கொச்சைப்படுத்தி விட்டாயே. எப்படி நீ அவரிடம் பேசப்போகிறாய்? உனது தங்கைக்கு எந்தவித கஷ்டமோ, துன்பமோ வராமல் வாழ வேண்டு என எண்ணியவரை கொலை செய்யும் முயற்சியில் கூட போய்விட்டாய்” எனக்கூறி அழுதாள். இவற்றை எல்லாம் கேட்ட சரவணன் ராமனின் காலில் விழுந்து அழுதான். என்னை மன்னித்து விடு என கூறி அழுதான். எங்களுடைய மானத்தை காப்பாற்றியதற்கு நன்றி எனக் கூறினான்.

ஆனால் நானோ உனது உண்மையான நட்பையும் பாசத்தையும் புரியாமல் தவறாக நடந்து கொண்டேன். நான் மன்னிப்புக் கேட்கக் கூட தகுதியில்லாதவன் என்றான். சரவணனின் தாய் தந்தை ராமனிடம் மன்னிப்புக் கேட்டார்கள். உடனே ராமன் இப்படியெல்லாம் என்னிடம் மன்னிப்பு கேட்காதீர்கள் என்றான் ராமன். நான் உங்க ளது மகன் அல்லவா? நான் ராதாவின் அண்ணன். சரவணனின் நல்ல நண்பன் எப்படி தவறு செய்வேன் நீங்கள் என்னை நல்ல நிலைமைக்கு கொண்டு வந்தீர்கள். அப்படிப்பட்ட உங்களை தவறாக நினைக்க மாட்டேன்.

ராமன் ராதாவையும் முரளியையும் அவரது தாய் தந்தையையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கிறேன் என்றான். உடனே சரவணன் ராமனைப் பார்த்து அப்படி கூறாதே நான் அவர்கள் எல்லோரையும் ஏற்றுக்கொள்கிறேன்என்றான். நீ இப்படிச் சொல்வது எனக்கு சந்தோசமாக இருக்கறது. இனிமேல் ஒருவருக்கொருவர் தவறாக புரிந்து கொள்ளாமல் எல்லோரும் ஒற்றுமையாகவும் சந்தோசமாகவும் வாழ்வோம் என்றான் ராமன். ●

இச்சிறுகதை பரிசுக்குரியதென நீங்கள் சிபார்சு செய்ய விரும்பினால், இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பி வைக்கவும்.

## சிறுகதைப் போட்டிக்கான கூப்பன் - 16

தெரிவு செய்யப்படும் சிறுகதைத் தலைப்பு : ................................................
................................................
சிறுகதையின் இலக்கம் : ................................................
எழுதியவர் பெயர் : ................................................
சிபார்சு செய்பவர் பெயர் : ................................................
முகவரி : ................................................
................................................
தொலைபேசி இலக்கம் : ................................
................................................ ஆகிய நான்
இச் சிறு கதையை வெற்றிக்கு சிபார்சு செய்கிறேன்.

................................
ஒப்பம்

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
**தினச்செய்தி சிறுகதைப் போட்டி**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**





ஜெ. யோகராஜ்

# தேடல்பொறி, இணையம், இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல்


இந்த வாரம் நாம் இணையம் மற்றும் மின்னஞ்சல்களைப் பயன்படுத்துவதால், கணினிக்குள் வந்து சேர்கின்ற மேலதிக அவசியமற்ற கோப்புக்களை எவ்வாறு அகற்றுவது என்பது பற்றிப் பார்ப்போம். முதலில் இந்தக் கோப்புக்கள் கணினிக்குள் இருப்பதனால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள் பற்றிச் சற்று பார்ப்போம். இந்த கோப்புக்களில் சிலவைரஸ் கோப்புக்களும் இருக்கலாம். மேலும் worm, trojan, malware, spyware போன்ற கணினிக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய கோப்புக்களும் காணப்படலாம். இதனால், கணினியில் திடீர் பாதிப்புக்கள், செயல் இழப்புக்கள், தகவல் தொகுதிகள் அழிந்துபோதல், கணினியில் இருக்கின்ற முக்கிய தகவல்கள் இரகசிய முறையில் வெளிச்சக்திகளுக்கு எடுத்துச் செல்லப்படல் போன்ற பல்வேறு பிரச்சினைகளை நாம் எதிர்கொள்ளலாம். அத்துடன் இந்த கோப்புக்கள் கணினியில் பாரிய இடத்தையும் பிடித்துக் கொள்கின்றன. இதனால், முக்கியமான தகவல்கள் மற்றும் மென்பொருள் செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான அடிப்படை இடவசதி இல்லாமல் போய்விடும். இத்தகைய பிரச்சினைகளைகவனத்திற்கொண்டு, இவற்றை தவிர்ப்பதற்காகவே நாம் வாரத்திற்கு ஒரு முறையாவது இந்த தூய்மைப்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும். இதனை ஆங்கிலத்தில் Clean Up என்று குறிப்பிடுவார்கள்.

நாம் இப்போது ஒரு கணினியில் தூய்மைப்படுத்தல் அல்லது துப்பரவு செய்தல் செயற்பாட்டை எவ்வாறு மேற்கொள்வது என்று பார்ப்போம். இதற்கான வழிகாட்டல் படவிளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.





இங்கு தூய்மைப்படுத்த வேண்டிய drive / root directory ன் பெயரைக் குறிப்பிட வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் நாம் C :\ என்னும் வன்தட்டு பிரிவை குறிப்பிட்டுள்ளோம். இதனை ok செய்தவுடன், C:\ க்குள் இருக்கின்ற அவசியமற்ற அல்லது நீக்கப் படக்கூடிய கோப்பு விபரங்களை அது காட்டும்.





இவ்வாறு கோப்பு விபரங்களை காண்பிக்குமிடத்து அவற்றை நன்கு ஆராய்ந்த பின்னர் நாம் அந்த கோப்புக்களை நீக்குவதற்கான அனுமதியை வழங்கலாம். அதன் மூலம் C :\ யிலுள்ள அவசியமற்ற



அதாவது, start⇨all programs⇨accessories⇨system tools⇨disk cleanup எனும் வழிமுறையை பின்பற்ற வேண்டும். இந்த வழிமுறையை பின்பற்றினால் எமக்கு கீழ் வரும் திரையைப் பார்க்கலாம்.


கோப்புக்களை அகற்றி துப்பரவு செய்து கொள்ளலாம். நாம் தினமும் இணையத்தை குறைந்தது ஐந்து மணித்தியாலங்களேனும் பாவிப்போமானால், இத்தகைய துப்பரவு செய்யும் செயற்பாட்டை வாரத்திற்கு மூன்று முறையாவது செய்தல் வேண்டும். அடுத்து, இந்த கணினியின் வன்தட்டுக்குள் உள்ள வேறு பல பகுதிப் பிரிவுகளான (Drives such as D:\, E:\) ஆகியவற்றையும் நாம் இந்த வகையில் துப்பரவு செய்து கொள்ளலாம். இந்த துப்பரவு செய்தலோடு, மற்றுமொரு செயற்பாட்டையும் நாம் மேற்கொண்டால், கணனியின் வேகத்தை ஓரளவு அதிகரித்துக் கொள்ளலாம். இதற்கு பெயர் Disk Defragmenter என்பதாகும். சாதாரணமாக ஒரு கோப்பை நாம் தேடுவதாக இருந்தால் அந்த கோப்பின் பலபகுதிகள் வன்தட்டின் வெவ்வேறு இடங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கும். அந்த பகுதிகளை எல்லாம் தேடிப்பிடித்து முழுமையாக கோப்பை திறப்பதற்கு சில நேர தாமதங்கள் ஏற்படும். ஆனால், நுளைம நுநகசயபஅநவெநச என்ற சலுகையைப் பயன்படுத்துவதன் மூலம் வன்தட்டின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள கோப்பின் பகுதிகளை ஒரிடத்திற்குக் கொண்டு வந்து பதிவு செய்யக்கூடிய வாய்ப்பு உண்டு. இதனால், இந்த கோப்பை பயன்படுத்தும் போது எமக்கு முன்னரைப் போன்ற நேர தாமதம் ஏற்படாது. முதலில் இந்த சலுகையைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறையைப் பார்ப்போம்.



அதாவது

start ⇨ all programs ⇨ accessories ⇨ system tools ⇨ disk defragmenter

எனும் வழிகாட்டலை தெரிவு செய்தால் கீழ்வரும் திரையை நாம் பார்க்கலாம்.





இந்தத் திரையைப் பயன்படுத்தி C :\ உள்ள கோப்புக்களை சீர்செய்து கொள்ளலாம். இவ்வாறு D :\, E :\ போன்ற வன்தட்டுப் பிரிவிகளிலும் இந்த சீர்திருத்தங்களைச் செய்யலாம்.

(தொடரும் ...)

உங்களுக்கு கணினி தொடர்பான சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் இருப்பின் நீங்கள் கீழ் காணும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் கேள்விகளை அனுப்பி வைக்கலாம்.

yogaraj35@gmail.com

email : yogaraj35@gmail.com)



## காகிதம் போல் மடக்ககூடிய தொடுதிரைகள்

காகிதம் போன்று மடக்ககூடிய தொடுதிரைகளை உருவாக்கும் தொழில்நுட்பத்தை தென்கொரிய விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

அமெரிக்காவிலிருந்து வெளிவரும் நேச்சர் கம்யூனிகேஷன்ஸ் அறிவியல் இதழில் இதுகுறித்த தகவல்கள் வெளியாகியுள்ளது.

அதில், தென்கொரியாவின் கொரிய அறிவியல் கழகத்தை (கே.ஏ.ஐ.எஸ்.டி) சேர்ந்த சேயுன்குயப்யூ, போஹாங் அறிவியல் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை (போஸ்டெக்) சேர்ந்த டே- வூலீ ஆகியோர் தலைமையில், கணினி, தொலைக்காட்சி மற்றும் கைபேசிகள் ஆகியவற்றின் திரைகளை உருவாக்க பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வில் OrganicLight Emitting Diode தயாரிப்பில் வெற்றி அடைந்துள்ளனர்.

அதாவது தற்போது வளைந்த திரைகளின் பயன்படுத்தக்கூடிய என்ற Indium-Tin-Oxide உலோகக் கலவைக்கு பதிலாக Graphene – யை பயன்படுத்தவுள்ளனர். இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் செலவுகளை குறைப்பதுடன் திரைகளை 2.3 மி.மீ வரை மடக்கலாம்.

அண்டர் ஆர்மர், அடிடாஸ், நைக்கி போன்ற விளையாட்டு காலணி தயாரிப்பாளர்கள் இந்த முறை தங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட விளையாட்டு வீரர்களின் கால்களுக்கு ஏற்ப அளவெடுத்து காலணிகளை உருவாக்கியுள்




ளன. இதற்கு முப்பரிமாண அச்சு தொழில்நுட்பம் கைகொடுத்துள்ளது. வீரரின் எடை, பாதங்களின் கோணம், எங்கே அதிக அழுத்தம் தரப்படுகிறது என்று தனித்தனியாக வேகத்தை கூட்ட, முப்பரிமாண ஸ்கேனர்கள் மூலம் அளவெடுத்து, இந்த மூன்று நிறுவனங்களும் காலணிகளை தயாரித்துள்ளன. உடைகளின் வடிவமைப்பும் 3 டி ஸ்கேனர்கள் மூலம் அளவெடுத்து தைக்கப்பட்டுள்ளன. ரியோ ஒலிம்பிக்கின் அசல் சாம்பியன், 3 டி பிரிண்டிங் தொழில்நுட்பம்தான்.



# யாழ்ப்பாணத்தில் விமரிசையாக கொண்டாடப்பட்ட

# பூப்புனித நீராட்டு விழா

சென்ற வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வுகளில் முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாக திரு. திருமதி இரட்னேஸ்வரன் அமுதினி தம்பதிகளின் இரண்டாவது மகள் மயூரிப்பிரியாவின் பூப்புனித நீராட்டு விழா ஆகும்.

இல. 31, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள ஹோட்டல் பிள்ளையார் இன் இல் [Hotel Pillayar Inn] சென்ற 19.08.2016 காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.


பெண் பிள்ளைகளின் பூப்படைதல் யாழ்ப்பாண சமுதாயத்திலே பிரதானமாக கருதப்படுகிறது. பொதுவாக தமிழ் மக்கள் பழங்காலத்தில் இருந்தே பூப்புனித நிகழ்வை சடங்காகக் கொண்டாடி வருகிறார்கள். பூப்படைதல், சாமத்தியம், பெரிய பிள்ளையாதல், வயதுக்கு வருதல் என்றும் இதைக் குறிப்பிடுவர். பழந்தமிழ் இலக்கியத்தில் பெரிய பிள்ளையாதலை குறிப்பிடுகின்ற செயல்கள் உள்ளன.


உதாரணமாக "பேதையல்ல மேதையாங் குருமகள்" என்பதனை சுட்டிக் காட்டலாம்.


இந்த நிகழ்ச்சியில் யாழ்ப்பாணத்தில் உள்ள முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து சிறப்பித்திருந்தனர். இங்கே அது சம்பந்தமான படங்கள் தரப்படுகின்றன.















# ஆன்மீகம்



# அழகே உருவான முருகன் தங்கத் தேரேறி வருகின்றான்



திருமதி. மலர்விழி கனகசபை

முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும், சைவமணம் கமழும் யாழ்ப்பாணத்து நல்லூரில் கோவில் கொண்டு எழுந்தருளி அருளாட்சி புரிந்து கொண்டு இருக்கும் முருகப் பெருமானின் 2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டு மஹோற்சவத்தின் சிகரமான தேர்த் திருவிழா ஆவணி 15 ஆம் நாள் (31. 08.2016) புதன்கிழமை காலை வெகு சிறப்பாக, இனிதாக எளிதாக இடம்பெறவுள்ளது.

முருகன் என்றால் அழகன், அழகன் என்றால் முருகன் அந்த அளவிற்கு அழகே உருவான முருகன் ஆறுமுக சாமியாக வள்ளி தெய்வானை சகிதம் தங்கத்தேரிலே ஆரோகனிக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் வேரோடு அழிக்க ஆறுமுகப் பெருமான் தங்கத் தேரேறி வருகின்றான். ஆடி அமாவாசையின் பின்னர் வரும் ஆறாம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடந்து இருபத்தி ஐந்து நாட்கள் திருவிழா இடம்பெற்று கந்தனின் திருக்கல்யாணத்துடன் மகோற்சவம் இனிதே நிறைவு பெறும். லட்சோப லட்சம் மக்கள் தேர்த் திரு விழாவிலே கலந்து கொள்வார்கள். நல்லைத் தெரு வீதிகள் எல்லாம் அடியார்கள் கூட்டம் அலை மோதும். நல்லூர் திருவிழா காலங்களில் விழாக்கோலம் பூண்டிருக்கும். எங்கு பார்த்தாலும் மகரதோரணங்கள், வாழைகள் அலங்கார வளைவுகளாக காட்சியளிக் கின்றன. அலங்கரிக்கப்பட்டுள்ள மின்விளக்குகள் கண்ணைப்பறிக்கின்றன. நல்லூர் இந்திர லோகம் போல காட்சியளிக்கின்றது. நல்லூர் ஆலயத்தின் மூலஸ்தானத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டு பூஜை செய்யப்படும் வேலுக்கு ஓர் ஈர்ப்புச் சக்தி உண்டு. இங்கு அடியார்கள் அலை மோதுவதற்கு காரணம் அந்த கந்தனின் சக்தியே.

நல்லூர் கந்தன் அலங்கார கந்தன் என்று மிக அழகாக அழைக்கின்றார்கள். இப்பேற்பட்ட முருகன் நல்லை நகரிலே அரசாட்சி செய்து கொண்டு இருக்கின்றான். தெய்வ மணம் கமழும் நல்லூரிலே தேர்த்திருவிழாவின் போது பக்தர்களின் "அரோகரா" ஒலி வானைப் பிளக்கின்றது. அந்தணர்களின் அரோகரா ஒலி வானைப்பிளக்கின்றது. அந்தணர்களின் வேதபாராயணம் ஒலி காதைப் பிளக்கின்றது. இத்தகைய மகத்துவம் அந்த நல்லை மண்ணுக்குண்டு.

முருகன் என்றால் அழகு, மனம், மகிழ்ச்சி, கவர்ச்சி என்று பொருள்படும். எனவே முருகன் அழகன் அழியா அழகு அவனுடையது. இளமை நலம் மாறாத ஏந்தல் அவன் மூப்பில்லாத மோகனன். அரசாட்சியின் தலை நகராக அன்று விளங்கிய நல்லூர் அருங்காட்சியின் அணி நகரமாக துலங்குகின்றது.

ஆண்கள் அனைவரும் தமது மேலங்கிகளைக் கழற்றிவிட்டு ஆலயத்திற்குள் பிரவேசிக்க வேண்டும் என்பது பொது விதி. இது ஆண்கள் எவருக்கும் பொருந்தும் ஆலயத்தின் கிழக்கிலும் தெற்கிலும் ஏற்கனவே வாசல்களும் அவற்றின் மேல் உயர்ந்த கோபுரங்களும் அமைந்து காணப்படுகின்றன. தற்போது ஆலயத்தின் வடக்கு புறமாக "குபேரவாசல்" நவதன இராஜகோ புரம் அமைக்கப்பட்டு மிகவும் கம்பீரமாக காட்சியளிக்கின்றது.

"அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்

பிரம்மமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்

கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே

ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தான் உலகமுய்ய"

என்ற கச்சியப்ப சிவாச்சாரியாரின் திரு வாக்குக்கமைய ஆறு குழந்தைகளை சரவணப் பொய்கையிலே தோன்றி அம்பிகையான உமையவள் பரிவோடு அணைக்க பன்னிரண்டு கைகளுடன் ஆறுமுகப் பெருமானாக ஐயன் அவதாரம் செய்தான்என்பது பூர்வீக வரலாறு. நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்த இடமும் நல்லூர் தான். அவர் சைவமும் தமிழும் தழைத்தோங்க அரும்பாடுபட்டு சைவசமயத்தை அழியவிடாது நாட்டில் நிலைநாட்டிய பெரியார். அவருடைய மணிமண்டபமும் நல்லூரிலே அமைந்துள்ளது.

தமிழ் நாட்டிற்கு சைவத்தை பரப்பிய கிருபானந்தவாரியார் போல ஈழமணித் திருநாட்டிலும் மணிபாகவதர் புகழ் சேர்த்தவர். அவர் பிரசங்க பீரங்கியாக அரங்கில் திகழ்ந்து அனைவரது கரகோஷம் பெற்றவர். அவரின் சமாதி ஆதீனத்தின் பின்புறம் அமைந்துள்ளது. தேவர்சிறை மீட்ட அந்தக் கந்தக்கடவுளின் தேர்த்திருவிழாவில் கலந்து அவன் அருள்பெற அலை அலையாக திரளும் பக்தர்களுக்கு வல்வினை அகற்றி, நல்வாழ்வு அளித்து நாட்டிலே சாந்தி சமாதானம் நிலவ அருள் பாலித்து எல்லா மக்களும் இந்த மண்ணிலே நல்ல வண்ணம் வாழ அருள்பாலிப்பாராக.



## விரதத்தின் போது பலகாரங்கள் சாப்பிடலாமா?



விரத காலத்தில், வெறும் தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசம் இருப்பதே உயர்வானது. அப்படி இருக்க இயலாதவர்கள் பாலும் பழமும் அருந்தலாம். சமஸ்கிருதத்தில் "ஃபல்" என்றால் பழம் என்று பொருள்படும். "ஆஹார்" என்பது ஆகாரம் அல்லது உணவு என்பதாகும். "ஃபல் ஆஹார்" ஸ்ரீ பலஹார் என்று ஆகிறது.

பழத்தை உணவாகக் கொள்வதே பலகாரம் என்பதாயிற்று. இதற்குப் பதிலாக சாதம் தவிர்த்த பலவித ஆகாரங்களைச் சாப்பிடுவது தான் 'பலகாரம்' என்ற சொல்லின் பொருளாக இக்காலத்தில் கருதப்படுகிறது. இது தவறு. இது உண்மையான விரதம் ஆகாது. ஜீரண உறுப்புகளுக்கு ஓய்வு கொடுத்து, உடலைப் புதுப்பிப்பதே இறை விரதத்தின் நோக்கமாகும்.

எனவே சிற்றுண்டிகளைச் சாப்பிட்டு விரதம் இருப்பதை விட, பழங்களையும் பாலையும் மட்டும் அருந்தி இறைவனை நினைத்து விரதம் இருப்பதே சிறந்த விரதம் ஆகும். இந்துக்கள் ஆன்ம ஈடேற்றங்கருதிச் செய்யுஞ் சாதனைகளில் ஒன்று விரதம். விரதம் என்னும் சொல் உண்ணும் உணவை சுருக்குதல் அல்லது விடுத்தல் என பொருள்படும். உபவாசம், நோன்பு என்பன விரதத்துடன் தொடர்புடைய சொற்களாகும். உபவாசம் என்னும் சொல் இறைவனின் அருகே வசித்தல் என்ற பொருளைத் தரும். மேலும் ஒரு தினம் அல்லது பல தினங்கள் உணவு வகை எதனையும் விடுத்து இறை தியானத்தில் இருக்கும் நிலையே உபவாசம். விரதம் என்பது ஒரு வகை விஷேட வழிபாடு ஆகும். விரதத்தைக் கடைப்பிடிப்பவர்கள் ஐம்புலன்களையும் அடக்கி, திரிகரண சுத்தியுடன் இருத்தல் வேண்டும். மன அடக்கத்தை மேம்படுத்த முடியும்.

---

(14 ஆம் பக்க தொடரச்சி)

**நீங்கள் எப்படி ஒக்ஸ்பேர்ட்டுக்குள் நுழைந்தீர்கள்?**

பொலநறுவை பிராந்தியத்தில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த சமயம், பிரதமர் டட்லி சேனநாயக்காவினால் அறிமுகம் செய்யப்பட்ட 'அதிக உணவை உற்பத்தி செய்யுங்கள்' என்ற திட்டத்தில் நானும் சம்பந்தப்பட்டிருந்தேன். விவசாய அமைச்சு பல்கலைக்கழக நுழைவுக்கான புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கும்படி என்னைப் பரிந்துரைத்தது.

**அதன் பின்னர் நடந்தது என்ன?**

நான் இங்கிலாந்தில் இருந்தபோது கல்வி அமைச்சின் செயலாளர் நான் பட்டப் படிப்பை முடித்த பின்னர் விவசாய அபிவிருத்தி இயக்குனராக நியமனம் பெறுவதற்கான ஏற்பாடுகளை விவசாய அமைச்சு மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார். ஒக்டோபர் 1972, இல் இந்தப் புதிய நியமனம் கிடைக்கப் பெற்றேன்.

**ஹெக்டர் கொப்பேக்கடுவ பற்றி உங்களால் என்ன சொல்ல முடியும்?**

சட்டத்திற்கு கட்டுப்பட்ட, நேரம் தவறாத சுவாவம் கொண்டவர். என்னைப் பற்றி இவர் நன்கறிந்திருந்தார். ஒரு பணக்காரக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும், ஏழைகளை நேசித்த மனிதர். யற்றிநுவர தேர்தல் மாவட்டத்தில் 1970ம் ஆண்டு வெற்றியீட்டிய இவர், விவசாய, காணி அமைச்சராகப் பதவி யேற்க தனது சொந்த வாகனத்தில் கொழும்பு பயணித்தவர். இவர் எந்த அலுவலக வாகனங்களையும் தன் சொந்தப் பாவனைக்காக உபயோகிக்கவில்லை. 1977 இல் தேர்தலில் தோற்றபோது, தன் காரிலேயே வீட்டுக்குத் திரும்பியவர்.

**ஜனாதிபதி பிரேமதாசாவை எப்படிச் சந்தித்தீர்கள்?**

1977இல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்ததும் அப்பொழுது உள்நாட்டு விவகாரங்கள், வீடு, கட்டட நிர்மாண அமைச்சின் நிரந்தர செயலாளராக, இருந்த ஏட்லி குணவர்த்தன என்பவர் அமைச்சில் பணியாற்ற விருப்பம் உள்ளதா என்று கேட்டார். நானும் எவ்வித மறுப்பும் இன்றி அமைச்சில் இணைந்தேன்.

**நீங்கள் கொப்பேக்கடுவவின் கீழ் பணியாற்றியது பிரேமதாசாவிற்கு பிரச்சினையாக இருந்ததா?**

இல்லை. பிரேமதாசா அரசியலை விடதரமான அரசபணியையே அதிகம் எதிர் பார்த்தார். நான் எப்படி கொப்பேகடுவவின் கீழ் பணியாற்றுகிறேன் என்பதை அவர் கூர்ந்து அவதானித்தார். ஜேவீபீ கிளர்ச்சியில் சம்பந்தப்பட்ட சுசில் சிறீவர்த்தன சிறையிலிருந்து விடுதலையாகிய சமயம் பிரேமதாச அவரை அழைத்து தன் அமைச்சில் வேலைவாய்ப்பு அளித்தார். இப்படியாக அரசியலை பல விதங்களில் நோக்கும் வேறு பட்டவர்களோடு எப்படிப் பணியாற்றுவது என்று அவருக்கு நன்கு தெரிந்திருந்தது.

**பிரேமதாச, கொப்பேக்கடுவ ஆகிய இருவருடனும் நல்லுறவைப் பேணி வந்தீர்களா?**

ஆம். பிரேமதாசாவிடம் பல முன்னேற்றத்திற்கான பார்வைகள் இருந்தன. தொழிற் கட்சித் தலைவர் குணசிங்காவுடனும் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியுடனும் தொடர்பு வைத்திருந்தார். ஹெக்டர் கொப்பேக்கடுவ, டாக்டர் என்.எம்.பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர் டி.சில்வா,பீட்டர் கெனமன் என்று இவர் நண்பர்கள் பட்டியல் நீள்கின்றது. 1982, தேர்தலுக்கு முன்னர் பிரேமதாசாவின் கீழ் பணியாற்றிய சமயம், ஒரு தடவை என்னை ஹொப்பேகடுவ அழைத்தார். அவரிடம் செல்லுமுன்பு இதுபற்றி பிரேமதாசாவிடம், புன்முறுவலோடு செல்லுங்கள் என்று அவர் அனுமதி அளித்தார். தேர்தல் வெற்றியில் ஜனாதிபதி மாறினால் நீங்கள் அவரின் கீழ் செயலாளராக பணியாற்றுவீர்களா என்று கொப்பேக்கடுவ என்னைக் கேட்டார். நான் மறுக்கவில்லை. ஆனால் இதையும் பிரேமதாசாவிடம் தெரியப்படுத்தினேன். ஜனாதிபதி மாறினால் ஒத்துழைக்க வேண்டும் என்று பிரேமதாச கேட்டுக் கொண்டார். ஆனால் தேர்தலில் வென்றது ஐக்கிய தேசியக் கட்சிதான். (தொடரும்...)

# சந்தர்ப்பவாதிகள்

அத்தியாயம் 17

ஏ.ஜே.ஞானேந்திரன்

எந்த இடத்திற்குப் போனாலும், அங்குள்ள நூலகத்தில் தன்னை ஓர் அங்கத்த வராக்கிக் கொள்வது சரனின் வழமை. இப்படித்தான் இலண்டன் வாழ்க்கையைத் தொடங்கியதும் இரண்டாவது மாதமே தன் பிராந்திய நூலகத்தில் தன்னை அங்கத்தவராக்கிக் கொண்டு, தினமும் அங்கு இரண்டு மணி நேரமாவது செலவழிப்பதை அவர் வழக்கத்தில் கொண்டிருந்தார்.

அப்படித்தான் அந்தச்சனிக்கிழமையன்றும் அங்கிருந்த தினசரிகளை வாசித்துக் கொண்டிருந்தார் சரன். அவருக்கு மிகவும் பிடித்தமான கார்டியன் தினசரியின் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தபோது, ஓர் இளம்பெண் தனக்கு எதிரில் இன்னொரு தினசரியுடன் வந்து உட்கார்ந்ததை அவர் கவனிக்கத் தவறவில்லை. அவர் மட்டுமல்ல, அங்கிருந்த பத்துக்கு மேற்பட்ட ஆண்கள் பெண்கள் எல்லோரினதும் கண்களும் அவள் பக்கம் திரும்பின.

காரணம் அவள் அணிந்திருந்த குட்டை உடைதான். வெளியே அந்த அளவுக்கு உக்கிரமான வெயில் இல்லை. ஆனால் அவளோ ஒரு ரீஷேஉட்டும் குட்டைப் பாவாடையுமாக படு கவர்ச்சியாக அங்கே வந்து உட்கார்ந்தாள்.

ஐரோப்பிய பெண்களுக்கு இது சகஜமான ஒன்று. சுவிஸ் நாட்டிலும் இப்படித்தான். கொஞ்சம் வெயில் வந்தால் போதும். அதற்காகவே காத்திருந்தவர்கள் போல, அரைகுறையாக உடுத்திக் கொண்டு தெருவலம் வர ஆரம்பித்து விடுவார்கள்.

அந்தக் கணம் அவருக்கு குவைத் பெண்களின் ஞாபகம் வந்தது. கால் முட்ட உடுத்திக் கொண்டு, முகத்தையும் மூடிக்கொண்டு வரும் அரபுப் பெண்கள் மனதில் வந்து போனார்கள். இப்படி முகத்தை மூடிக்கொண்டு வந்த ஓர் அரபுப் பெண்ணின் கதை, அந்தக் கணம் மின்னல் போல மனதிரையில் நிழலாடியது.

அவருக்குக் கிடைத்த முழு நேர வேலைச் சம்பளத்தில் திருப்தியில்லை. எனவே நான்கு மணிக்குப் பின்பு நான்கு மணி நேரம் செய்யக்கூடிய மேலதிக வேலை ஒன்றையும் அவர் தேடிக் கொண்டார். முதல் வேலையில் 60 டினார் என்றால், இந்த நான்கு மணி நேர மாலை வேலைக்கு 30 டினார். இரண்டாவது வேலை களவில் செய் யும் வேலை. இவருக்கு முழு நேர வேலை தரும் முதலாளியின் சம்மதத்தில்தான் இவரால் இரண்டாவது வேலைசெய்ய முடியும்.

ஆனால் அனுமதி கிடைக்காது என்பது சரனுக்குத் தெரியும். அதுதான் இந்தக் களவு வேலை. இங்கிருக்கும் ஒவ்வொரு மணி நேர உழைப்பும் அவருக்கு அவசியமாக இருந்தது. காரணம் தனக்கென்று ஊரில் ஒரு புது வீட்டைக் கட்ட ஆரம்பித்து விட்டார் சரன்..

பெண்களின் அழகு ஆபரணங்கள் (பிளாஸ்டிக்) விற்கும் கடை அது. அயல் நாடான சவுதி அரேபியா, எகிப்து, லெபனான் என்று பல இடங்களிலிருந்தும் பெண்கள் வந்து மொய்ப்பார்கள். மாலை ஏழு மணியிலிருந்து எட்டு மணிவரை கடை நிரம்பி வழியும். அந்த நேரத்தில் காசாளராக அங்கு பணியாற்றிய சரனுக்கு முதலாளி கொடுத்திருக்கும் கட்டளை இதுதான். மெஷினோடு நேரத்தைச் செலவிடாமல், திறந்த நிலையில் இருக்கும் பெட்டிக்குள் பணத்தைப் போட்டு விடவேண்டும். வாடிக்கையாளர்களை தாமதிக்காமல் அனுப்பிவிடவேண்டும்.

அப்படித்தான் அன்றும் கடையில் ஜனம் நிரம்பியிருந்தது. மெஷினடியில் இருந்த பணப்பெட்டி குவைத் டினார் தாள்களால் பாதி நிரம்பியிருந்தது. அவருக்குப் பக்கத்தில் உதவிக்கு ஒருவர் நின்றிருந்தார். அவரும் பணத்தை வாங்கி பெட்டியில் போட்டுக் கொண்டிருந்தார். கறுத்த பர்தாவால் முகத்தை மூடியிருந்த ஒரு பெண் தான் கொண்டு வந்த ஆபரணங்களை மேசையில் வைக்க, சரன் 16.50 என்று விலையைக் கூறினார். மருதாணி இட்ட அந்தப் பெண்ணின் சிவந்த கை பணத்துடன் நீண்டது.சரன் அவள் உள்ளங்கையிலிருந்த பணத்தாள்களை எடுத்துக் கொண்டு, பெட்டிக்குளிருந்து மீதியைக் கொடுக்க முயன்ற போது, யாருமே எதிர்பாராத ஒரு நிகழ்வு அங்கே நடந்தது.

அந்தப் பெண் பளீரென்று சரனின் கன்னத்தில் அறைய, அதிர்ச்சியோடு அவளைப் பார்த்தார் சரன். சரனுக்குப் பக்கத்தில் நின்ற பம்பாய்க்கார இந்தியர் பழுத்த அனுபவசாலி. அங்கு நீண்ட காலமாகப் பணி புரிபவர். சரன் பக்கம் சட்டெனத் திரும்பி, பேசாமல் வேலையைத் தொடருங்கள் என்று அவர் கையை அழுத்தி, தணிந்த குரலில் எச்சரித்து விட்டு, பெண்ணிடம் மீதிப் பணத்தை நீட்ட, அவள் ஒரு கணம் முறைத்துப் பார்த்துவிட்டு நகைகளை எடுத்துக் கொண்டு போய்விட்டாள்.

வேலை முடிந்து ஒன்பது மணிக்கு இது பற்றிப் பேச்சு வந்தபோது, பம்பாய்க்கார சினேகிதன் நடந்த சம்பவத்திற்கு விளக்கம் அளித்தார்.

“அந்தப் பெண் சவுதி நாட்டுப் பெண்ணாக இருக்க வேண்டும். நீங்கள் பணத்தைக் கொடுத்தபோது அவள் கையைத் தொட்டு விட்டீர்களாம். அதற்குத்தான் இந்த அடி”

“அட கடவுளே நான் பணத்தை அவள் கையிலிருந்து எடுத்தேன். அவ்வளவுதான்.”

“அது எனக்குத் தெரியும். என்ன செய்வது? நீங்களும் களவில் வேலை செய்கிறீர்கள். உழைப்பிற்காக இப்படியான கேவலங்களுக்கும் நாம் முகம் கொடுக் கத்தான் வேண்டியிருக்கின்றது” என்றார் அந்த பம்பாய்க்காரர்.

அந்தக் கணம் இப்படியொரு வேலை தேவைதானா என்று சரன் தன்னைத்தானே கேட்டுக் கொண்டாலும், அவரது பணத் தேவை. தொடர்ந்து அங்கே அவரை வேலைசெய்ய வைத்தது. ஆனால் அதிர்ஸ்டவாசமாக வேறு எந்தப் பெண்ணும் குவைத்தில் இருக்கும்வரை அவர் கன்னத்தைப் பதம் பார்க்கவில்லை.

முன்னேயிருந்த இளம்பெண்ணைப் பார்த்ததும் கடிவாளம் இல்லாத குதிரை போல, தன் மனம் குவைத் நாட்டுக்கு ஓடிவிட்டதை நினைத்து வியந்தார். எத்தனை வயதானாலும் வாழ்வின் சில நிகழ்வுகள் மனதைவிட்டு என்றுமே ஓடிப்போய்விடாது என்பது அவருக்குத் தீர்க்கமாகத் தெரிந்தது.

மேலும் அரைமணிநேரம் பத்திரிகைச் செய்திகளை வாசிக்லானார் சரன்.. இங்கிலாந்திற்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் மாட்சில், நியூசிலாந்து அபாரமாக விளையாடி, எதிரணியைத் தோற்கடித்திரு ந்தது. முதல் டெஸ்டில் வென்றிருந்த இங்கி லாந்து அணியைப் பழிதீர்ப்பது போல அமைந்திருந்தது இந்த வெற்றி. உலக தரத்தில் மூன்றாம் இடத்திலிருக்கும் இங்கிலாந்துக் கிரிக்கட் அணியை மூன்றலிருந்து கீழே தள்ளி விடுமோ என்று அவர் நினைத்தார்.

இரவலாக ஒரு நாவலையும் எடுத்துக் கொண்டு நூலகத்தை விட்டு வெளியே வந்தபோது நேரம் ஆறாகி இருந்தது. நாளை ஒரு புதுப் பொருட்காட்சியகத்திற்குச் செல்ல வேண்டும் என்று தீர்மானித்திருந்தார் அவர். சுவிஸ் வாழ்க்கையில் எதற்கெடுத்தாலும் பணம். ஆனால் இலண்டனிலோ பல இலவசங்களை அவரால் அனுபவிக்க முடிகின்றது. குறிப்பாக இங்குள்ள அருங்காட்சியகங்களைச் சொல்லி விடலாம். இலண்டன் மாநகரத்தில் நிறைய அருங்காட்சியகங்கள் இருக்கின்றன. அனுமதி இலவசம். பிரிட்டிஷ் அருங் காட்சியகம் இதில் குறிப்பிடத்தக்கது. இதுவ ரையில் மூன்று தடவைகள் அங்கு போய் வந்துவிட்டார் சரன்.

இன்னும் அங்கு நிறையப் பார்க்கலாம். இன்னும் மூன்று தடவைகள் போய் வந்தாலும், பார்த்து முடியாது என்று அவர் நினைத்தார். உலக நாடுகளின் கலாச்சாரங்களைக் கண்முன்னே நிறுத்தும் அந்த அருங்காட்சியகம் அவருக்கு நிறையப் பிடித்திருந்தது. பண்டைக்காலம் தொட்டு இன்றுவரையிலான ரோம , எகிப்திய நாகரீக சரிதங்கள் மிக அழகாகக் காண்பிக்கப் படுகின்றன.

அவர் கையிலிருந்த தொலைபேசி ரீங்காரித்தது.

கையில் எடுத்து காதில் வைத்தார். யாழ்ப்பாணத்திலிருந்து சித்திரவேல்.

“சித்திரவேல் சொல்லு..”

“மகனுக்குக் கல்யாணம் நிச்சயமாயிட்டுது ”

சரன் பெரிதாகச் சந்தோஷப்பட்டார்.

“கேட்க எவ்வளவு சந்தோஷமா இருக்குது தெரியுமா சித்திரவேல்? கல்யாணத்திற்கு ஏதும் பண உதவி வேண்டுமெண்டா தயங்காமச் சொல்லு . அனுப்பி வைக்கிறன்.”

“நீ இப்பிடிச் சொன்னதே எனக்கு நீ பணம் தந்தமாதிரித்தான் சரன் எனக்குக் காசு தேவைப்படாது. ஆனா நீதான் கல்யாணத்தை முன்னிண்டு செய்ய வேணும். வருவியா சரன்? ”

“என்ன சித்திரவேல் விசர்க்கதை கதைக்கிறாய்? நான் இல்லாமல் உன்ர மகனுக்குக் கல்யாணமே. கட்டாயம் வருவன். ஊர்ப்பக்கம் வந்து மூண்டு வருஷமாகுது. வீட்ட வந்து நிண்டா எனக்கு ஒரு மாதத்திற்குச் சாப்பாடு போடுவியே”

அவர் மனைவி இறந்த பிறகு, ஊருக்குப் போவதை அவர் மெல்ல மெல்லக் குறைத்துக் கொண்டிருந்தார். அந்த மண்ணை மிதிக்கும்போது அவருக்கு மனைவி ஞாபகம் வரும். கடைசி மகளுக்கு தானிருந்த வீட்டை எழுதிக் கொடுத்து விட்டார். அதை அவர் மகள் சென்ற வருடம் விற்று விட்டு, இலண்டனில் ஒரு வீட்டை வாங்கியிருக்கிறாள். வாழ்ந்த வீடும் இல்லை. ஏனோ தெரியவில்லை. நீண்ட இடைவெளியின் பின்னர், மூன்று வருடங்களுக்கு முன்பு ஊர்ப்பக்கம் போகும் ஆசை வந்தது. அந்தப் பயணத்தில்தான் சித்திரவேலின் சந்திப்பு நிகழந்தது.

“ஒரு மாதம் இல்லை. நீ ஒரு வருஷம் நிண்டாலும் நான் வடிவாச் சாப்பாடு போடுவன். கல்யாணத்திற்கு நாள் குறிச்சதும் சொல்லுறன் சரன் ” தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது. இனம்புரியாத மகிழ்ச்சி மனதை நிறைக்க, வீட்டை நோக்கி நடந்தார் சரன்.... (தொடரும்...)

# இத்தாலி நிலநடுக்கம்




(ரோம்)

இத்தாலியின் மத்திய பகுதியில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை, 250 ஆக உயர்ந்துள்ளது. ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான இத்தாலியின் மத்திய பகுதியில், கடந்த செவ்வாய்கிழமை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது ரிக்டர் அளவில், இது, 6.1 ஆக பதிவானது.

மலைப்பகுதிகள் நிறைந்த அக்கு மோலி, அமெட்ரிஸ் ஆகிய நகரங்களில், நிலநடுக்கத்தால் வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின் மக்கள் அலறி யடித்து ஓட்டம் பிடித்தனர். இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி, நேற்றும் தொடர்ந்தது. மலைப்பகுதியில் இருந்த பல கிராமங்கள், நிலநடுக்கத்தால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

அமெட்ரிஸ் நகரில், பிரபலமானஹோட்டல் இடிந்து விழுந்ததில், அதில் தங்கியிருந்த, 80 பேர், இடிபாடுகளுக்குள் சிக்கினர். தொடர்ந்து அங்கு, நில அதிர்வுகள் இருந்து வருவதால், மக்கள் சாலைகளிலேயே தங்கியுள்ளனர். கடும் குளிர் வாட்டுவதால், கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நிலநடுக்கத்தில் சிக்கி உயி ரிழந்தவர்களின் எண்ணிக்கை, 250 ஆக அதிகரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன் 368 பேர் காயமடைந்தனர் தொடர்ந்து, மீட்புப் பணிகள் நடக்கின்றன.

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## தமிழர்களை...

தொடர்பாக இதுவரை எதுவும் செய்யவில்லை. உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக அக்கறை செலுத்துகிறாரே தவிர ஏனைய விடயங்கள் தொடர்பில் கரிசனை எடுக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமாகிய இரா. சம்பந்தன் தமிழ் மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக முகம் கொடுப்பதில்லை. இதனால் வடக்கு கிழக்கில் அமைச்சர் ரிஷார்ட் பதியுதீனின் மற்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீமினதும் கையே ஓங்கியுள்ளது. இந்நிலை மாற வேண்டும் என்றே தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள்.

முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம் மக்களுக்காக உழைக்கட்டும். ஆனால் தமிழ் மக்களை மூன்றாம் தரப் பிரஜைகளாக மாற்றி அவர்களின் வயிற்றில் அடித்துப் பிழைக்க வேண்டாம்.

# விளையாட்டு

# ஒரே பார்வையில் ஒலிம்பிக் பதக்க விபரம்

Rio2016

ரியோ ஒலிம்பிக் போட்டிகள் இனிதே நிறைவடைந்துள்ளன. பதக்கப் பட்டியலில் அமெரிக்கா முதலிடம் பிடித்தது. உலகின் மிகப்பெரிய விளையாட்டான 31 ஆவது ஒலிம்பிக் போட்டி பிறேசிலின் ரியோ டி ஜெனீரோ நகரில் கடந்த 5 ஆம் திகதி கோலாகலமாக தொடங்கியது.

தென்அமெரிக்க கண்டத்தில் நடந்த முதல் ஒலிம்பிக்கான இதில் அகதிகள் குழு அடங்கலாக 206 நாடுகளை சேர்ந்த 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். 17 நாட்கள் நடந்தேறிய இந்த ஒலிம்பிக் திருவிழா கண்கவர் கலை நிகழ்ச்சிகளுடன் நிறைவு பெற்றது.

ரியோ ஒலிம்பிக்கில் முதல் நாளில் இருந்தே பதக்க வேட்டையாடிய அமெரிக்கா எதிர்பார்த்தது போலவே பதக்கப்பட்டியலில் "செஞ்சுரி" அடித்து முதலிடத்தை பிடித்து இருக்கிறது. அந்த நாடு 46 தங்கம் 37 வெள்ளி 38 வெண்கலம் என்று மொத்தம் 121 பதக்கங்களுடன் உலகின் முதற்தர அந்தஸ்தை எட்டியது.

இந்த முறை சீனாவை பின்னுக்கு தள்ளிய இங்கிலாந்து 27 தங்கம் 23 வெள்ளி 17 வெண்கலம் என்று 67 பதக்கத்துடன் இங்கிலாந்து 2 ஆவது இடத்தை பிடித்தது. 1908 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் இங்கிலாந்து முதலிடத்தை பெற்றிருந்தது.

அதன் பிறகு ஒலிம்பிக்கில் இங்கிலாந்தின் சிறந்த செயல்பாடாக இது அமைந்துள்ளது. சீனா 26 தங்கம் உட்பட 70 தங்கங்களுடன் 3 ஆவது இடத்தை பெற்றது. ஒலிம்பிக்கில் 36 ஆண்டுகளுக்குப் பிறகு பதக்கப் பட்டியலில் சீனாவை பின்னுக்குத் தள்ளியுள்ளது பிரிட்டன்.

அடுத்த ஒலிம்பிக் போட்டி 2020 ஆம் ஆண்டு ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடக்கிறது. ஒலிம்பிக் நிறைவு விழாவில் அடுத்த ஒலிம்பிக் நடைபெறவுள்ள ஜப்பான் நாட்டின் கலாசாரத்தை குறிக்கும் கண்கவர் கலை நிகழ்சிகளும், ஒலிம்பிக் பிறந்த கிரீஸ் நாட்டை கௌரவிக்கும் வகையிலான நிகழ்சிகளும் நடைபெற்றது.

ஒலிம்பிக் கொடியை ரியோ டி ஜெனிரோ நகர மேயர் எடுரோ பயஸ் இறக்கி வைத்து டோக்கியோ நகர ஆளுநர் யூரிகோ கொய்கோவிடம் ஒப்படைத்தார். சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தலைவர் தாமஸ் பாஷ் போட்டிகளை நிறைவு செய்து வைத்தார். இறுதியாக ஒலிம்பிக் ஜோதி முறைப்படி அணைக்கப்பட்டு ஒலிம்பிக் 2016 போட்டிகள் யாவும் நிறைவுக்கு வந்தன.

Medal Table


| | | 2016 | | | HISTORICAL | |
|---|---|---|---|---|---|---|
| Rank | Country | Gold | Silver | Bronze | | |
| 1 | United States (USA) | 46 | 37 | 38 | 121 | ▼ |
| 2 | Great Britain (GBR) | 27 | 23 | 17 | 67 | ▼ |
| 3 | China (CHN) | 26 | 18 | 26 | 70 | ▼ |
| 4 | Russian Federation (RUS) | 19 | 18 | 19 | 56 | ▼ |
| 5 | Germany (GER) | 17 | 10 | 15 | 42 | ▼ |
| 6 | Japan (JPN) | 12 | 8 | 21 | 41 | ▼ |
| 7 | France (FRA) | 10 | 18 | 14 | 42 | ▼ |
| 8 | Republic of Korea (KOR) | 9 | 3 | 9 | 21 | ▼ |
| 9 | Italy (ITA) | 8 | 12 | 8 | 28 | ▼ |
| 10 | Australia (AUS) | 8 | 11 | 10 | 29 | ▼ |



சிமொன் தங்கம்
அமெரிக்கா 4
ஜிம்னாஸ்ரிக் வெண்கலம்
1



பெல்ப்ஸ் தங்கம்
அமெரிக்கா 5
நீச்சல் வெள்ளி
1




உசைன்போல்ட் தங்கம்
ஜமேக்கா 3
தடகளம்

## வெற்றிக்கு முன்னதான சிரிப்பு



உசைன் போல்ட், ரியோ ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற செய்தியை விடவும், இணையத்தில் வைரலாகப் போனது ஒரு படம் ஒலிம்பிக் 100 மீ ஓட்டத்தில், உசேன் உட்பட எல்லா வீரர்களும் எல்லைக் கோட்டைப் பார்த்து சீறிப்பாய்ந்து ஓடிக்கொண்டிருக்க, போல்ட் ஒரு விநாடிக்கும் குறைவான நொடியில், பின்னால் திரும்பி தனது போட்டியாளர்களைப் பார்த்து, வெற்றியை உணர்ந்து உதிர்த்த அந்தப் புன்னகை, இந்த ஒலிம்பிக்கின் அதிசிறந்த தருணங்களில் ஒன்றானது. இன்று வரை மீம்ஸ் மேல் மீம்ஸாக சமூக வலைதளங்களில் அந்த புகைப்படம் பரவிக் கொண்டே இருக்கிறது. அந்த மின்னல் தருணத்தை படம் பிடித்தவர், கெட்டி இமேஜஸ் நிறுவனத்தின் புகைப்படக் கலைஞர் கேமரூன் ஸ்பென்சர்.

அந்த மைதானத்தில் மட்டும் சுமார் 600 புகைப்படக் கலைஞர்கள் இருந்தனர். அத்தனை பேரின் லென்சும் உசேன் போல்ட்டை நோக்கித்தான் இருந்தது. போட்டித் துவங்குவதற்கு முன்னரே சரியாக 70-வது மீற்றரில் நின்று கொண்டு, அவர் அந்த இடத்திற்கு அங்கு வந்து ஒரு நொடி, திரும்பி, மெதுவாக சிரிப்பார் என யாருமே நினைக்கவில்லை. அதை என்னால் நம்பவே முடியவில்லை. போட்டியில் அவர் ஓடுவதை வைத்து சிறந்த புகைப்படம் ஒன்று எடுக்க வேண்டும் என்று மட்டும்தான் நினைத்தேன். ஆனால் அவரை போட்டோ எடுத்துவிட்டு எனது கேமராவைத் திரும்பி பார்க்கும் வரை அவர் என்னைப் பார்த்து சிரித்ததை கவனிக்கவே இல்லை. கேமராவைப் பார்க்கும் போதுதான் அதனை உணர்ந்தேன். நிஜமாகவே நான் அதிர்ஷ்டசாலி என்கிறார்!

ஸ்பென்சர், இதற்கு முன்னர் எடுத்த எத்தனையோ புகைப்படங்கள் வைரல் ஆகியிருக்கின்றன. அதில் இதுவும் ஒன்று. போல்ட்டின் 2008 மற்றும் 2012 ஒலிம்பிக்கிலும் ஸ்பென்சர் கலந்து கொண்டு போட்டோ எடுத்திருக்கிறார். ஸ்பென்சருக்கு இது 5 ஆவது ஒலிம்பிக். போல்ட் ஓடுவதைப் படம் பிடிப்பதற்காக, Canon 1D X Mark II கேமரா, 70-200mm லென்ஸ், 135mm போகஸ், ஷட்டர் ஸ்பீட் 1/40 th of a second என பக்காவாக ரெடியாகி, நின்றிருக்கிறார் ஸ்பென்சர்.




## ஒலிம்பிக்கில் காயப்பட்ட வீரர்கள்

உலகமே ஆரவாரத்துடன் மகிழ்ச்சியாகக் கொண்டாடிய ரியோ ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் இனிதே நிறைவடைந்துவிட்டன. நாம் ஒலிம்பிக்கின் சந்தோஷமான நிகழ்வுகளைக் கொண்டாடிய அதே நேரத்தில்தான், சில மோசமான நிகழ்வுகளும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு அரங்கேறின.

அவற்றுள் சில...

சமீர் எய்ட் ( Samir Ait )



ஆண்ட்ரானிக் கராபெட்யன் (Andranik Kara petyan)

இரண்டாவது வாய்ப்பின்போது 195 கிலோ பளு தூக்கும் போட்டியில், எடையைத் தூக்கிய ஆர்மேனிய வீரரான ஆண்ட்ரானிக் கராபெட்யன்க்கு இடது கை முறிந்தது.

கிம் மைக்கேல் (Kim Mickle)

அவுஸ்திரேலிய வீராங்கனையான கிம் மைக்கேல்க்கு ஈட்டி எறிதலின் கடைசி தகுதி சுற்றுப் போட்டியின் போது வலது பக்க தோல்பட்டை விலகியது.

டால்கட் இலியாசவ் (Talgat Ilyasov)

ஆஸ்திரேலிய வீரரான இவர், மல்யுத்தப் போட்டியில் ஆக்ரோஷமாகச் சண்டையிட்டபோது கைப்பகுதியின் மூட்டு விலகியது.

யோகன் டினிஸ் (Yohann Diniz)

பிரான்ஸ் வீரரான யோகன் டினிஸஜீக்கு வயிற்றுப்போக்கு இருந்தபோதும் 50 கி.மீ ஓட்டப்போட்டியில் கலந்துகொண்டார். எனினும், வயிற்றுப்போக்கினால் ஏற்பட்ட சக்தி குறைபாடால் நிலைதடுமாறிக் கீழே விழுந்தார்.

ரசிகர்கள் பலத்த காயம்!

மகிழ்ச்சியாக விளையாட்டைக் கண்டுகளித்த ரசிகர்களின் மேல் 65 அடி உயரத்தில் சுற்றுத்திரிந்த ஸ்பைடர் கேமரா அறுந்து விழுந்தது. இதில், ஏழு ரசிகர்கள் படுகாயம் அடைந்தனர். மேலும், சில ரசிகர்கள் லேசான காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.



தினச்செய்தி
என்றும் உங்களுடன்






# மீண்டும் யாழில் அலுமினிய பாத்திர உற்பத்தி ஆரம்பம்

1968 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட "எலிபன்ட் மெற்றல் அன்ட் அலுமினிய வேக்ஸ்," என்ற அலுமினிய தொழிற்சாலை மீண்டும் இரண்டு வாரங்களுக்கு முன்னர் அம்பனை தெல்லிப்பளையில், இந்திய முதலீட்டாளர் ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அலுமினியத் தொழிற்சாலையை 1968 ஆம் ஆண்டளவில் வி. சண்முகலிங்கம் உருவாக்கினார். 1989 ஆம் ஆண்டு யுத்தத்தினால் இடம்பெயர்வு நடந்ததை அடுத்து இந்த தொழிற்சாலை மூடப்பட்டது.

மீண்டும் 2008 ஆம் ஆண்டு தொடங்கிய இந்த தொழிற்சாலை தொடர்ந்து நடத்துவதில் நிதி நெருக்கடி ஏற்பட்டது. அதையடுத்து டி. திலகராஜ் என்ற பிரபல இந்திய முதலீட்டாளரிடம் இந்த தொழிற்சாலை கையளிக்கப்பட்டு மீண்டும் இந்த மாதம் 13 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாயிற்று.

திரு. திலகராஜ் அவர்கள் மதுரை, சென்னை ஆகிய இடங்களில் இதே போல் மெற்றல் உற்பத்தி செய்யும் 25 கம்பனிகளை நடத்தி வருகின்றார். அது மாத்திரமல்லாது கொழும்பில் "ரவர் பிறாண்ட்" என்ற ரி.எம்.ரி. கம்பிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றையும் கடந்த 4 வருடங்களாக நடத்தி வருகின்றார்.

இந்த அலுமினிய உற்பத்திக்கு தேவையான பழைய அலுமினிய பொருட்கள் அச்சுக்கூடங்களில் உள்ள லித்தோ சீற்றுக்கள் மற்றும் பழைய அலுமினிய பாத்திரங்கள் இலங்கை மின்சார சபை கேள்வி பத்திரங்கள் மூலம் விற்கப்படும் வயர்கள், கம்பிகளை கொள்வனவு செய்து இந்த அலுமினிய பொருள் உற்பத்தி நடைபெறுகின்றது.


ஒரு காலத்தில் 100 தொழிலாளர்களை கொண்டு இயங்கிய இந்த அலுமினிய தொழிற்சாலை மீண்டும் ஆரம்பமாகி தற்போது 30 தொழிலாளர்களுடன் இயங்கி வருகின்றது. மீண்டும் இந்த தொழிற்சாலையில் 100 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக இந்த தொழிற்சாலையை நடத்தி வரும் நிர்வாகி செல்வி. சண்முகலிங்கம் தயாபரி தினச்செய்திக்கு கூறினார்.

சண்முகலிங்கம் தயாபரி இந்த அலுமினிய உற்பத்திக்கு புதியவர் அல்ல. இவரது தகப்பனார் வைத்தி சண்முகலிங்கம் தான் 1968 ஆம் ஆண்டு இந்த அலுமினிய தொழிற்சாலையை ஆரம்பித்தார்.

இந்த உற்பத்திகள் சம்பந்தமாக செல்வி தயாபரி தினச்செய்திக்கு மேலும் கூறுகையில் 1000 கிலோகிராம் எடையுள்ள பழைய அலுமினியத்தை உருக்கினால் 600 கிலோகிராம் எடையுள்ள அலுமினிய சீற்றுக்கள் தான் தேறும். இன்றைய நிலையில் வடமாகாணத்தில் இருக்கும் ஒரே ஒரு அலுமினிய தொழிற்சாலை இதுவே ஆகும்.











முன்னர் தெல்லிப்பளையில் டொலர் அலுமினிய தொழிற்ச்சாலை இருந்தது. யுத்த காரணத்தினால் மூடப்பட்டுள்ளது. மூடப்பட்ட தொழிற்சாலை இதுவரை திறக்கவில்லை.

தற்சமயம் இந்த தொழிற்சாலை சட்டி, பானை, இட்லிச் சட்டி, புட்டுப் பானை, புட்டுக் குழல் என 25 வகையான பொருட்களை அலுமினியத்தில் உற்பத்தி செய்கின்றது. மொத்தமாக 40 வகையான அலுமினிய பொருட்கள் இந்த தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் என கூறினார்.

இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஒகஸ்ட் 27, 2016 அன்று வெளியிடப்பட்டது.